Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 04 திங்கட்கிழமை (18.06.2012) பக்கங்கள் 20 ஓசை - 261

Tilko Jaffna City Hotel

யாழ். நகரின் மத்தியில் புதுப் பொலிவுடன் முற்றிலும் குளிரூட்டப்பட்டது.

கோடைக்கால விலைக்கழிவு ஜூன் 30 வரை மட்டுமே

ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் விசேட விலையில் BBQ

தொடர்பு: 0771064385 0776943479 70/6, K.K.S. Road, JAFFNA (C/1615)



06



11



12




18



14

# பரிந்துரைகளை அமுல்படுத்த நட்பு நாடுகளும் வலியுறுத்து



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு பரிந்துரைத்துள்ள விடயங்களை அமுல்படுத்துமாறு இலங்கைக்கு ஆதரவான நட்பு நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளின் போது இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்த மற்றும் வாக்களிப்பில் கலந்து கொள்ளாத இலங்கையின் நட்பு நாடுகள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளன.

எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்னர் நாட்டில் முன்னேற்றம் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என அந்த நாடுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இலங்கைக்கு தொடர்ச்சியாக ஆதரவளிக்க வேண்டுமாயின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வேண்டுமென குறித்த நட்பு நாடுகள் அரசாங்கத்திடம் கோரியுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித்

19 ஆம் பக்கம் பார்க்க

## அச்சுவேலி நிமலராஜன் பிரிட்டனில் அடித்துக் கொலை



(கொழும்பு)

பிரித்தானியாவின் லெஸ்டர் பகுதியில் கடந்த பலவருடமாக வசித்து வந்த .அச்சுவேலியைச் சேர்ந்த ஜேம்ஸ் பொன்னுத்துரை நிமலராஜன் என்பவர், கடந்த 9 ஆம் திகதி இனந்தெரியாதோரின் தாக்குதலுக்குள்ளாகி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த நபர் கடந்த 9 ஆம் திகதி இரவு 11.00 மணியளவில் கடையில்

19 ஆம் பக்கம் பார்க்க

## தூதுவரின் கருத்திற்கு விமர்சனம் அமெரிக்கா கடும் கண்டனம்

(கொழும்பு)

இலங்கைக்கான புதிய தூதுவராக அமெரிக்கா நியமித்துள்ள மைக்கல் சிசன் தெரிவித்த கருத்தை விமர்சித்த, வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகமவிடம் அமெரிக்கா கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

இலங்கையில் நல்லிணக்க முயற்சிகள் மெதுவாகவே இடம்பெறுகின்றன. மனிதஉரிமை மீறல்கள் குறித்து விசாரிக்கப்படவில்லை என்று புதிய தூதுவராக நியமனம் பெற்ற பின்னர், செனட வெளிவிவகாரக் குழு முன்பாக, மைக்கல் சிசன் கூறியிருந்தார்.

அவரது இந்தக் கருத்து தனிப்பட்டது. தனிநபர்களின் கருத்துக்களை அரசாங்கம் கருத்தில் எடுப்பதில்லை. இராஜாங்கத் திணைக்களத்தின் கருத்தையே

19 ஆம் பக்கம் பார்க்க

## காணி சுவீகரிப்பை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்

### அமைச்சர் டக்ளஸ் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

காணி சுவீகரிப்பை தடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வலி. வடக்கு மக்களின் நம்பிக்கையை தீர்க்க வழி அமைக்கவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

வலி. வடக்குப் பகுதியில் தமது காணிகள் சுவீகரிக்கப்படுவதை தடுத்து நிறுத்துமாறு கோரியும் தமது சொந்த இடங்களில் தம்மை விரைவாக குடியமர்த்துமாறு தெரிவித்தும் வலிகாமம் வடக்கு இடம்பெயர்ந்தோர் மீள் குடியேற்றக் குழு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளித்த மகஜரைப் பெற்றுக் கொண்ட அமைச்சர் மேற்கண்ட உறுதிமொழியை அளித்தார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று மு.ப. 11.00 மணியளவில் அமைச்சரைச் சந்தித்த குழுவினர் தமது மகஜரைக் கையளித்ததுடன் கலந்துரையாடலையும் மேற்கொண்டனர்.

வலிகாமம் வடக்கு இடம்



பெயர்ந்தோர் மீள்குடியேற்றக் குழுவினர் சார்பாக வலி. வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அங்கத்தவர்கள் 25 பேர் வலிகாமம் வடக்கு காங்கேசன்துறை, ஊறணி, மயிலிட்டி, மயிலிட்டி வடக்கு, பலாலி

19 ஆம் பக்கம் பார்க்க

## காணி, பொலிஸ் அதிகாரம் மாகாண சபைக்கு வேண்டும்

### ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை கடுமையாக எதிர்த்து வந்த ஜே.வி.பி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிகள் மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிட்டு வருகின்றன.

13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் அடிப்படையில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை சில காலங்களுக்கேனும் மாகாணசபைகளுக்கு வழங்க வேண்டும்.

அந்த அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவதன் மூலம் அதனால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை கண்டறிய

19 ஆம் பக்கம் பார்க்க

## பொது எதிர்க்கட்சி அமைக்க பேச்சு நடத்தவுள்ள பொன்சேகா

(கொழும்பு)

பொது எதிர்க்கட்சி ஒன்றை அமைக்கும் வகையில் அரசாங்கத்தில் உள்ள நாட்டை நேசிக்கும் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருடன் சரத் பொன்சேகா பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக ஜனநாயக தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கொட்டகொட தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி ஆகிய கட்சிகளுடனும். மனோ கணேசன், விக்ரமபாகு

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைக்கு ஆதரவளித்த கியூபாவிற்கு நன்றி தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கியூப ஜனாதிபதி ரவுல் கஸ்ரோவை நேற்று முன்தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹவானா மாளிகையில் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துதல், சர்வதேச விவகாரங்கள் மற்றும் பிராந்தியத்தின் ஏனைய விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன் கல்வி, சுகாதாரம், விளையாட்டு மற்றும் தொழில்நுட்ப அறிவை பரிமாறிக் கொள்வது தொடர்பாகவும்

19 ஆம் பக்கம் பார்க்க

## பொது எதிர்க்கட்சி என்ற பெயரில் தற்காலிக தங்குமிடம் அவசியமற்றது

### என்கிறது ஜே.வி.பி.


(கொழும்பு)

தற்போது தேவைப்படுவது நடைமுறையில் உள்ள முறைமைகளுக்கு உதவி செய்யும் பொது எதிர்க்கட்சி என்ற பேரில் இயங்கும் தற்காலிக தங்குமிடங்கள் அல்ல என ஜே.வி.பி யின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பல்வேறு கொள்கைகளை கொண்ட, பொருளாதாரத்தை பல்வேறு கோணங்களில் காண்கின்ற, தேசிய பிரச்சினைக்கு பல்வேறு தீர்வுகளை முன்வைப்பவர்களை கொண்டு உருவாக்கப்படும் கலவைகள் அவசியமில்லை எனவும் திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# நயினை நாகபூசணிக்கு நாளை கொடியேற்றம்

(நயினாதீவு)

சரித்திரப் பிரசித்தி பெற்ற நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 05.07.2012 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவுடன் முடிவடையும்.

விசேட திருவிழாக்களாக எதிர்வரும் 23ஆம் திகதி இரவு முத்துச் சப்பரமும், 25ஆம் திகதி இரவு கைலாச வாகனத்தில் அம்பாள் சிவனுடன் சிவலிங்க சமேதராகக் காட்சி தருவதோடு, 27 ஆம் திகதி எழுந்தருளி அம்பாளுக்கு விசேட சங்காபிஷேகமும், 28ஆம் திகதி பகல் கைலைக் காட்சியும், இரவு திருமஞ்சமும், 29 ஆம் திகதி பகல் கருடன் சர்ப்ப பூசையும் இப்பூசைவேளை கருடன் ஆகாயத்தில் கோவிலைச் சுற்றி வட்டமிடும் அதிசயக் காட்சியும் இடம்பெறவுள்ளன.


முதலாம் திகதி இரவு சப்பரத் திருவிழாவும், இரண்டாம் திகதி காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் (அம்பாள், விநாயகர், முருகன் தெய்வங்களுக்கு தனித் தனியாக 3 தேர் ஆரோகணித்து வரும்) 3ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும், இரவு கொடியிறக்கமும், 4ஆம் திகதி இரவு பூங்காவனத் திருவிழாவும் பக்தி சிரத்தையுடன் நடைபெற்று திருவிழா இனிது நிறைவு பெறும்.

இத்திருவிழாக் காலங்களில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அம்பாளைத் தரிசிக்க வருவார்கள் என எதிர் பார்க்கப் படுகின்றது.

பக்தர்களின் நன்மை கருதி போக்குவரத்து வசதிகளை இ.போ.சபையின் யாழ்.சாலை, தனியார் போக்குவரத்துச் சேவை, நயினாதீவு படகுச் சேவையினரும் சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளதோடு, சுகாதாரம், குடிதண்ணீர், பாதுகாப்பு, மருத்துவ சேவை, அன்னதானம் போன்ற அனைத்து சேவையையும் வழங்க முறையே வேலணை பிரதேசசபை உப அலுவலகங்களான நயினாதீவு, புங்குடுதீவு, பிரதேச செயலகம், பொதுச் சுகாதாரப் பகுதியினர், பொலிஸார் கடற்படையினர், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர், காரைதீவு பாடசாலை மாணவர்களின் சாரணர் படையில் அமுத சுரபி அன்னதானச் சபையினர் ஆகியோர் சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளதாகவும், அம்மனைத் தரிசிக்க வரும் அடியார்கள் பெறுமதிவாய்ந்த தங்க ஆபரணங்கள் அணிந்து வருவதைத் தவிர்க்குமாறும், திருடர்கள், முடிச்சு மாறிகள் போன்றவர்களிடம் இருந்து களவு போவதைத் தவிர்க்கவும் என கோவில் அறங்காவலர் சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும்,

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் வரலாற்றிலேயே 24 மணித்தியாலங்களும் நயினாதீவுக்கு வழங்க 500 மெஹா வாட் வலுக்கொண்ட மின்பிறப்பாக்கி மூலம் கொடியேற்றத்தில் இருந்து மின் விநியோகம் வழங்க மின் பிறப்பாக்கியும் கொண்டு வரப்பட்டு தயார் நிலையில் இருப்பதாகவும் முன்னாள் வேலணைப் பிரதேசசபைத் தலைவரும், இன்னாள் பிரதேசசபை உறுப்பினருமான சி.ந.கருணாகர குருமூர்த்தி மோகன் தெரிவித்தார்.

## இந்திய அரசின் உதவித்திட்டத்தில் துவிச்சக்கர வண்டிகள் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

இந்திய அரசினால் வழங்கப்பட்ட துவிச்சக்கர வண்டிகளை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை 10 மணிக்கு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நல்லூர் பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிழ்வில், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு முயற்சி தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திர குமார், வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, இந்திய தூதர கத்தின் துணைத் தூதுவர் மகாலிங்கம் மற்றும் யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகே ஸ்வரி பற்குணராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கோப்பாய், நல்லூர், உடுவில் மற்றும் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் மீளக்குடியேறிய குடும்பங்களைச் சேர்ந்த குறிப்பாக பெண்களை தலைமைத்துவமாகக் கொண்டவர்கள், அங்கவீனர்களை உடைய குடும்பங்கள், பாடசாலை செல்லும் பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு இந்தச் துவிச்சக்கர வண்டிகள் முதற்கட்டமாக வழங்கப்பட்டன.

யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு ஆயிரத்து ஐநூறு துவிச்சக்கர வண்டிகள் ஒதுக்கப்பட்டு முதல் கட்டமாக இந்த துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பிரதேச செயலர் பிரிவுகள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ரீதியாக மேலும் ஒரு தொகுதி துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கிளிநொச்சிக்கு 2500, முல்லைத்தீவுக்கு 2500, மன்னாருக்கு 1700, வவுனியாவிற்கு 1800 சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளதாக இந்திய தூதரகத்தின் துணைத் தூதுவர் மகாலிங்கம் தெரிவித்தார்.

## ஒப்பந்த ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது




(யாழ்ப்பாணம்)

பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றுவதற்கென ஒப்பந்த அடிப்படையில் கணித, விஞ்ஞான பாடங்களைக் கற்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியால் வழங்கப்பட்டது.



யாழிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பட்டதாரிகளுக்கும் க.பொ.த. உயர்தரம் கல்வி கற்றவர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டது. இதில் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சந்தியசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## விளையாட்டு விழா

வலி.தென்மேற்கு பிரதேச சண்டிலிப்பாய்க் கோட்ட முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு அல்லாத விளையாட்டு மழலைகள் விழா இன்று பிற்பகல் 2.00 மணிக்கு மானிப்பாய் மொமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் சண்டிலிப்பாய்க் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் திருமதி யோ.கேமநளினி தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் க. முரளிதரன், சிறப்பு விருந்தினராக வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபையின் செயலாளர் திருமதி புஸ்பமலர் சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (104)

நூலக விழிப்புணர்வுச் செயற்பாட்டின் தொடர் நிகழ்வுகளில் ஒன்றாக சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொது நூலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கைதடி மேற்கு சன சமூக நிலையத்தின் கீழ் இயங்கும் பராசக்தி பாலர் பாடசாலையில் நடைபெற்ற சிறார்களுக்கான புத்தகக் கண்காட்சியில் நூலகப் பொறுப்பாளர் க.மகேஸ்வரன் விளக்கமளிப்பதையும், சிறார்களுக்கான நிகழ்வில், ஆசிரியர் கதை கூறுவதையும், அலுவலகப் பொறுப்பதிகாரி சி..பத்மநாதன் மற்றும் உத்தியோகத்தர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட சிறார்களையும் காணலாம்.

வரணி - சிட்டிவேரம் கண்ணகைஅம்மன் அலய வருடாந்த இரதோற்சவம் நேற்று முன்தினம் நடைபெற்றபோது அங்கு விஜயம் செய்த வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி பக்தர்களுடன் இணைந்து தேர் வடம் பிடிப்பதையும், அடியார்கள் கற்பூரச்சட்டி எடுப்பதையும், உலங்குவானூர்தியிலிருந்து அம்பாளுக்கு பூமாலை பொழிவதையும் காணலாம். (படம்: நந்தகுமார்)

### கிளிநொச்சி மாவட்டத்தில்

# மீள்குடியேறி 3 வருடங்கள் பூர்த்தி 75 வீதம் பேர் வீட்டுத்திட்டமின்றி அவதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் மீள்குடியேறி 3 வருடங்கள் கழிந்துள்ள நிலையில் இம் மக்களுக்கான வீட்டுத்திட்ட வசதிகள் 25 சதவீதமே பூர்த்தியடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து தற்காலிக குடிசைகளை அமைத்து வாழ்ந்து வரும் இம்மாவட்ட மக்களில் பல குடும்பங்கள் வீட்டுத்திட்ட வசதிகள் வழங்கப்படாமல் பெரும் கஷ்டத் தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றன.

குறிப்பாக உதயநகர், விவேகானந்த நகர், செல்வநகர், அறிவியல் நகர் கிராமங்களில் முதற்கட்டமாக மீள்குடியமர்ந்துள்ள மக்களுக்கே முழுமையான வீட்டுத்திட்ட வசதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

அடுத்தடுத்த கட்டமாக மீள்குடி யேறிய மக்களுககு முழுமையான வகையில் வீட்டுத்திட்ட வசதிகள் வழங்கப்படவில்லை எனவும் சேதமடைந்த வீடுகளை புனரமைப்பதற்காக உதவிகள் வழங்கப்பட்டதாகவும் மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

வீட்டுத்திட்ட வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அவ்வக் கிராம சேவையாளர்களூடாகப் பதிவுகளை மேற்கொண்டுள்ளதாகவும், அதற்கான பிரதிபலன் தமக்கு இதுவரை கிடைக்கவில்லை எனவும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதேவேளை இங்கு உலக வங்கி மற்றும் இந்திய வீட்டுத்திட்டம் தவிர்ந்த ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படுகின்ற வீட்டுத்திட்டங்களும் மாவட்ட செயலகத்தினூடாக முன்னெடுக்கப்படுவதால் அவை தாமதமாவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏ-9 வீதிக்கு அருகாமையிலுள்ள கிராம மக்களும் இதுவரை வீட்டுத்திட்ட வசதிகள் வழங்கப்படாமல் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

அன்றாடம் கூலி வேலை செய்து வாழ்வாதார ரீதியாக வாழ்ந்து வரும் நாம், வீடு கட்டுவதற்கான வசதிகள் இல்லாத நிலையில் இந்த வீட்டுத்திட்ட வசதிகளை எதிர் பார்த்திருப்பதாகவும், மிகவும் பின்தங்கிய நிலையில் வாழும் மக்களுக்கும் வீட்டுத்திட்ட வசதிகள் வழங்கப்பட வேண்டும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (77)

# பாரதி ஸ்ரீதர் இலங்கைக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

இந்திய தமிழக ராஜ் தொலைக்காட்சிப் புகழ் பாரதி ஸ்ரீதர் இம்மாத இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்கிறார். இலங்கையின் பல பகுதிகளுக்கும் செல்லவுள்ள இவர் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கும் செல்லவுள்ளார்.



யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் நிகழ்வுகளிலும் கலந்து கொள்வார். ஆன்மீக நிகழ்வுகள், பெண்கள் எழுச்சி நிகழ்வுகள் உட்பட பல நிகழ்வுகளிலும் பங்குபற்றுவார்.

இவர் பொது மக்களையும் சந்தித்துக் கலந்துரையாடுவார். இவரைத் தொடர்புகொள்ள மணவை.அசோகன், 0723289998 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொளள லாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(நேற்று வெளியான செய்தியில் தொலைபேசி இலக்கம் பிழையானதாகும்.) (01)

# முன்னறிவித்தலின்றி தடைப்படும் மின்சாரத்தால் அசௌகரியம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது சீரான மின் விநியோகம் இன்மையால் மக்கள் அசௌகரியங்களை எதிர்நோககி வருகின்றனர்.

முன்னறிவித்தலின்றி அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதால் அன்றாடம் செயற்பாடுகள் பாதிகப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் மாணவர்களின் கலவி நடவடிக்கைகளும் பாதிக்கப்படுவதுடன், மின்சாதனங்களும் பழுதடையும் நிலை காண்ப்படுவதாக தெரிவிக்கும் மக்கள் முன்னறிவித்தல் வழங்கப்பட்டால் இவ்வாறான நிலை ஏற்படுவதை தவிர்த்துக் கொள்ளலாம் என அம்மக்கள் தெரிவிக்கின்றனர். (77)

# பட்டதாரிகளுக்கான நேர்முகத்தேர்வு

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு இன்று திங்கட் கிழமை வவுனியா மாவட்டச் செயலகத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இம் மாவட்டத்திலுள்ள சகல பட்டதாரிகளும் உரிய ஆவணங்களுடன் தவறாது வருகை தரவேண்டும். வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் இச் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு வவுனியா மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கப் பிரதித் தலைவர் த.ரஜினிகாந்த் தெரிவித்துள்ளார். (எஸ்)

# மக்கள் வங்கியினால் பாடசாலைக்கு உதவி



(சுன்னாகம்)

சுன்னாகம் மக்கள் வங்கியினால் ஏழாலை சைவசன்மார்க்க வித்தியால வகுப்பறைகளுக்கு மாபிள் பதிப்பதற்காக 50 ஆயிரம் ரூபா நிதியை வழங்கும் நிகழ்வு, கடந்த வெள்ளிக் கிழமை பகல் பாடசாலை மண்டபத்தில் அதிபர் செல்வி நவரத்தினம் பிரதா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் யாழ்ப்பாணம் பிராந்திய முகாமையாளர் எஸ். பத்மநாதன் கலந்துகொண்டு பணத்தை பாடசாலை அதிபரிடம கையளித்தார். இந்நிகழ்வில் சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் ப.பார்த்தீபன் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் உட்பட ஆசிரியர்கள் மாணவர்களும் கலந்து கொண்டார்கள்.

# சூழல் மாசடையும் வகையில் குப்பை போடுவோர் மீது நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரப்பகுதியில் சுற்றுச் சூழல் மாசடைவதற்கு ஏதுவாக சூழலை அசுத்தமாக வைத்திருப்போர் ஒழுங்கு விதிகளை மீறி சூழலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் குப்பைகள் கொட்டுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுககப்படும் என யாழ் மாவடட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவிததுள்ளார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

யாழ். நகரப்பகுதியில் சூழல் மாசடைவதற்கு ஏதுவாக குப்பைகளைப் போட்ட 6 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ் நகரின் பல்வேறு இடங்களில் குப்பைகளை கொட்ட வேண்டாம் என அறிவித்தல் பலகை போடப்படும் அவ்விடத்தில் குப்பை கொட்டப்படுவது தவறான விடயமாகும்.

அத்துடன் வெளியான பிரதேசங்களில் குறிப்பாக வெளியான நிலையில் உள்ள காணிகளிலும் குப்பைகள் கொட்டப்படுவதால் அவற்றை கால்நடைகள் மேலும் அசுத்தமாக்கிச் சூழல் பாதிப்புக்கான வழிவகைகளை ஏற்படுத்தி வருகின்றன.

இவ்வாறான செயற்பாடுகள் குறித்துப் பொதுமக்கள் சிந்தித்துச் செயற்படவேண்டும். குப்பைகளை உரிய வகையில் அழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இவ்வாறு சுற்றுச்சூழல் மாசடைவதைத் தடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (எஸ)

# சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பொதுமக்கள் பாதுகாப்புக் குழுக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். மாவட்ட செயலக அரச அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதேச செயலாளர்கள், தவிசாளர்கள், பொது அமைப்புக்கள், திணைக்களப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எஸ்)

# பனம் உற்பத்திகள் விலைச்சரிவு

(வரணி)

தென்மராட்சிப் பகுதியில் கடந்த காலங்களில் அதிக விலையில் விற்பனை செய்யப் பட்ட புழுக்கொடியல், ஒடியல் என்பன இந்த வருடத்தில் மிகவும் விலை வீழ்ச்சி அடைந்திருப்பதைக் காணமுடிகிறது.

தற்போது புழுக்கொடியல், ஒடியல் சந்தைகளில் கிலோ 80 ரூபாவாக வியாபாரிகளால் கொள்வனவு செய்யப்படுகிறது. கடந்த காலங்களில் ஒரு கிலோ புழுக்கொடியல் 400 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (150)

விட்டுக் கொடுங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.
தட்டிக் கொடுங்கள் தவறுகள் குறையும்.
மனம் விட்டுப் பேசுங்கள் அன்பு பெருகும். -பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## மற்றவர்கள் மீதான துவேசம்!

அண்மையில் சீமானின் 'நாம் தமிழர்' கட்சி வெளியிட்டிருக்கும் அதனுடைய கட்சி யாப்பை பார்க்கக் கிடைத்தது. 'ஈழத் தமிழர் போராட்டத்தினை அடுத்த கட்டம் நோக்கி முன்னெடுப்பவர்கள் தாம் மாத்திரமே' என்று அடையாளப்படுத்தி இந்த ஆவணத்தை வெளியிட்டிருக்கிறது சீமானின் கட்சி. அதாவது, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்டிருக்கின்ற வெறுமையை உடைத்தெறியப் போவது நாம் தமிழர் கட்சி என்கின்றது ஆவணம்.

அந்த ஆவணத்தில் 3வது முரண்பாடு எனும் தலைப்பில் "தமிழியத்திற்கும் முகமதியத்திற்கும், தமிழியத்திற்கும் கிறித்தவத்திற்கும் இடையிலான முரண்பாடு" என்று ஒரு அத்தியாயம் வருகிறது. "முகமதியமும் கிறித்தவமும் தமிழ்த் தேசியத்தை ஒவ்வொரு காலத்தில் ஆளுமை செலுத்தியவை. சட்டப் பாதுகாப்பும் சொத்துடமை வலுவும் பன்னாட்டுப் பின்புலமும் கொண்டு மத வழித் தனி இனக்கட்டுமானம் கொண்டவை. முகமதியத் தமிழரும் கிறித்தவத் தமிழரும் தங்களுடைய முதன்மை அடையாளம் தமிழ்த் தேசிய அடையாளமே என்றுணர்ந்து வருவராயின் நட்பு முரண் வகையிலும் அல்வழிப் பகைமுரண் வகையிலும் இடம் பெறுவர். இவர்கள் எச்சரிக்கையோடும் விழிப்போடும் அன்போடும் கையாளவேண்டிய தரப்பினர்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தம்மை 'புலிகளின் அரசியல் தொடர்ச்சி' என்றும் 'தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்டிருக்கின்ற வெற்றிடத்தை உடைத்தெறிய வந்தவர்கள்' என்றும் அலங்கார வார்த்தைகளை அள்ளி இறைக்கும் நாம் தமிழர் கட்சி ஆவணம், தமிழ்த் தேசிய அடையாளத்துக்குள் வராதவர்களை வெறுப்போடு வெளியிலேயே நிறுத்தி வைக்கிறது. வெளியே நிற்பவர்கள் மீது வெறுப்பை விதைக்கும் வார்த்தைகளைக் கொட்டுகிறது. தமிழர்கள் மானத்தோடு வாழ, முதலில் எதிரிகள் பட்டியலையே தயாரிக்கிறது.

தமிழ்த் தேசியம் என்பது சைவத் தமிழ்த் தேசியம்தான் என்று பகிரங்கமாக அறிவிக்கிறது. பிற சமயத்தவர் மீதும், பிற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் மீதும் வெறுப்பை உமிழும் மராட்டிய மாநிலத்து சிவசேனா போலவே தமிழ்நாட்டிலும் தீவிரத் தமிழ்த் தேசியர்கள் பிறர்மீது கொலைவெறியையே கக்குவார்கள் என்பதை உறுத்தலின்றி முரசறைகிறது.

இவர்களது ஆவேச ஆதரவு கண்டே நம்மவர்களும் புல்லரித்துக் கொண்டிருந்தால், நம்மிடம் என்ன நியாயம்தான் மிஞ்சும்? மொழிப் பாசிச இனவாதிகளாகத்தான் நாமும் படுபிற்போக்குச் சாக்கடைக்குள் வீழ்ந்து கிடப்போம்.

இத்தகைய பிற்போக்குத்தனமான தேசிய வீராவேசத் தினவுகளுக்காகவும் மற்றும் வாக்கு அரசியல் வியாபார லாபங்களுக்காகவும் மக்களை வதைபடத் தூண்டுவதில் என்ன நியாயம் இருக்கிறது? இவர்களே மக்களின் அவலங்களுக்காகக் கண்ணீர் சிந்துவது போலவும் வெதும்பிக் குமுறுவது போலவும் காட்டி ஏமாற்றி வருவதில் என்ன உண்மை இருக்கிறது? வன்முறையைத் தூண்டிவிட்டு, பலியாகும் உயிர்களுக்காக விடுதலை வியாக்கியானங்களோடு முந்திக்கொண்டு கண்ணீர் உகுப்பது தானே இவர்களது தமிழ் வீரமும் தமிழ் நேயமுமாக இருந்தது, இருக்கிறது?

வன்முறையும் ஆவேசமும் பழியுணர்ச்சியும், மற்றவர்களை நிராகரிக்கும் ஏகப்பெருமிதங்களும், இணங்கிப் போவதில் இசைவின்மையும், அவநம்பிக்கையும் நம்மை வாழச் செய்வதற்குரிய வழிகளைத் தேர்ந்துகொள்ளத் தடையாக இருப்பவை. மீண்டும் மீண்டும் அழிவுச் சுழலுக்குள்ளேயே நம்மைக் கொண்டு சேர்ப்பவை.

நம் மனோபாவத்தின் அடிப்படைகளை மாற்றிக் கொள்ளாமல் நாம் மீட்சி பெற முடியாது. வீம்பும், பகையுணர்வும், முட்டாள்த்தனமான ரோசங்களும் நம் சமூகத்தை மேலும் மேலும் சிதைத்துவிடுவதற்கே உதவும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

- ஆசிரியர் -

# அவுஸ்ரேலியக் கனவு: நடுக்கடலில் மரணம்

## சிட்டி மோர்னிங் ஹெரால்ட்

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவில் பிரஜாவுரிமை பெற்று மகிழ்ச்சியோடு வாழ்க்கை நடத்தலாம் என்ற போலி வாக்குறுதிகளை நம்பி இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக படகுகளில் அவுஸ்ரேலியாவுக்குச் செல்பவர்கள் நடு வழியிலேயே மரணத்தைத் தழுவிக் கொள்கிறார்கள் என்று சிட்டி மோர்னிங் ஹெரால்ட் பத்திரிகை செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

தென்னிந்தியாவிலுள்ள ஆட்களைக் கடத்திச் செல்லும் ஒரு சர்வதேச மோசடிக் கும்பல் இலங்கையிலுள்ள தமிழ் அகதிகளை ஏமாற்றி பெருமளவு பணத்தை சூறையாடி வருவதாகவும் இப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்து சமுத்திரத்தின் ஊடாகப் பாதுகாப்பாக அவுஸ்ரேலியாவுக்கு அழைத்துச் சென்று அந்நாட்டு பிரஜாவுரிமை பெற்றுக்கொடுப்போம் என்று இந்தக் கடத்தல் மோசடிக் குழு அப்பாவிப் பொதுமக்களுக்கு உறுதியளிப்பதாகவும் இப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் சுமார் 50 இலங்கை அகதிகளை ஏற்றிச் சென்ற இரண்டு படகுகள் இந்தியாவின் தென்பகுதியிலுள்ள கடலில் காணாமல் போயின.

மெல்போர்னிலுள்ள லொயலா கல்லூரியின் சமூகப்பணித்துறையின் பேராசிரியரான டாக்டர் லக்ஷ்டன் சேவியர், தென்னிந்தியாவிலிருக்கும் அகதிகளே இவ்விதம் ஏமாற்றப்பட்டு மோசடிக்குள்ளாக்கப்படுகிறார்கள் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய மண்ணில் காலடி எடுத்து வைத்தவுடன் அவர்களுக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்படும் என்று இந்த ஆட்கடத்தல் கும்பல் மக்களை நம்பவைக்கின்ற போதிலும் அங்கு சென்ற இலங்கைத் தமிழர்கள் அவுஸ்ரேலிய வெளியுறவுப் பிரிவினரால் சுமார் 4 வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் பேராசிரியர் மேலும் தெரிவித்தார்.

கடந்த ஆறு மாத காலத்தில் இலங்கையிலிருந்தும் தென்னிந்தியாவிலிருந்தும் பல படகுகளில் மக்கள் அவுஸ்ரேலியாவுக்குச் சட்டவிரோதமான முறையில் சென்றுள்ளார்கள்.

இவ்வாண்டில் இதுவரை 708 இலங்கையர் இந்தியாவிலிருந்து படகுகள் மூலம் அங்கு சென்றிருக்கிறார்கள். கடந்த ஆண்டில் இவ்விதம் 211 பேர் வந்திருப்பதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெயர்ந்த சுமார் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் தமிழ் மக்கள் 65 நாடுகளில் அரசியல் புகலிடம் கோரி விண்ணப்பித்திருப்பதாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் நடத்திய மதிப்பீட்டின்மூலம் தெரியவந்துள்ளது.

# ராஜ் ராஜரட்ணத்துடன் நிதி மோசடி; ரஜத் குப்தா குற்றவாளியாக அறிவிப்பு

(வவுனியா)

அமெரிக்க பங்குச் சந்தையில் தனது நண்பரும் இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த பங்குத் தரகருமான ராஜ் ராஜரட்ணத்துடன் இணைந்து உள் பேர வர்த்தகத்தில் ஈடுபட்ட அமெரிக்க வாழ் இந்தியரும் கோல்ட்மென் சேக்ஸ் நிறுவனத்தின் முனனாள் இயக்குனருமான ரஜத் குப்தா குற்றவாளி என நியூயோர்க் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இதையடுத்து அவருக்கு 25 வருட சிறைத் தண்டனை கிடைக்கும் சூழல் உருவாகியுள்ளது.

அமெரிக்கப் பங்குச் சந்தைகளில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் நிதி விவரங்கள் குறித்து உள் தகவல்களை (Insider trading) அறிந்து 75 பில்லியன் டொலர்கள் மோசடி செய்ததாக ராஜ் ராஜரட்ணம் மீது குற்றம் சுமத்தப்பட்டு அவருக்கு 11 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த மோசடியில் ராஜரட்ணத்துக்கு உதவியதாக ரஜத் குப்தா மீதும் அமெரிக்கப் புலனாய்வு அமைப்பினர் வழக்குப் பதிவு செய்தனர். ரஜத் குப்தா தான் பணியாற்றிய கோல்ட்மென் சேக்ஸ், புராக்டர் அண்ட் கேம்பிள், பெர்க்சைர் இன்வெஸ்ட்மென்ட், மெக்கிங்ஸ்லி நிதி நிறுவனம் ஆகியவற்றின் நிதி விவரங்களை கலியோன் ஹெட்ஜ் பண்ட் நிறுவனரான ராஜரட்ணத்துக்கு அளித்துள்ளார்.

இதை அடிப்படையாக வைத்து ராஜரத்தினம் இநத நிறுவனத்தின் நிதி நிலைமை சரியாக இருக்கும் போது பங்குகளை வாங்கிக் குவித்தார். இவற்றின் நிலைமை சரிந்தபோது பங்குகளை விற்றுவிட்டார். இதன்மூலம் ராஜரட்ணம் பல பில்லியன் இலாபம் அடைந்தார்.

ஆனால், பங்குச் சந்தையில் மற்ற முதலீடடாளர்களுக்கு ஏராளமான நஷ்டத்தை ஏற்படுத்தினார். இதற்காக ரஜத் குப்தா உள்ளிட்டோருக்கு ராஜரட்ணம் ஏராளமான பணத்தை இலஞ்சமாகக் கொடுத்துள்ளார்.

# எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டால் மக்களைத் திரட்டிப் போராடுவோம்

## வரியிறுப்பாளர் சங்கம் எச்சரிக்கை

(வவுனியா)

மக்களின் நலனுக்கு எதிரான வவுனியா நகரசபையின் செயற்பாடுகளை உடன் நிறுத்தாவிட்டால் மக்களை ஒன்று திரட்டி நகர சபைக்கு எதிராக போராடுவதைத் தவிர வேறு வழி எமக்குத் தெரியவில்லை என வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கத்தினர் வவுனியா நகரசபைத் தலைவர் மற்றும் உபதலைவருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளனர்.

அவர்களது கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வவுனியா குருமண் காட்டுச் சந்தியில் பல வருடகாலமாக மக்களுக்கு மிகவும் பிரயோசனமாக காணப்பட்ட பஸ் தரிப்பு நிலையமானது தனியார் வஙகியொன்றினால் இடிக்கப்பட்டு மிகவும் சிறிய தகரத்திலான மூவர் மட்டுமே நிற்கக்கூடியதாக தற்காலிக தரிப்பிடம் அமைக்கப்பட இருப்பதாக அறிகின்றோம்.

மேலும் பழைய பஸ்தரிப்பு நிலையத்தினை இடிப்பதற்கு நகரசபை அனுமதி வழங்கியுள்ளதாகவும் அறிகின்றோம். எனவே மக்களுக்கு பயன் தரக் கூடிய பழைய கட்டடத்தினை இடிப்பதற்கு அனுமதிக்க வேண்டாம் என மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மக்களின் நலனுக்கு எதிரான நகரசபையின் இச் செயற்பாடுகள் உடன் நிறுத்தாவிட்டால் மக்களை ஒன்று திரட்டி நகர சபைக்கு எதிராக போராடுவதைத் தவிர வேறு வழி எமக்கு தெரியவில்லை. உடனடியாக இக் கட்டட இடிப்பு செயற்பாட்டை நிறுத்துமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இக் கடிதத்தின் பிரதிகள் வவுனியா அரசாங்க அதிபர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், வவுனியா நகரசபை செயலாளர் மற்றும் உறுப்பினர்களுக்கும பிரதியிடப்பட்டுள்ளது. (160)

# மெகா கோப் சிற்றி வவுனியாவில் திறப்பு

(வவுனியா)

வவுனியா பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தினால் அமைக்கப்பட்ட வவுனியாவில் மெகா கோப் சிற்றி நேற்று திறந்து வைக்கப்பட்டது.

வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட இவ் மெகா கோப் சிற்றிக்கு அரசாங்கத்தினால் நிதியுதவி வழங்கப்பட்டிருந்தது.

வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிஷாட் பதியுதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மெகா கோப் சிற்றியினைத் திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் ஜனாதிபதியின் இணைப்பாளர் சிவநாதன் கிசோர், நகரசபை உறுப்பினர் பாரி, கூட்டுறவு சமாசங்களின் தலைவர் சுப்பிரமணியம், சி.க. கூட்டுறவுச்சங்கத்தின் தலைவர் சேனாதிராஜா, ஆளுநரின் பிராநதிய ஆணையாளர், அமைச்சரின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (160)

# வலைஞர்மடம்–செபமாலை தேவாலயம் போரின் இறுதி நாட்களில்......

**- ஆனந்தன்**

மார்ச் 2009. வலைஞர்மடத்தில் உள்ள செபமாலை மாதா தேவாலயத்தைச் சுற்றிவளைத்துத் தங்கள் பிள்ளைகளைப் பொத்திக் காப்பதற்காக ஆயிரத்துக்கும் அதிகமான தாய்மாரும் தகப்பன்மாரும் சூழ்ந்தி ருக்கிறார்கள். எண்ணூறுக்கும் கூடுதலாக இளைஞர்களும் இளம் பெண்களும் அங்கே, அந்தத் தேவாலயத்தில் அடைக்கலம் தேடிச் சரணடைந்திருந்தனர்.

குளிப்பு, சாப்பாடு, தூக்கம் என்ற எதுவும் ஒழுங்காக இல்லை. அநேகமாக 13 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்களே அதிகம். எல்லோரும் தேவாலயத்திலும் தேவாலய வளவிலும் படுத்திருந்தார்கள். அங்கேயே சாப்பிட்டு, அங்கேயே மலம்கழித்தார்கள். அங்கேயே அவர்களுடைய இரவும் பகலும் வந்து போயின. தேவாலயத்துக்கு அப்பாலான உலகத்தை அவர்கள் பார்க்க விதியில்லை.

வெளியே போகமுடியாது. போனால், போர்க்களத்திற்குத்தான் போகவேணும். எனவே, தேவாலயமே சிறைவளாகமானது.

போர்க்களத்திற்கு போகலாம் என்றால், தேவாலயத்திற்கு வந்திருக்கத் தேவையில்லையே. தேவாலயத்திற்கு வந்ததே போர்க்களத்திற்கு போக முடியாது என்றபடியால் அல்லவா! அந்தக் கட்டத்தில் போர்க்களத்திற்கு போவதால் எந்தப் பயனும் இல்லை என்று அவர்கள் அறிந்திருந்தார்கள்.

களநிலவரம் மாறி படையினருக்கு வாய்ப்புகள் குவிந்த பின் போர்க்களத்திற்கு போவது சாவுக்கு ஒப்பானது. சாவுக்குத் தங்கள் தலையைப் பரிசளிக்க அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் மட்டுமல்ல விசயமறிந்த யாருமே விரும்பவில்லை. அதனால், தங்களை எப்படியாவது காப்பற்றுவதற்காகவே அவர்கள் பாடுபட்டார்கள்.

அதற்காகவே அந்தத் தேவாலயத்தில் சரணடைந்திருந்தார்கள். அதற்காகவே மாதாவுக்குத் தோத்திரம் சொன்னார்கள். அதற்காகவே அவளை வழிபட்டார்கள். இதிலே மதபேதங்கள் ஏதுமிருக்கவில்லை. நெற்றியிலே திருநீற்றைப் பூசி கொண்டே மாதாவின் முன் [illegible]லையில் மன்றாடினார்கள். சுருவத்தை வ[illegible]காத கிறிஸ்தவர்களும் மாதாவின் திருச்சுருவத்தின் முன்னே மன்றாடினர். "றைபிளை" ஏந்த முடியாதென்பதற்காக "பைபிளை" ஏந்தினார்கள் பலர். எல்லாமே போர்க்களத்திற்கு போகும் விதியை நிராகரிக்கும் படியான மன்றாட்டங்கள்.

தேவாலய வளாகத்தில் வன்னியின் அத்தனை கிறிஸ்தவ மதகுருமார்களும் ஒன்றாக இருந்தனர். தலைமை மதகுருவாக ஜேம்ஸ் பத்திநாதர் இருந்தார். கன்னியாஸ்திரியர்கள் இருந்தனர். மருத்துவர்களும் இருந்தார்கள். இன்னும் ஒன்றிரண்டு அரச அதிகாரிகளும் இருந்தனர். அருகே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உள்ளூர் பிரதிநிதிகள் இருந்தார்கள். எல்லோருக்கும் தேவாலயம் ஒரு பாதுகாப்பான சூழல் என்ற எண்ணம். மதகுருக்களும் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும் மருத்துவர்களும் அதிகாரிகளும் அங்கே இருப்பதால் தேவாலயத்திற்கு வந்து கட்டாயமாக போருக்கு பிடித்துச் செல்ல வாய்ப்பிருக்காது என்றே பெற்றோர் நம்பினர். பிள்ளைகளும் அப்படியே நம்பினார்கள். பெரும்பாலும் எல்லோரும் அவ்வாறே நம்பினார்கள்.

அது பிள்ளை பெறாதோரும் பால் கொடாதோரும் மகிழ்ந்திருந்த காலம், அவர்கள் மட்டுமே ஓரளவுக்கு நிம்மதியாக இருந்த காலம். மற்றும்படி பிள்ளைகளைப் பெற்றவர்கள் எல்லாம் நித்திரையையும் சந்தோசத்தையும் தொலைத்திருந்த காலம். ஒரு வாய் சோற்றை, ஒரு கிண்ணம் கஞ்சியை உள்ளுக்குள்ளே இறக்க முடியாமல் அந்தரித்த காலம். போதாக்குறைக்கு தலைகளைக் கொண்டு போகும் படையினரின் தாக்குதல்களும்.

கண்ணுக்கு முன்னே பிள்ளைகள் கதறக் கதற இழுத்துப் போர்க்களம் கொண்டு போகப்பட்ட நாட்கள் அவை. அப்படிக் கதறக் கதறக் கொண்டு போகப்பட்டவர்கள் இரண்டு அல்லது மூன்று நாள் பயிற்சியின் பிறகு போர்க்களத்தில் விடப்பட்டு நான்காம் நாளோ ஐந்தாம் நாளோ பிணமாகக் கொண்டு வரப்பட்ட நாட்கள் அது.

பயிற்சிக்குப் போகாமலே பலியானோரும் உண்டு. பயிற்சியில் பலியானோரும் உண்டு. இந்த நிலையில் எந்தத் தாய் தன்னுடைய பிள்ளையை போருக்கு அனுப்புவாள்? எந்தத் தந்தை தன்னுடைய புதல்விக்கோ புதல்வனுக்கோ நெற்றியில் வெற்றித் திலகமிடுவான்? எனவே, பலபெற்றோர் அந்தத் தேவாலயத்தைச் சுற்றி, மாதாவைச் சுற்றிக் காவல் இருந்தார்கள்.

அன்று வன்னியில் யாரும் புறநானூற்றுக் காலத்திற்குப் போகவிரும்பவில்லை. படையினர் கண்ணுக்கு முன்னே, கூப்பிடு தொலைவில் நிற்கிறார்கள். படையினரை விரட்டுவதற்காக ஒரு காலத்தில் தீரமாகப் போர் தொடுத்தவர்களில் சிலர் தரப்பாள் கூடாரங்களில் தலைமறைவாகியிருந்தார்கள். அவர்களைத் தேடி புலிகளின் படையணிகள், ஒலிபெருக்கிகளில் வலைவீசித் திரிந்தன. புதிய போராளிகளைச் சேர்ப்பதற்கு முதல் பழைய போராளிகளைத் தேடிச் சேர்க்க வேண்டியிருந்தது.

இந்த நிலையில், புதிதாக போருக்குப் போக யார் தயார்? அதைவிட இன்றோ நாளையோ என்ற மாதிரி மிஞ்சியிருக்கின்ற அந்த சிறிய கடலோர நிலத்துண்டையும் படையினர் பிடித்துவிட தயாராகி நின்றபோது, முற்றுகை இறுகியபோது, சண்டையிட யார் துணிவார்?அதிலும் புதியவர்கள்?

அதனால், இவர்கள் எல்லாம் தேவாலயத்தில் சரணடைந்திருந்தார்கள். 800க்கும் அதிகமான இளைஞர்களும் இளம் பெண்களும் இரவு பகலாக அங்கேயே இருந்தார்கள். கொளுத்தும் வெய்யிலிலும் கொட்டும் மழையிலும் அங்கேயே படுத்து எழும்பினார்கள். ஐந்து நாள் அல்லது எட்டு நாள் என்ற கணக்கில் வாய்க்கும்போது குளித்தார்கள். பசியும் மரணப் பீதியும் அவர்களை உறிஞ்சிக் கொண்டேயிருந்தது.

அப்போது ஒரு கதை திடீரெனஉலாவியது. "தேவாலயத்திற்குள் இறங்கப் போகிறார்கள்" என்று. இந்தக்கதைவந்ததும் குருமார் சொன்னார்கள் தயவு செய்து எந்தப் பிரச்சினையும் வராமல் பார்த்துக் கொள் ளுங்கோ' என்று. அது ஒரு தெளிவற்ற வார்த்தை. பிடிகொடாத வார்த்தை என்பார்களே, அப்படியான ஒரு வார்த்தை. அந்த வார்த்தையை அவர்கள் ரகசியமாகப் புலிகளிடம் சொன்னார்கள்.

ஆகவே, எந்த நேரமும் அங்கே புலிகளின் முற்றுகை நடக்கலாம். அல்லது அந்த முற்றுகையை அடுத்து எந்த வேளையிலும் அங்கே படையினரின் எந்த மாதிரியான தாக்குதலும் நிகழலாம். எனவே, பதற்றம் அதிகரித்தது. பிள்ளைகளை எங்கே கொண்டு சென்று காப்பாற்றுவது என்று யாருக்கும் தெரியவில்லை. தாங்கள் இனியும் அங்கேயிருப்பது பாதுகாப்பாக இருக்குமா? என்று பிள்ளைகளுக்கும் தெரியவில்லை.

இதனால், கொஞ்சப் பேர் சந்தர்ப்பம் பார்த்து எப்படியோ இரவிரவாக வெளியேறி சனத்தோடு சனமாக வேறிடத்திற்கு சென்றுவிட்டார்கள். வெளியே செல்வது பாதுகாப்பில்லை என்றாலும் வருவது வரட்டும் என்று அவர்கள் போனார்கள். அதைவிட வேறுவழியில்லை. குறிவைக்கப்பட்ட இடத்தில் தொடர்ந்து இருப்பது அர்த்தமில்லை என்று அவர்கள் எண்ணினார்கள்.

ஆனாலும் பெரும்பாலானோர்கள் - ஏறக்குறைய 600க்கும் மேலானோர் - தேவாலய வளவிலேயே தங்கியிருந்தார்கள். அத்தனை மதகுருமாரையும் மிஞ்சி தங்களை அவர்கள் பிடித்துச் செல்லமாட்டார்கள் என்று அவர்கள் நம்பினார்கள். அப்படியே அவர்கள் எதிர்பார்த்தார்கள். அதைத் தவிர அவர்களுக்கு வேறு வழிகளில்லை. அவர்களுக்கு காவலாகப் பதற்றத்தோடும் இயலாமையோடும் பெற்றவர்கள் இருந்தனர், நெஞ்சிலே கலக்கத்தைச் சுமந்து.

எதிர்பார்த்தவாறே 25.03.2009 காலை 7.00 மணியிருக்கும். தேவாலயம் முற்றுகையிடப்பட்டது. ஒரு கணத்தில். ஒரேயொரு கணத்தில். அதிரடியான நடவடிக்கைகள். ஆரம்பித்தது தாக்குதல். முற்றுகையிடப்பட்ட தாக்குதல். ஏறக்குறைய 400க்கும் அதிகமானவர்கள் தாக்கினார்கள். தமிழர்களைத் தமிழர்களே தாக்கினார்கள். ஆயுதந்தாங்கியவர்கள், ஆயுதமில்லாதிருந்த நிராயுதபாணிகளைத் தாக்கினார்கள். போருக்கு அழைப்பவர்கள், போருக்கு அஞ்சித் தேவாலயத்திற் தஞ்சமடைந்திருந்தோரைத் தாக்கினார்கள். துப்பாக்கிச் சூடுகளால் தேவாலயத்தின் கூரை சிதைந்தது. நம்பிக்கைகள் சிதைந்தன. பாதுகாப்பு என்ற எண்ணம் சிதைந்தது. மதகுருக்கள் காப்பாற்றுவார்கள் என்ற எதிர்பார்ப்பும் சிதைந்தது. மாதாவும் கைவிட்டாள்? ஒரே அல்லோலகல்லோலம். சாவோலம். கத்தலும் கதறலும். வசையும் திட்டும்... கண்ணீரும் செந்நீரும்.. வயிற்றிலும் எரிந்தது நெருப்பு... நெஞ்சிலும் எரிந்தது நெருப்பு... கண்களிலும் எரிந்தது நெருப்பு... வரலாறே நெருப்பில் மூண்டெரிந்தது...

தரதரவெனவும் கொறகொறவெனவும் பிள்ளைகள் பிடித்துச் செல்லப்பட்டார்கள் சுற்றிவர நின்ற ஆட்பிடி வண்டிகளில் அவர்கள் தூக்கித் தூக்கி எறியப்பட்டனர். அள்ளி ஏற்றப்பட்டனர். பறந்து கொண்டேயிருந்தன வண்டிகள்.

மண் அள்ளித் திட்டினர் பல தாய்மார். எதிர்த்து, அடிவாங்கினர் தந்தையர். சில பிள்ளைகள் பிடித்தவர்களை தள்ளிவிட்டு பாய்ந்தோடினர். சிலர் மண்ணை அள்ளிக் கண்ணிலே தூவி விட்டுப் பறந்தார்கள். அது சனங்களால் நிறைந்த வளாகம். அகதிக் கூடாரங்களால் நிறைந்த பகுதி.

பிடிகாரர்களிடம் இருந்து தப்பினால் சனங்களிடம் கரைந்துவிடலாம்.ஆனால், தப்பவேணுமே! தேவாலயத்தின் மீது தாக்குதல் தொடர்ந்து கொண்டேயிருந்தது. சனங்கள் நிறைந்த பகுதியில் துப்பாக்கிச் சன்னங்கள் தலைக்கு மேலாக சீறிப் பாய்ந்தன. கையிலே பொல்லுகளும் தடிகளும் போதாக்குறைக்கு.

மதகுருமார் பதுங்குகுழிகளுக்குள் சரணடைந்தனர். இல்லையில்லை அங்கே மறைந்தனர். (வெட்கத்தினாலா? அல்லது கள்ளத்தனத்தினாலா?) மருத்துவர்கள்காணாமற்போயினர். சில மதகுருக்கள் அந்தச் சம்பவத்திற்கு உள்ளூர எதிர்ப்புத் தெரிவித்தபோதும் அவர்களையும் கடந்துவிட்டது எல்லாம்.

தேவாலயத்தின் சுவர்கள் துளையிடப்பட்டன. அங்கேயிருந்ததெய்வச் சொரூபமும்உடைந்து நொருங்கியது. ஆத்திரமடைந்த மக்கள் திட்டிக் கொண்டு போனார்கள்.வசை.கொடிய வசை. யாரும் கேட்க அஞ்சும்வசை. அப்படியான வசையை அன்றுதான் மாதாகேட்டாள். அவர்களால் அதற்கு மேல் எதுவும் செய்ய முடியவில்லை. துக்கத்தை அழுது தீர்ப்பது, கோபத்தைப் பேசித் தீர்ப்பது.

பெற்றோர்கள் மதகுருக்களையும் திட்டினார்கள். சிலர் அவர்களைக் கெஞ்சினார்கள். மன்றாடினார்கள். ஆனால், யாருடைய குரலுக்கும் அங்கே மதிப்பிருக்கவில்லை. எந்தத் தடுத்தலுக்கும் அங்கே இடமிருக்கவில்லை. அந்தத் துயர நாடகம் வெற்றிகரமாக ஆடப்பட்டுக் கொண்டேயிருந்தது.

குருதி ஒழுகக் குருதி ஒழுகக் கொண்டு செல்லப்பட்டனர் சிலர். தூக்கியெறியப்பட்டனர் சிலர். புழுதி மண்ணில் விழுந்து புரண்டாலும் விட்டுச் செல்லவில்லை அவர்கள். ஆட்பிடி வண்டிகள் பறந்துகொண்டிருந்தன. கத்தலையும் கதறலையும் மன்றாடலையும் அவை பொருட்படுத்தவில்லை.

யாராலும் எதுவும் செய்யமுடியவில்லை. முப்பது நிமிடத்திற்கு மேல் நடந்த அந்த நிகழ்ச்சி முடிவுக்கு வந்தபோது தேவாலய வளவுவெறிச்சோடிக் கிடந்தது. காயப்பட்டவர்கள் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர். கிழிந்த உடைகளும் உடைந்த பாத்திரங்களும் அங்கே சிதறிக்கிடந்தன. 500க்கு மேற்பட்டவர்கள் அங்கே பிடித்துச் செல்லப்பட்டதாக சொல்லப்பட்டது.

பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர் பித்துப்பிடித்துக் கதறினார்கள். ஒரு பழிவாங்கும் நாடகம் அங்கே நடத்தப்பட்டதாக வந்தவர்களைப் பற்றிச் சனங்கள் கதைத்தார்கள்.

எல்லாம் முடிந்த பின் மதகுருக்கள் வெளியே வந்தனர். குற்றமும் அவமானமும் நிரம்பிய வெளிறிய முகத்துடன் அவர்கள் அந்தக்காலைப் பொழுதை எதிர்கொண்டனர். சனங்கள் ஆயிரமாயிரம் கேள்விகளைக் கேட்டனர். முறையிட்டுக் கதறினர். திட்டித் தீர்த்தனர். மன்றாடினர். காறி உமிழ்ந்தனர்.

எதற்கும் எந்தப் பதிலும் இல்லை. அது பதிலில்லாமல் கேள்விகளாகவே இருந்த நாட்கள். அந்தக் கணமும் அப்படித்தான் இருந்தது.துக்கப்பட்டு அழுவதைத் தவிர வேறெதுவும் செய்வதற்கு இல்லை. அழுகை கேவலாகி, விசும்பலாகி ஒடுங்கியது. பிறகு பெருமூச்சு. இந்த வானத்தையே எரித்து விடுமளவுக்கு அனல் பெருகிய பெருமூச்சு.

கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு 2009 ஆண்டுகள் கழிந்து விட்டன என்கிறது சரித்திரம். ஆனால், அவர் சனங்களின் பாடுகளுக்காகத் தன் தலையில் முள் முடியேற்றார். தன்னுடலில் சிலுவையை ஏற்றார். தன்னுயிரையே சிலுவைக்குஒப்புவித்தார். ஆனால், இந்தச் சனங்களுக்காகச் சிலுவையேற்பதற்கு அங்கே இன்னொருகிறிஸ்து இருக்கவில்லை.

இதையும் அந்தச் சரித்திரமேசொல்கிறது. இந்தச் சரித்திரத்தின் மீது சனங்கள் மண்வாரித் தூற்றினார்கள்.

- நன்றி: எதுவரை இதழ்-02



# அரசாங்க ஊழியர்களுக்கு தீர்வையற்ற வாகன அனுமதி

(கொழும்பு)

பெரும் எண்ணிக்கையான சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கு தீர்வையற்ற வாகன இறக்குமதிக்கான அனுமதியை அரசாங்கம் வழங்கவுள்ளது.

2007 ஆம் ஆண்டிலிருந்து தீர்வையற்ற வாகனங்களை பெறாத சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரும் சுற்றுநிருபமொன்றை நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் பி.ஏ. டயஸ் கையெழுத்திட்டு அனுப்பியுள்ளார்.

அரச ஊழியர்கள் அனைவரும் ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை தீர்வையற்ற வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

இவ்வருடம் பிரதேச சபைகளின் தவிசாளர்கள் மாகாண சபை உறுப்பினர்களுக்காக வாகனங்களை இறக்குமத செய்வதற்கு அரசாங்கம் 2.6 பில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிட்டதாக திறைசேரியின் சிரேஷ்ட அதிகாரியொருவர் கூறினார்.

2010 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தீர்வையற்ற வாகன பெறுமதியின் உச்சவரம்பை அரசாங்கம் 35,0000 டொலர்களிலிருந்து 50,000 டொலர்களாக அதிகரித்தது.

அரச ஊழியர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் 25,000 டொலர்கள் வரை பெறுமதியான வாகனங்களை தீர்வையின்றி இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுவர் என மேற்படி அதிகாரி கூறினார்.

அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாவின்பெறுமதி நேற்று 130.55 ரூபாவாக இருந்த நிலையில் இந்த வாகனங்களுக்கான தீர்வை நீக்கம் பொருளாதாரத்திற்கு மேலும் சுமையை ஏற்படுத்தும். அந்நிய செலாவணி கையிருப்பு 5.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த வருடம் இத்தொகை 7 பில்லியனாக இருந்தது

# வட மாகாணத்தில் பூகோள ஆய்வு

வட மாகாணத்தின் பூகோள தன்மைகள் தொடர்பாக அவதானிக்கும் விசேட வேலைத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. என புவி சரிதவியல் மற்றும் தொல்பொருள் அகழ்வு பணியக தலைவர் என்.பி. விஜயானந்த தெரிவித்துள்ளார்.

கடந்த யுத்த காலப்பகுதியில் நிலவிய இயல்பற்ற சூழ்நிலைகள் காரணமாக வட மாகாணத்தின் பூகோள தன்மையை அவதானிக்க முடியாது போனது. இந்த நிலையில், தற்போது சிறந்த பூகோள தன்மையை கண்காணிக்க உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் வட மாகாணத்தின் புவி சரிதவியல் கண்காணிப்பு மத்திய நிலையம் ஒன்று ஸ்தாபிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நாட்டிற்கு சுமையாக இருக்கக் கூடாது

நாட்டின் பொருளாதார தரத்தை கட்டியெழுப்ப முடியாதென்றால் தொடர்ந்தும் நாட்டிற்கு சுமையாக இருக்காது தற்போதைய அரசாங்கம் விலகிக் கொள்ள வேண்டும். சந்திரிகாவின் ஆட்சியில் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை எமது ஆட்சியில் மூன்று மாதத்தில் நிலைப்படுத்தினோம் என்று ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற விஷேட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவவாறு தெரிவித்தார்.

அரசாங்கம் சுவீகரித்த பல தனியார் துறைகளும் இன்று படுமோசமான சிக்கல்களை எதிர்கொண்டுள்ளன. தேசிய சேமிப்பு வங்கியின் பங்குக் கொள்வனவு விடயத்தில் அப்பாவி மக்களின் சேமிப்பு கேள்விக் குறியாகியுள்ளது. நீதிமன்ற உத்தரவை மீறி பணிப்பாளர் சபையும் கலைக்கப்பட்டுள்ளது. எனவே அரசின் போக்கு ஆபத்தானதாகவே அமைந்துள்ளது.

ஊழல் மோசடிகள் நிறைந்த தற்போதைய அரசாங்கம் உடனடியாக விலகிக் கொள்ள வேண்டும். பொது மக்களின் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. அமைச்சரவையில் தலைக்கு தலையை ஆட்டி விட்டு வெளியில் வந்து அமைச்சர்கள் கோஷம் எழுப்புகிறார்கள்.

பொது மக்களுக்கும், ஊடகங்களுக்கும் முன்னால் சிறந்த நடிப்பை அமைச்சர்கள் வெளிப்படுத்துகின்றனர். உலக சந்தையில் மசகு எண்ணையின் விலை அதிகரித்த உடனேயே உள்நாட்டில் எரிபொருட்களின் விலைகளை அதிகரித்துவிடும் அரசு, விலை குறையும் போது சட்டம் பேசுகின்றது. எனவே அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத் தேவைகளை ஒரு போதும் நிறைவேற்றாது என்றார

# விபசார விடுதி முற்றுகை

(தெஹிவளை)

தெஹிவளை - அபெஹன்சு மாவத்தையில் விபசார விடுதியொன்றை சுற்றிவளைத்த பொலிஸார் சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளனர். இதன்போது அங்கிருந்த ஐந்து பெண்களும் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். ஆயுர்வேத சிகிச்சை நிலையம் என்ற போர்வையில் இந்த விடுதி நடத்திச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

# இலங்கை குறித்த இரு அறிக்கை ஐ.நா.விடம் கையளித்த மன்னிப்புச்சபை

(கொழும்பு)

இலங்கை தொடர்பான இரண்டு அறிக்கைகளை சர்வதேச மன்னிப்புச்சபை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையிடம் சமர்ப்பித்துள்ளது.

இம் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் ஒரு அறிக்கையும், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள அமர்வுகளில் மற்றுமொரு அறிக்கையும் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசாங்கம் இல்லாதொழிக்கத் தவறியுள்ளதாகவும் இதனால் அடக்குமுறைகள் இடம் பெற்று வருவதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் கால மீளாய்வில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட உள்ளது.

தேசிய மனித உரிமைப் பேரவையின் சுயாதீனத் தன்மையை உறுதிப்படுத்தநடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும், குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்கப்படாத நிலைமை நீடிப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி மாற்றுக்கருத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், அரசியல் எதிரிகள் கால வரையறையின்றி சிறைகளில்தடுத்து வைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலவந்தமான கடத்தல்கள், காணாமல் போதல்கள், சித்திரவதைச்சம்பவங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகக்குறிப்பிட்டுள்ளது.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாமை இலங்கையில் தொடர்ந்தும் நீடித்தால், அரசாங்கம் அதனைத் தடுத்து நிறுத்தத் தவறினால் ஐக்கிய நாடுகள்அமைப்பு காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யுத்தத்தின் போது இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட குற்றச்செயல்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற விரிவான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென சர்வதேசமன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

# இலங்கை தேயிலைத் தேநீர் இலண்டனில் 5000 ரூபா

இரண்டாம் எலிசபெத், மகாராணியாக முடிசூடி 60 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளதை முன்னிட்டு லண்டனிலுள்ள கிழக்கு இந்திய கம்பனி என்ற நிறுவனம் விசேட தேயிலையொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

மகாராணியின் கணவரான இளவரசர் பிலிப்பினால் 1954 ஆம் ஆண்டு நுவரெலியாவின் பெட்ரோ தோட்டத்தில் நடப்பட்ட தேயிலைச் செடியிலிருந்து பறிக்கப்பட்ட தேயிலைக் கொழுந்துகளிலிருந்து இந்த தேயிலை உற்பூத்தி செய்யப்பட்டுள்ளது.

மேற்படி தேயிலை அடங்கிய 60 கிராம் பெட்டியொன்றின் விலை 75 பவுண்களாகும் (15000 ரூபா). இந்த தேயிலையினால் தயாரிக்கப்பட்ட ஒரு கோப்பை தேநீர் 25 பவுண்களுக்கு (ஐயாயிரம் ரூபா) விற்பனை செய்யப்படுகிறது.

இந்த தேயிலை தங்கம் மற்றும வெள்ளி நிறங்களில் அமைந்துள்ளதுடன் அதன் நீளமும் சாதாரண தேயிலையை விட அதிகமாகவே காணப்படுகின்றமை அதன் விசேட அம்சமாகும்.

வித்தியாசமானதொரு இனிப்புச் சுவையைக் கொண்ட இந்த தேயிலையினால் தயாரிக்கப்பட்ட தேநீரைப் பருகும் போது தொண்டைக்கு மிகவும் இதமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

# — கணினி மயமாகும் — மயானங்களின் விபரங்கள்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள மயானங்கள் தொடர்பான தகவல்கள் அடங்கிய கணினி தரவு தளமொன்றை அமைப்பதற்கு அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர். கல்லறைகளுக்கான இடங்கள் சட்டவிரோதமாக வேறு நபர்களுக்கு மாற்றப்படுவதை தடுப்பதே இதன் நோக்கமாகும். சுமார் 100 வருடங்களாக இவ்வாறான சட்டவிரோத பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு மாநகரசபையின் பிரதம மருத்துவ அதிகாரியான பிரதீப் காரியவசம் இது தொடர்பாக கூறுகையில், இந்நடவடிக்கை மூலம் உண்மையான உரிமையாளர்களை அதிக சிரமமின்றி கண்டறியலாம் என்றார்.

ஆயிரக்கணக்கான கல்லறை மனை உரிமையாளர்கள் மாநகரசபைக்கு அறிவிக்காமல் சட்டவிரோதமாக அவற்றை வேறு நபர்களுக்கு மாற்றியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சட்ட அதிகாரியின் அனுமதியைப் பெறுவதில் சரியான நடைமுறைகளை இவ்வுரிமையாளர்கள் பலர் பின்பற்றுவதில்லை என அவர் கூறினார். இவற்றை இடமாற்றுவோர் குறித்த மயானத்திற்குப் பொறுப்பானவர்களுக்கு அறிவிப்பதுடன் மாற்றங்கள் தொடர்பான ஆவணங்களை மாநகர சபையின் சட்ட அதிகாரியின் அங்கீகாரத்திற்காக அனுப்ப வேண்டும் எனவும் டாக்டர் காரியவசம் தெரிவித்தார்.

சில கல்லறை மனைகள் 100 வருடங்களுக்கு முன்னர் விற்கப்பட்டதாகவும் 1952 ஆம் ஆண்டின் பின்னர் கனத்தை பொது மயானத்தில் கல்லறை மனை எதுவும் கொள்வனவு செய்யப்படவில்லை. சட்டவிரோத பரிமாற்றங்கள் பல தசாப்தங்களாக நடைபெறுகிறது என அவர்கூறினார்.

# கூலி வீட்டில் வசிப்போருக்கும் வாக்காளராக பதியும் அதிகாரம்

(கொழும்பு)



கூலி வீட்டில் வசிப்போருக்கு வாக்காளர் விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெறவில்லை என பல முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதென பவ்ரல இயக்கம் தெரிவித்துள்ளது.

வாக்காளர் இடாப்பு திருத்தச் சட்டத்தின்படி ஜூன் 1ஆம் திகதி சாதாரண வசிப்பிடத்தை ஒருவர் உறுதிசெய்யும் பட்சத்தில் அவர் வாக்காளராக பதியக்கூடிய அதிகாரம் உடையவர் என அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கூலி வீட்டில் வசிப்பவர்களுக்கும் வாக்காளர் இடாப்பில் பதிவை மேற்கொள்ள அதிகாரம் உள்ளதென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது குறித்து கிராம சேவையாளர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டு கூலி வீட்டில் வசிப்போருக்கும் விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வடக்கில் அபிவிருத்தி திட்டங்களை அமைச்சர் டக்ளஸ் பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்ப் பாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா அவர்கள் வவுனியா கைத்தொழில்பேட்டை, புளியங் குளம் மாதிரிப் பனந்தோட்டம் கைதடி பனை ஆராய்ச்சி நிறு வனம், கைதடி உவர்நீர்த் தடுப் பணை ஆகியவற்றைப் பார் வையிட்டதன் பின்னர், யாழ். நகரின் பல்வேறு பகுதிகளுக் கும் விஜயம் மேற்கொண்டார்.



முன்பதாக வவுனியாவில் அமைந்துள்ள கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு சொந் தமான கைத்தொழில்பேட் டைக்கு விஜயம் மேற்கொண்டு அதன் நடவடிக்கைகள் தொடர் பிலும் புளியங்குளத்தில் அமைந் துள்ள பனை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான கற்ப கச்சோலை மாதிரிப் பனந் தோட்டத்துக்கும் விஜயம் மேற் கொண்டு அவற்றின் நடவடிக்கை கள் தொடர்பிலும் ஆராய்ந் தறிந்து கொண்டார்.

இதனிடையே கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் துறை சார்ந்த அதிகாரிகளுடன் கலந்து ரையாடிய அமைச்சர் அவர்கள், கைதடியில் புனரமைக்கப்பட்டு வரும் 'பனை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பனை வள ஆராய்ச்சி நிலையத் தையும் பார்வையிட்டார்.

அத் துடன் சுண்டிக் குளி பழைய பூங்கா வளாகத்தில் அமையப் பெற்றுவரும் பொழுது போக்கு மையத்தையும் கஸ் தூரியார் வீதியின் நவீன சந் தைக் கட்டடத் தொகுதியை யும் பண்ணைச் சந்திப் பகுதி யையும் அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

இதன்போது பனை அபிவி ருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரட்ணம், பொது முகாமையா ளர் லோகநாதன் மற்றும் யாழ். மாநகர மேயர் திருமதி யோ கேஸ்வரி பற்குணராஜா உள் ளிட்டோர் உடனிருந்தனர்.

# மருதங்கேணியிலுள்ள மதுபானக்கடையை வேறு இடத்திற்கு மாற்றக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி வாரிவட்டம் பிரதான வீதியில் அமைந்துள்ள கள்ளுத்தவறணையால் அப்பிரதேச மக்கள் சொல்லணா துன்பங்களை எதிர்நோக்கி வருவதாக மருதங்கேணி கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் மருதங்கேணி இ.த.க.வித்தியாலயம், உடுத்துறை மகா வித்தியாலயம் ஆகியன அமைந்துள்ளதுடன், இவ்வீதியை பெருமளவு பொதுமக்களும், மாணவர்களும் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணையில் மதுப் பிரியர்கள் மது அருந்திவிட்டு வீதியில நின்று பயணிகளை தகாத வார்த்தைகளால் பேசுவதுடன், சில அநாகரி கமான செயற்பாடுகளிலும் ஈடுபடுவதால் அவ்வீதியூடாக பயணம் செய்வோர் சிரமங்களுக்கு ஆளாகவேண்டியுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

குறிப்பாக இரவு வேளைகளில் மதுப்பிரியர்கள் மதுப்போத் தல்களுடன் வீதியில் கோஷ்டியாக நின்று மது அருந்துவதால் அவ்வீதியூடாக குறித்த வேளைகளில் மக்கள் குறிப்பாக பெண்கள் பயணம் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

அதிகளவிலான மக்கள் பயணம் செய்யும் இவ்வீதியுள்ள கள்ளுத்தவறணையை வேறு இடத்திற்கு மாற்றி மக்களின் அசௌ கரியங்களை போக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இச்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.


# வாக்காளர் படிவங்களை ஒப்படைக்குமாறு அறிவுறுத்து

(மண்டைதீவு)

மண்டைதீவு கிராமசேவை யாளர் பிரிவில் இதுவரை வாக் காளர் மீளாய்வுப் படிவங்க ளைப் பெற்று உரிய தகவல் களுடன் பூரணப்படுத்தி இது வரை சமர்ப்பிக்கா தவர்கள் அதை விரைவாகச் செய்து தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

பாசையூர் அந்தோனியார் திருநாள் பலி நவநாள் விழா மற்றும் பல காரணங்களால் தற் காலிகமாக ஊரை விட்டுச் சென்றவர்களும், புறநகர்ப் பகுதிகளில் வாடகை வீடுகளில் வசிபபவர்களும் இதுவரை படி வங்களை நிரப்பாதவர்கள் விண் ணபபப்படிவங்களை விரைந்து வழங்க வேண்டுமென J/7, J/8, J/9 கிராம சேவையாளர்கள் கோரியுள்ளனர். (23)

# பரமர் சங்கமம்



'தன் தொழில் விட்டவன் சாதியில் கெட்டவன்' எண்டொரு பழமொழி வழக்கில் இருந்தது. இப்போ அது வழக்கொழிந்து ...கி விட்டது.

...முப்பது வருட அனர்த்தங்களின பினப...த்தான் இடம் பெயர்வு, புலம்பெயர்வு என்ற நிலைமைகள் அபரிதமாகத் தோன்றின.

அதற்கு பல்லாண்டுகளுக்கு முன்பாகவும், இடப்பெயர்வுகளும், புலம்பெயர்வுகளும் நடைபெற்றுள்ளதை வரலாறுகளில் படித்து அறிகின்றோம்.

"திரைகடல் ஓடி திரவியம் தேடு" என்னும் முதுமொழிக்கேற்ப ஊர்விட்டு, நாடு விட்டு பிறதேசங்கள் சென்று உழைத்துவர அந்தக் காலங்களில் இடம், புலம் பெயர்ந்த நிலைமைகள் தோன்றின.

அதேவேளை எம்மவர் தமது இடங்களை விட்டு பிறதேசம் சென்று உழைக்கப் போக அங்குள்ளவர் எமது பிரதேசத்திற்கு வந்து உழைத்துப் போவதையும் கண்டுள்ளோம்.

"இக்கரைக்கு அக்கரை பச்சை" என்பது போல் மனித சமுதாயம் இடம் விட்டு புலம் விட்டு உழைக்கப் போனதால் நமது கிராமங் களில் எங்களின் பரம்பரை செய்து வந்த தொழிலைக் கொண்டு வரை யறுக்கப்பட்ட வகுப்பெனும் சாதி காலகெதியில் அழிந்து வருவதும் கண்கூடு.

யுத்த அனர்த்தம் காரணமாக புலம் பெயர்ந்த எம்மவர் பெரும் தொகையான மேற்கத்தைய நாடுகளில் நிரந்தர வாசிகளாக மாறி அந் தந்த நாடுகளின் ஆட்சி பீடங்களில் அங்கத்துவம் பெற்று ஆட்சிய திகாரங்களிலும் நுழைந்துள்ளனர்.

ஆரம்பத்தில் புலம் பெயர்வுகளை வெளிநாட்டவர்தான் எம் மவர்க்குக் காட்டிக் கொடுத்தனர். அவ்வழியைப் பின்பற்றி பயங் கரவாதம் வெல்லப் பட்டுள்ள இக்காலத்திலும் எவ்வித அனுமதியும் பெறாமல் களவாக அவுஸ்ரேலியாவுக்குப் படகுகளில் செல்கின்ற நிலைமை நீடித்துக் கொண்டிருக்கிறது.

தேசம் விட்டு தேசம் புலம் பெயரும் பறவை இனங்களைப் போன்றே மனிதர்களும் பூர்வீக இடங்களையும் தொழில்களையும் துறந்து அந் நியராகத் தேசங்கள் எங்குந் திரியப் பழகிவிட்டனர்.

எமது இனம், எமது மொழி, எமது கலாசாரம், பண்பாடு என்று கட்டுப்பாடு போடும் சிறு குழுமமே அதைத் தக்க வைக்கவும், கட்டிக் காக்கவும் இன்று வரையும் முயன்று கொண்டிருக்கின்றது.

"சாணேற முழம் சறுக்குவது போல்" ஒவ்வொரு இனங்களின் அடையாளங்களும் இடம் பெயர், புலம்பெயர் நிகழ்வுகளால் மாற்றமடைந்து புதிய சமுதாதாயம் தோன்றினாலும், மனிதன் என்ற ஒரு கூட்டம் உலகம் எங்கும் ஒன்றுதான் என்பதை மாற்றிவிட முடியுமா சொல்லுங்க பாப்பம்...

# மண்டைதீவில் வீதிப் புனரமைப்பு

(அரியாலை)

மண்டைதீவு கிராமத்தின் தெற்கு வீதிப் புனரமைப்பிற்கு "நெல்சிப்" அமைப்பு நிதி உதவி வழங்கியுள்ளது. திருவெண்காட்டுப் பகுதி யில் இருந்து 7ஆம், 8ஆம் வட்டாரங்களை ஊடறுத்துச் செல்லும் தெற்குவீதியைப் புனரமைப்பதற்கான நிதி அணுசரணையை யும் வேலைத்திட்டத்தையும் நெல்சிப் நிறுவனம் மேற்கொண் டுள்ளது.

இந்த வீதி கடற்கரையை அடைந்து பின் மேற்காக கடற் கரை ஓரமாக மண்டைதீவு மயா னப் பகுதியை அடைகிறது. இந்த வீதித்திருத்தத்தால் 6 ஆம், 7 ஆம், 8 ஆம் வட்டாரக் குடியி ருப்பாளர்களும், மயானத்தை பயன்படுத்தும் ஏனைய 5ஆம், 2ஆம், 1ஆம் வட்டரா மக்களும் பயனடைய உள்ளனர்.

இந்த வீதி இடம்பெயர்வுக்கு முற்பட்ட காலத்திலேயே தார் காணாத வீதியாகும். இந்த வீதிக கான நிதி மண்டைதீவு கொண் டகம் வீதிக்கு ஒதுக்கப்பட்டு திருத்த வேலைக்கான அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (23)

# 35 வருடங்களின் பின்னர் வீதியுலா வந்த கண்ணகை

வரணி வடக்கு அருள்மிகு சிமிழ் அம்மன் கிட்டத்தட்ட 35 வருடங்களுக்குப் பின்பு ஆல யத்தை விட்டு வெளியே காட் சியளித்தாள். தற்போது இவ் வாலயத்தில் வருடாந்த உற் சவம் நடைபெறும் அதே வேளை, கடந்த திங்கட்கிழமை அம்மன் ஆலயத்தை விட்டு வெளியேறி வடவரணி கிரா மத்துக்கு வீதி உலாவந்தாள். பலநூற்றுக்கணக்கான அடி யார்கள் அம்மனை தரிசிக்க வந்திருந்தார்கள். இவ்வால யத்தில் இத்தனை வருடமும் நித்திய பூசைகள் மட்டுமே நடைபெற்று வந்தமை குறிப் பிடத்தக்கது. (150)

# முரசின் இன்றைய பலன்

(18.06.2012 - திங்கட்கிழமை)

நந்தன வருஷம் ஆனி மாதம் 04ஆம் திகதி சதுர்த்தசி முன் இரவு 7.22 வரை.
நட்சத்திரம் ரோகிணி. முன் இரவு 10.52வரை. அமிர்த்த யோகம்.
இராகுகாலம் 7.24 - 8.54 வரை. சுபநேரம் 11.54 - 1.24வரை.
எமகண்டம் 10.24 - 11.54 வரை. குளிகைகாலம் 1.24- 2.54 வரை.
புதூர் நாகதம்பிரான் பொங்கல்

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | நினைத்தது பலிக்கும், மனதில்திருப்தி, சகோதரரால் உதவி, அதிகாரிகள் உதவுவர். |
| ரிஷபம் | தொழில்துறையில் மந்தம், கழன உழைப்பு கைகொடுக்கும், குறைவற்றபாராட்டுகள். |
| மிதுனம் | திடீர்நன்மை, குடும்பத்தில் சஞ்சலம், நீண்ட நாள் கனவு பலிதமாகும். |
| கடகம் | பெரியோர்ஆசி, முயற்சிகளில் கவனம், வாக்கு வாதங்களைத் தவிர்க்கவும். |
| சிம்மம் | நெருக்கடி தீரும், கால்நடைகளால் இலாபம், குடும்பத்தில் குதூகலம். |
| கன்னி | மனக்கவலைகள், வியாபாரத்தில் அதிக ரித்த இலாபம், மருத்துவச் செலவு |
| துலாம் | நிதானம்தேவை, கடன்சுமை அதிகரிக்கும், நெருக்கமானவர்களை அனுசரிக்கவும். |
| விருச்சிகம் | சந்தோசம், மனைவியால் மருத்துவச் செலவு, மதிப்பு உயரும். |
| தனுசு | செலவு அதிகரிக்கும், கொடுக்கல் வாங் கலில் இலாபம், ஒற்றுமை. |
| மகரம் | பொருள் விருத்தி, உடல் நலம்பாதிப்பு, குடும் பத்தில் ஏட்டிக்குப்போட்டி. |
| கும்பம் | கீர்த்தி உண்டாகும், தொடரும் இடைஞ்சல்கள், நாணயத்தைக் காப்பாற்றுவீர். |
| மீனம் | பிற்பகல் நன்று, பெற்றோர் ஆதரவு, சகோதர ரால் நன்மை. |



# ஜே.பி.எல். ருவென்ரி - 20 இறுதிப் போட்டியில் கே.சி.சி.சி

(யாழ்ப்பாணம்)

சாம்பவனின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் ஜே.பி.எல். ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு கொக்குவில் கே.சி.சி.சி. அணி தகுதி பெற்றுள்ளது.

ஜே.பி.எல். ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் முதலாவது அரை யிறுதிப் போட்டி நேற்றைய தினம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் ஜொலிஸ்ரார் அணியும் கொக்குவில் கே.சி.சி.சி.அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஜொலிஸ்ரார் அணி ஆரம்பம் முதலே பெரும் தடுமாற்றத்தை எதிர்கொண்டது. கொக்குவில் கே.சி.சி.சி. அணியின் சாம்பவனின் பந்து வீச்சை எதிர்கொள்ளத் திண-றிய ஜொலிஸ்ரார் அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 82 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. இதில் இதில் உமாகாந் 17 பந்துகளில் 24 ஓட்டங்களையும், கார்த்திக் 23 பந்துகளில் 19 ஓட்டங்களையும், அணித் தலைவர் சைலேஸ்வரன் 12 பந்துகளை எதிர்கொண்டு 30 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் சாம்பவன் நான்கு ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் அடங்கலாக ஒன்பது ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், சிலோஜன் 16 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும், ஜனுதாஸ் ஐந்து ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 83 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் கள மிறங்கிய கொக்குவில் கே.சி.சி.சி. அணி ஜெயரூபனின் சிறப்பான அதி ரடி ஆட்டத்தின் மூலம் இலகுவாக வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஜெயரூபன் ஆட்டமிழக்காது 36 பந்துகளை எதிர்கொண்டு நான்கு சிக்ஸர், நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 50 ஓட்டங்களையும், பங்குஜன் 18 பந்துகளில் 30 ஓட்டங்களையும், பிரகாஷ் 17 பந்துகளில் 19 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சங்கீத் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். போட்டியின் ஆட்டநாயகனாக சாம்பவன் தெரிவானார்.

(எஸ்.பி.)

## இறுதிப் போட்டியில் சாய்னா

(ஜகார்த்தா)

இந்தோனேசிய ஓப்பன் பட்மின்ரன் போட்டி யின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் விளையாட இந்திய வீராங்கனை சாய்னா நெஹ்வால் தகுதி பெற்றார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறு திப் போட்டியில் தென் கொரியாவின் சங் ஜி யுன்னுடன் மோதிய சாய்னா 22,20, 21,18 என்ற நேர் செட்களில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

## இங்கிலாந்து வெற்றி

மேற்கிந்தியத்தீவு அணிக்கெதிரான முதலா வது ஒரு நாள் போட்டியில் இங்கிலாந்து அணி அபார வெற்றிபெற்றது. இங்கிலாந்தின் சௌதாம்ப் டனில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி இயன் பெல்லின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண் ணிக்கையைப் பெற்றது. இறுதியில் இங்கிலாந்து அணி து 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப் புக்கு 288 ஓட்டங்கள் எடுத்தது. இதில் இயன் பெல் 126, ட்ரொட் 42, கீஸ்வெட்டர் ஆட்டமிழக்காமல் 38 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 289 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மேற்கிந் தியத்தீவுகள் அணி 23 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 127 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மழை குறுக்கிட்டது. இதையடுத்து டக்வொர்த் லூவிஸ் விதிப்படி 48 ஓவர்களில் 287 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் மேற்கிந்தியத் தீவுகள் 33.4 ஓவர்களில் 172 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவி யது. இதில் ஸ்மித் 56, சாமுவேல்ஸ் 30 ஓட் டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரெஸ்னன் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். ஆட்டநாயனாக இயன் பெல் தெரிவானார்.


## யூரோ கால்பந்து செக்குடியரசு வெற்றி

யூரோக் கிண்ணக் கால்பந்துப் போட்டியில் போலந்து அணிக்கெதிரான போட்டியில் செக்குடியரசு அணி வெற்றிபெற்றது. நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியின் ஆரம்பத்திலிருந்து கோல் பெறும் வாய்ப்புக்களை இரு அணிகளும் தவறவிட்ட நிலை யில் முதற்பாதி கோல்கள் பெறப்படாத பாதியாக அமைந்திருந்தது. முதற்பாதி 0-0 என்ற கணக்கில் முடிவடைய அடுத்த பாதி மிக முக்கியமானதாக மாறிப் போயிருந்தது.

இரண்டாவது பாதி ஆரம்பித்தும் கூட போட்டியில் முழுமையான விறுவிறுப்பு ஏற்படுமளவிற்குக் கோல்கள் பெறப்பட்டிருக்கவில்லை. போட்டியின் 72ஆவது நிமிடத்திலேயே போட்டியின் முதலாவதும், ஒரே கோலும் பெறப்பட்டிருந்தது. செக் குடியரசு அணி சார்பாக ஜிராசெக் அந்த கோலைப் பெற்றுக் கொடுத்து செக் குடியரசு முன்னிலை பெற உதவினார். அதன் பின்னர் இரு அணிகளும் கோல்களைப் பெற்றுக்கொள்ளத் தவற, போட்டி 1-0 என்ற கணக்கில் செக் குடியரசு வசமானது.

இப்போட்டியில் செக் குடியரசு அணியே பந்தை அதிகமாகக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த போதிலும், இரு அணிகளும் சம எண்ணிக்கையிலான கோல் போடும் வாய்ப்புக்களை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நேபால் கிரிக்கெட் தூதுவராக டோனி



(காட்மாண்ட்)

இந்திய கிரிக்கெட் அணி கப்டன் டோனி நோபாளத்தின் கிரிக்கெட் தூதுவராக நியமிக்கப்பட்டார். இந்திய எல்லைப்பகுதியான ஜம்மு காஷ்மீர் பகுதிக்கு சில நாட்களுக்கு முன்பு சுற்றுப்பயணம் மேற்கொண்ட டோனி, தற்போது நேபாள தலைநகர் காட்மாண்ட்டுவிற்கு தனது மனைவி சாக்ஷியுடன் சென்றுள்ளார். அவர் அங்குள்ள இளம் கிரிக்கெட் வீரர்களுடன் விளையாட்டு நுணுக்கங்களை பகிர்ந்து கொண்டார்.

பின், டோனி நேபாளத்தின் தூதுவராக நியமிக்கபட்டார். இது நேபாளத்தின் சுற்றுலா துறையின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவும் என்று நேபாள சுற்றுலா துறை தலைமை அதிகாரி சுபாஷ் நிரவ்லா தெரிவித்தார். இது குறித்து டோனி கூறிகை யில், கிரிக்கெட் தூதுவராக நியமித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இளைஞர்கள் படிப்பில் ஆர்வம் காட்டுவது போல விளையாட்டிலும் ஆர்வம் காட்ட வேண்டும் அது நாட்டின் வளர்ச்சிக்கு பெரிதும் கைகொடுக்கும். கிரிக்கெட் விளையாட்டு தற்போது நேபாளத்தில் சிறப்பான வளர்ச்சி பெற்று வருகிறது. விரைவில் சர்வதேச அரங்கில் ஒரு சிறந்த அணியை காண அதிக ஆவலாக உள்ளேன்.

எதிர்வரும் உலகக் கிண்ணப் போட்டித் தொடர் வரை விளையாட வேண்டும் என்பதே எனது நோக்கம். அதற்கு உடல் எந்தளவிற்கு ஒத்துழைப்பு வழங்கும் என்பதை இப்போதே கூறி முடியாது. இந்தியாவில் தற்போது சிறந்த கிரிக்கெட் வீரர்கள் உருவாகி வருகின்றார்கள். அவர்களுக்கு சிறப்பான வழி காட்டால் தேவை. இதனை அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டும் என்றார்.







வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஆண்கள் பிரிவில் சம்பியன் பட்டம் வென்ற உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை அணியையும், 15 வயதுப் பெண்கள் பிரிவில் சம்பியன் பட்டம் வென்ற அளவெட்டி அருணாசலம் வித்தியாலய அணியையும் காணலாம்.

## ஒலிம்பிக் அனுமதி சீட்டில் மோசடி

(லண்டன்)

லண்டனில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கான அனுமதி சீட்டுக்கள், சட்ட திட்டங்களுக்கு அமைய விற்பனை செய்யப் படவில்லை என குற்றச்சாட்டுக்கள் எழுந்துள் ளன.

இந்த குற்றச்சாட்டு குறித்து சர்வதேச ஒலிம்பிக் சபையின் பணிப்புரைக்கு அமைய விசாரணைகளை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ஒலிம்பிக் சபையின் சார்பாக சுதந்திரமாக இயங்கும் அமைப்பொன்று இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னர் லண்டன் சண்டே ரைம்ஸ் தமது அறிக்கையில், லண்டன் 2012 போட்டிகளில் பங்கு கொள்ளும் நாடுகளில் 54 நாடுக-ளின் பிரதிநிதிகள், ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக ஊடகங்களில் வெளியான தக வல்களை அடுத்தே, விசாரணைகள் தற்போது மேற்கொள்வர் குறிப்பிடத்தக்கது.

இது போன்ற தவறுகள் எதிர்வரும் காலங் களில் நிகழாத வகையில் எமது நட வடிக் கைகள் அமையும் என சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் அறிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

## ஆஸி. கப்டன் கிளார்க் உலகின் சிறந்த வீரர்

(சிட்னி)

அவுஸ்ரேலிய அணிக் கப்டன் மைக்கேல் கிளார்க் உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்று அந்நாட்டு பயிற்சியாளர் மைக் ஆர்த்தர் கூறி உள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில், கிளார்க்கின் ஆட்டம் ஒரே மாதிரி எப்போதும் சிறப்பாக உள்ளது. இதனால் அவர்தான் உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர். கப்டன் பதவியி லும் கிளார்க் சிறப்பாக செயற்படுகிறார். அவரின் எண்ணங்கள் அனைத்தும் அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி அனைத்து வகை யான ஆட்டத்திலும் முதல் நிலையை அடைவேண்டும் என்பதே. அந்த இலக்கை அவர் விரைவில் அடைவார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



படப்பிடிப்பு: கனகஸ்

# மாகாண மட்ட கால்பந்து சென். பற்றிக்ஸ் சம்பியன்

விளையாட்டுச் செய்திகள்

(வவுனியா)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதுப் பிரிவு அணிகளின் கால்பந்தாட்டத் தொடரில் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியனானது.

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட கால்பந்துத் தொடரின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்து ஆட்டம் வவுனியா நகர சபை மைதானத்தில் கடந்த 13ஆம் திகதி நடைபெற்றது.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும், மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி அணியும் மோதின.

இரு அணிகளுமே பலம்வாய்ந்த அணிகள் என்பதால் ஆட்டத்தின் ஆரம்பம் முதல் நிறைவடையும் வரை மிகப் பரபரப்பாக இடம்பெற்றது. இறுதி வரை இரு அணி வீரர்களால் கோல் போடும் முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டபோதும் பின்கள வீரர்களின் சிறப்பான தடுப்பாட்டத்தினால் அந்த வாய்ப்புக்கள் தடுக்கப்பட்டது. இறுதியில் இரு அணிகளாலுமே எவ்வித கோல்களும் அடிக்கப்படாத நிலையில் ஆட்டம் நிறைவுக்குவந்தது. இந்நிலையில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 4 – 3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மாகாணச் சம்பியனானது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், மன்னார் சென். லூக்ஸ் கல்லூரி அணியும் மோதின. இப்போட்டியில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 4 – 2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. இப்போட்டி நிகழ்வில் வடமாகாணத்தைச் சேர்ந்த உயர் கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தனர். (12, 93)



## சூரிச் சர்வதேச பாடசாலையுடன் இணைந்து உதைபந்து பயிற்சிகள்

இலங்கையில் உதைபந்தாட்டத்தை மேம்படுத்தும் நோக்கில் சூரிச் சர்வதேச பாடசாலையுடன் இணைந்து விசேட பயிற்சிகளும் போட்டிகளும் இடம்பெறவுள்ளது.

இலங்கைக்கு உதைபந்தாட்டக் குழுவுக்காக ஆண், பெண் குழுக்களைக் கொண்டு வருவதற்கு தாபித் அஹமட் உதைபந்தாட்ட அகடமி, சூரிச் சர்வதேச பாடசாலையுடன் இணைகிறது.

இவர்கள் இலங்கையில் 10 உதைபந்தாட்ட போட்டிகளில் பங்குபற்றினர்.

சவுண்டர்ஸ் கனிஷ்ட, குருநாகலை கனிஷ்ட, யாழ்ப்பாண கனிஷ்ட உதைபந்தாட்டக் கழகங்களுக்கு சூரிச் சர்வதேச பாடசாலை உதைபந்தாட்டக் குழுக்கள் பயிற்சி வழங்குவதோடு, விளையாட்டிலும் பங்கு கொண்டது.

வடக்கில் இவ்விளையாட்டு அபிவிருத்தி செய்யப்படும். யாழ்ப்பாணத்திலும் இவர்கள் விளையாடுவர்.

விளையாட்டுத் துறையில் சிறந்த ஆர்வலரான யோசித்த ராஜபகஷவும் இந்த விளையாட்டு விடயத்தில் ஆதரவளிக்கிறார்.

கல்வி நடவடிக்கைகள் போன்று விளையாட்டும் கைகோர்த்து செல்லப்பட வேண்டியதென தாபித் அஹமட் தெரிவித்தார்.

முன்னாள் சவுண்டர்ஸ் கழக விளையாட்டு வீரரும் பயிற்றுவிப்பாளருமான அன்ட்ரூ மொல்லிட் இங்கு வரும் பெண்கள் விளையாட்டுக்குழு, பெண்களை விளையாட்டில் ஆர்வம் கொள்ளச் செய்யுமெனத் தெரிவித்தார்.

உதைபந்தாட்டத் துறையை உயிர்ப்பிப்பதற்காக உள்ளூர் உதைபந்தாட்டக் கழகங்களுக்கு அன்பளிப்புகளையும் சூரிச் சர்வதேச பாடசாலை வழங்கும். இவர்கள் விளையாட்டு நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றுவர்.

### லவேந்திரா சகலதுறையிலும் ஜொலிப்பு

# ஜொனியன்ஸ் ஆறுதல் வெற்றி

(யாழ்ப்பாணம்)

லவேந்திராவின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் ஜே.பி.எல். ருவென்ரி – 20 கிரிக்கெட் தொடரின் கடைசி லீக் ஆட்டத்தில் ஜொனியன்ஸ் அணி ஆறுதல் வெற்றிபெற்றது.

யாழ். மாவட்ட முன்னணி அணிகள் பங்குபற்றும் ஜே.பி. எல். ருவென்ரி – 20 கிரிக்கெட் தொடர் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்று வருகின்றது.

இப்போட்டித் தொடரில் கடைசி லீக் ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இப்போட்டியில் கிறாஸ் ஹோப்பெர்ஸ் அணியும் ஜொனியன்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கிறாஸ் ஹோப்பெர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கபிலன் மிகச் சிறப்பாக ஆடி 62 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் லவேந்திரா 17 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும், அகிலன் 25 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும், சஞ்சயன், டக்ஷன் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 124 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஜொனியன்ஸ் அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் அம்புஜயன் 46 ஓட்டங்களையும், லவேந்திரா 32 ஓட்டங்களையும், விதுஷன் 24 ஓட்டங்களைப் பெற்றனர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஜொனியன்ஸ் அணியைச் சேர்ந்த லாவேந்திரா தெரிவானார்.

இத்தொடரின் லீக் ஆட்டங்கள் இரு அணிகளுமே எந்தவொரு வெற்றியையும் பதிவு செய்யாத நிலையில் கடைசி லீக் ஆட்டத்தில் மோதியிருந்தன. இதில் ஜொனியன்ஸ் அணி வெற்றிபெற்று ஆறுதல் அடைந்தமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)



அரியாலை சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா நேற்று முன் தினம் சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்றது. ஆர்.நா. செல்வராசா தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் சிறார்களின் பல விளையாட்டுக்கள் நடைபெற்றது. சங்கீதக் கதிரை போட்டி நிகழ்வில் சிறார்கள் உற்சாகமாக ஈடுபடுவதைக் காணலாம்.

படம் : ஜெகநாதன்

# தமிழகத்திலுள்ள ஈழ அகதிகள் பற்றி கவலையே படாத தமிழ் சகோதரர்கள்!



- காத் நோபள் கட்டுரையிலிருந்து.

கடந்த 30 வருடங்களாக இந்தியாவிலுள்ள தற்காலிக முகாம்களில் தங்கியுள்ளவர்கள் சுமார் 70,000 இலங்கையர்கள். இவர்கள்தான் அநேகமான இலங்கை அகதிகளின் பெரும்பான்மையினரை உள்ளடக்குகிறார்கள்.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் (யு.என்.எச்.சி.ஆர்) கணக்கின்படி, இன்றுவரை, அகதி கோரிக்கை விடுத்த சுமார் 140,000 மேலான இலங்கையர்கள் உலகெங்கும் அகதிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களில் 100,000 பேரை இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது. தற்காலிக முகாம்களில் வாழும் 70,000 பேருக்கு மேலதிகமாக மற்றும் 30,000 பேர்கள் தமிழ்நாட்டில் தங்கள் உறவினர் மற்றும் நண்பர்களுடன் தங்கியுள்ளார்கள்.


தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் இலங்கைக்கு உள்ளே வசிக்கும் தமிழர்களின் கதியைப் பற்றி பேசும் நிலையை வைத்து நோக்கும்போது, இந்தியாவுக்குள் கடந்து சென்ற தமிழர்கள் அங்கு ராஜமரியாதையுடன் உபசரிக்கப்படுவார்கள் என்கிற எதிர்பார்ப்பு எங்களுக்கு உண்டாகும். சகோதர இனத்தவரான கருணாநிதி மற்றும் சமீப காலமாக ஜெயலலிதா ஆகியோர், இலங்கை பற்றிய தங்களது பேச்சுக்களில் முழுமனதுடன் தமிழர்களை கட்டித் தழுவுவதை பார்க்கும்போது, குறைந்த பட்சம் அவர்களுக்கான முழு உரிமையாவது வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், உண்மை நிலை வேறு. அவர்கள் மிக மோசமான முறையில் வாடி வதங்குகிறார்கள். தமிழ் நாட்டில் 112 தற்காலிக முகாம்கள், ஏறத்தாழ மாநிலம் முழுவதும் பரந்துபட்டதாக அமைக்கப்பட்டுள்ளது. அங்குள்ள அகதிகளுக்கு சில நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன - உதவித் தொகையாக மாதாந்தம் 400 இந்திய ரூபா ஒரு குடும்பத்தின் தலைவருக்கு வழங்கப்படுகிறது, ஏனைய வயது வந்தவர்களுக்கு 288 ரூபாவும், முதலாவது பிள்ளைக்கு 180 ரூபாவும் மற்றும் ஏனைய பிள்ளைகளுக்கு 90 இந்திய ரூபா வீதமும் வழங்கப்படுகிறது.

வெளிப்படையாக இதைக்கொண்டு அதிகம் தாக்குப்பிடிக்க முடியாது. அவர்கள் வேலை செய்யவேண்டிய தேவை உள்ளது, ஆனால் அவர்கள் காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரையுமே முகாமைவிட்டு வெளியேற அனுமதிக்கப்படுகிறார்கள். நீண்டநேரம் வெளியே தங்கவேண்டுமானால் அந்த மாவட்டத்தில் அவர்களுக்கு பொறுப்பாக உள்ளவரிடம் விண்ணப்பிக்க வேண்டும் - இது கஷ்டங்கள் அதிகம் உள்ள ஒரு செயல்முறை.

மேலும் அதில் அவர்கள் வெற்றி பெற்றாலும்கூட வேலை கிடைப்பது அத்தனை சுலபமல்ல. அரசாங்க வேலைகளில் அவர்களுக்கு அனுமதியில்லை, அவர்கள் அகதி அந்தஸ்தில் உள்ளார்கள் எனக் கண்டதும் தனியார்துறை நிறுவனங்கள் அவர்களை குறைவான சம்பளத்தில் அல்லது மோசமான நிலமைகளில் வேலைக்கமர்த்தி அவர்களை சுரண்டுகின்றன. பல்கலைக்க்ழக பட்டதாரிகள்கூட பெரும்பாலும் கூலித் தொழிலாளிகளாக மாறவேண்டியுள்ளது. ஆனால் கிராமப்புறங்களில் கூலித் தொழில் கூடக் கிடைப்பதில்லை.

அவர்கள் முகாம்களுக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கிறார்கள், 10 அடி நீளம் 10 அடி அகலமான, யன்னல்கள் அற்ற, கொங்கிரீட் அறைகள் கட்டப்பட்டு தகரத்தால் மேற்புறம் மூடப்பட்டுள்ளது, குடும்ப அங்கத்தினர்கள் அனைவரும் ஒரேயடியாக படுத்துறங்கக்கூட போதாத அளவுக்கு சிறியது, மற்றும் போதுமான நேரம் உள்ளே படுத்துறங்க முடியாதபடி மிகவும் வெப்பமாக இருக்கும்.



சில அகதிகள் பிரித்தானியர்கள் காலத்தில் கட்டப்பட்டு தற்போது கைவிடப் பட்டுள்ள தானியக் களஞ்சியங்களில் பல தசாப்தங்களாக வாழ்ந்து வருகிறார்கள், இங்கே தங்களின் தனியுரிமைக்காக சேலைகளை தொங்கவிட்டபடியும், இயற்கை தேவைகளை கழிப்பதற்காக வயல்வெளிகளை நாடியபடியும் காலங்கழிக்கிறார்கள். அவர்களுக்காக நீர் விநியோகம் கூட அங்கு கிடையாது.

எல்லாவற்றையும் விட மோசமானதாக தென்படுவது நம்பிக்கையீனமே. இந்தியாவில் எந்த வழியிலும் தங்கள் வாழ்க்கை பரிதாபகரமாக இருப்பதை தவிர வேறு எதனையும் அகதிகளால் காணமுடியாது. கடந்த 30 வருடங்களாக ஒரு தலைமுறை முழுவதும் அவர்கள் இதேபோன்ற பரிதாபகரமான நிலையிலேயே உள்ளனர். தமிழ்நாட்டில் அவர்கள் ஒரு வேற்றுலக வாசிகள். அவர்களில் பலரும் நாடு திரும்ப விரும்புகிறார்கள்.

இலங்கையை விட்டு எல்லோரும் ஓடியபொழுது மிகவும் வறுமைப்பட்டவர்கள்தான் இந்தியாவுக்கு சென்றார்கள், வசதியுள்ளவர்கள் நேராக மேற்கிற்கு சென்றார்கள். மற்றும் அவர்கள் இந்தியாவில் அகதிகளாக வாழ்ந்தபோது மேலும் ஏழைகளாக மாறிவிட்டார்கள். நாட்டிலிருந்து நீண்டகாலம் வெளியே தங்கியபின்னர் தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு யு.என்.எச்.சி.ஆர் வழங்கும் உதவித்தொகையைவிட மிக அதிகம் தேவைப்படுகிறது.

அவர்கள் விரும்பினால் இந்திய பிரஜைகளாக இந்தியாவில் வாழ்வதற்கான தெரிவையும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என நான் எண்ணுகிறேன். அவர்களில் சிலர் அங்கேயே பிறந்து அங்கேயே வளர்க்கப்பட்டவர்கள்.

அவர்கள் இங்கேயே இருந்தாலும் சரி, அல்லது போனாலும் சரி, எந்த ஒரு பகுதியினரும் அதில் அக்கறை காட்டவில்லை. இந்திய அமைச்சர்களோ அல்லது அதிகாரிகளோ இலங்கைக்கு வருகை தரும்போது இந்த அகதிகளைப்பற்றி எதுவும் குறிப்பிடுவதில்லை. தமிழ்நா[illegible] அரசியல்வாதிகள்கூட, அவர்கள் இல்லாதது போலவே பாசாங்கு செய்கிறார்கள். வழக்கம்போல அரசாங்கத்திடமும் எந்தத் திட்டமும் இல்லை.

கடந்த வாரம் 150 பேர்களைக் கொண்ட ஒரு குழு செய்ததைப் போல, இலங்கைவாசிகள் தங்கள் உயிர்களைப் பணயம் வைத்து தங்கள் நாட்டை சார்ந்தவர்கள் முன்பு செய்ததை பின்பற்றி மேற்கு நாடுகளை சென்றடைவதற்கு முயற்சி செய்யும் நேரத்தில் மட்டுமே யாராவது இதை நினைத்துப் பார்க்கிறார்கள். அப்போது மட்டுமே அவர்கள் தலைப்புச் செய்திகளில் இடம்பெறுகிறார்கள்.

# சினிமா சினிமா



➧ “மங்காத்தா” படத்தையடுத்து வெங்கட் பிரபு இயக்கும் படத்தில் சூர்யா நடிப்பதாக இருந்தது. “சிங்கம் 2” படப்பிடிப்பு காரணமாக அந்தத் திட்டத்தைத் தற்காலிகமாக ஒத்தி வைத்துவிட்டார் சூர்யா. இதையடுத்து அவருடைய தம்பி கார்த்தியுடன் கைகோர்க்கிறார் வெங்கட்பிரபு. “பிரியாணி” எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் படத்தில் பொலிவுட்டின் பிரபல நாயகிகளுள் ஒருவர் கதாநாயகியாக நடிப்பார்.




➧ “வழக்கு எண் 18/9” படத்தையடுத்து லிங்குசாமி தயாரிக்கும் புதிய படத்துக்கு “ரோமியோ ஜூலியட்” என பெயரிடப்பட்டுள்ளது. “ரேணிகுண்டா” படத்தை இயக்கிய பன்னீர்செல்வம் இயக்குகிறார். புதுமுகம் வினோத் கதாநாயகனாகவும் “கும்கி” படத்தில் நடித்துள்ள லட்சுமி கதாநாயகியாகவும் நடிக்கிறார்கள். யுவன்ஷங்கர் ராஜா இசையமைக்கிறார்.



➧ மணிரத்னத்தின் “கடல்”, சீனு ராமசாமியின் “நீர்ப்பறவை”, சுப்பிரமணியசிவாவின் “உலோகம்” ஆகிய மூன்று படங்களும் கடலையும் அதன் சுற்றுப்புறத்தையும் கதைக் களமாகக் கொண்டு உருவாகி வருகின்றன. இந்த மூன்று படங்களுக்கும் எழுத்தாளர் ஜெயமோகன் வசனம் எழுதுகிறார்.

➧ “வெப்பம்” படத்தையடுத்து, ஜெய் நடிக்கும் படத்தை தயாரிக்கிறார் கவுதம் மேனன். இப்படத்துக்கு, “தமிழ்ச்செல்வனும், தனியார் அஞ்சலும்” என்று பெயர் வைத்திருக்கும் கவுதம், இப்படம் வெற்றி பெற்றால் அடுத்தடுத்து, “தமிழ்ச்செல்வனும், வருவாய்துறையும்” மற்றும் “தமிழ்ச்செல்வனும், பொதுப்பணித் துறையும்” போன்ற பெயர்களில் படம் தயாரிக்க திட்டமிட்டுள்ளதாகச் சொல்கிறார்.



➧ “விஸ்வரூபம்” படத்தையடுத்து, கமல் இயக்கி நடிக்கும் படம், “அமர்ஹாய்” தமிழ், தெலுங்கு, இந்தி என மூன்று மொழிகளில் தயாராகிறது.

# ஜெமினியும் வாசனும்!

ஆனந்த விகடனில் வெளியான பகுத்தறிவுப் போட்டி முடிவுகளைத் தாங்கி, அத்துடன் சினிமா, இசை, நாடகம் பற்றிய செய்திகளையும் சேர்த்து, “நாரதர்” என்ற பத்திரிகை ஒரு இணைப்பு இதழாக முன்பு வெளிவந்தது. ஸ்ரீநிவாசராவ் என்பவர் அதன் ஆசிரியர். விகடன் அதிபர் எஸ்.எஸ்.வாசன் மறைந்தபோது, ஸ்ரீநிவாசராவ் பொம்மை இதழில் (1969) எழுதிய கட்டுரைப் பகுதி இதோ:

ஒரு கம்பெனியை ஏலம் எடுக்க டெண்டர் கோரப் பட்டிருந்தது.



எழுபதாயிரம் ரூபாய், எழுபத்திரண்டாயிரம் ரூபாய், எழுபத்தைந்தாயிரம் ரூபாய், எண்பதாயிரம் ரூபாய் என்ற மேற்படி தொகைகள், சீலிடப்பட்ட நான்கு கவர்களுக்குள் வைக்கப்பட்டிருந்த கடிதங்களில் குறிப்பிட்டிருந்தவை ஆகும். மீதம் இருந்த, ஒரு கவரை பிரித்துப் படித்த நீதிமன்ற அதிகாரிக்கு சிரிப்பு வந்தது. “எண்பதாயிரத்து நானூற்று இருபத்தேழு ரூபாய், பதினொரு அணா ஒன்பது பைசா...” என்று வாசித்தார் அவர். அத்துடன் இந்த உயர்ந்தபட்சத் தொகையைக் குறிப்பிட்டிருப்பவர் எஸ்.எஸ்.வாசன், அவருக்கே ஏலம் விடப்படுகிறது...” என்று தீர்ப்பு கூறினார் அந்த நீதிமன்ற அதிகாரி.

ஆமாம், இப்படித்தான் விசித்திரமான ஒரு தொகையைக் குறிப்பிட்டு, ஏலத்திற்கு வந்த “மோஷன் பிக்சர்ஸ் கம்பைன்ஸ்” ஸ்ரூடியோவை வாங்கினார் வாசன். அதை ராஜா சர் முத்தையா செட்டியார். 1940இல், திறந்து வைத்தார். அதுவே மூவிலேண்ட் ஜெமினி ஸ்ரூடியோ ஆயிற்று.

# யுத்தம் ஓய்ந்தும் ஓயாத கண்ணி வெடிகள்!

டாக்டர் ஜேம்ஸ் துரையப்பா
தமிழில்: ஆ. சத்தியசீலன்



வடக்கு கிழக்கு மாகாணங்களில் முன்னர் யுத்தம் நடைபெற்ற பகுதிகள் யாவற்றிலும் ஏராளமான கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருக்கின்றன. இதனால் மக்கள் மீளக் குடியேறுவதில் பல்வேறு தாமதங்கள் ஏற்படுகின்றன. மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் கூட மக்களின் கவனக் குறைவினால் மர்மப் பொருட்கள் வெடித்த சம்பவங்களும் உண்டு.

இராணுவத்தினரின் அண்மைய தரவுகளின் படி வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள ஒவ்வொரு மாவட்டமும் கண்ணிவெடி அபாயமுள்ள பிரதேசமாகவே காணப்படுகின்றது. யுத்தம் முடிவுற்ற காலப்பகுதியில் இருந்து இது வரை ஏறத்தாழ 1170 சதுர கிலோமீற்றர் பிரதேசத்தில் ஏறத்தாழ 300,000 கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. இவற்றில் யாழ். மாவட்டத்தில் 28 சதுர கிலோமீற்றர் பிரதேசத்தில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. இப்பணிகளில் இராணுவத்தினரும் பல்வேறு தொண்டு நிறுவனங்களும் ஈடுபட்டு வருகின்றனர். இவற்றில் அரச சார்பற்ற தொண்டு நிறுவனமான இங்கிலாந்தைத் தளமாகக் கொண்டு இயங்கும் லோட்றஸ்ட் எனும் அமைப்பினது பங்கு அளப்பரியதாகும்.

### கண்ணிவெடிகளின் வகைகள்:



அகற்றப்பட்ட கண்ணிவெடிகள்

இங்கு பொதுவாகக் கண்டு எடுக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள் சாதாரண கண்ணிவெடிகள், விடுதலைப் புலிகள் பயன்படுத்தும் ஜொனி கண்ணி வெடிகள், அமுக்க வெடிகள் மற்றும் வெடிக்காத வெடிபொருட்கள் என்பவையாகும்.

சாதாரண மிதிவெடிகள் யுத்தம் நடைபெற்ற பிரதேசத்தில் எதிரிகளின் முன்னேற்ற நகர்வைத் தடுப்பதற்காகப் பெருமளவில் பாவிக்கப்பட்டிருக்கின்றது. பாகிஸ்தான் மற்றும் சீனா போன்ற நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் இவ்வகை மிதி வெடிகள் மிதிக்கப்படும் சந்தர்ப்பத்தில் மிதிப்பவரின் பாதத்திற்குச் சேதத்தினை ஏற்படுத்தக் கூடியவையாகும். இவை பெரும்பாலும் பிளாஸ்டிக் பதார்த்தத்தினால் செய்யப்பட்டிருப்பதினால் வெள்ளம் நீர் போன்றவற்றினால் ஒரு இடத்தில் இருந்து இன்னுமொரு இடத்திற்குப் பரம்பிச் செல்லக்கூடியவையாகும். இவ்வகையான மிதிவெடிகள் பெரும்பாலும் இராணுவத்தினராலும் விடுதலைப் புலிகளாலும் உபயோகப்படுத்தப்பட்டன.

ஜொனி மிதிவெடியானது மிகவும் பயங்கரமானதொன்றாகவே அனைவராலும் பார்க்கப்பட்டது. இது அதிகளவிலான வெடிபொருள் நிரப்பப்பட்ட உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மிதி வெடியாகும். இது வெடிக்கும் போது மிகவும் ஆபத்தானதாகவும் அகப்படுபவரின் முழங்காலுடன் சேதம் விளைவிப்பதாகவும் காணப்படுகின்றது. இவை நீண்ட காலம் பழுதடையாமல் இருப்பதனால் யுத்தம் முடிவடைந்த பின்னர் பல வருடங்களுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியவையாகும்.

அமுக்க வெடியானது டாங்கி மற்றும் பார ஊர்திகளை இலக்காகக் கொண்டு அமைக்கப்பட்டதாகும். இது குறிப்பிட்ட நிறையான பொருளினால் அமுக்கப்படும் போது மட்டுமே வெடித்து பாரிய சேதத்தினை ஏற்படுத்தக் கூடியதாகும்.

இதர வெடிபொருட்களாக வெடிக்காத ஷெல் மற்றும் மோட்டார் குண்டுகள், கொத்துக்குண்டுகளின் பாகங்கள் கருதப்படுகின்றன. இவையும் பல வருட காலங்களின் பின்னரும் வெடித்துப் பாரிய சேதங்களை ஏற்படுத்தக் கூடியவையாகும்.

### எவ்வாறு அகற்றுவது?

உலகிலே கண்ணிவெடிகளை அகற்றுவதற்குப் பல்வேறு முறைகள் கையாளப்பட்டாலும் இடத்திற்கு இடம் இவை வேறுபடுகின்றன. நவீன தானியங்கி இயந்திரங்கள், உலோகப் பொருட்களை இனம் காணும் அடையாளப்படுத்திகள் என நவீன கருவிகள் பல இருந்தாலும், எமது பிரதேசங்களில் கடுமையான சண்டை நடைபெற்ற இடங்களில் ஏராளமான உலோகத் துண்டுகள் காணப்படுவதனால் பெரும்பாலான கண்ணி அகற்றும் வேலைகள் கைகளினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. கைகளினால் கண்ணிகளை அகற்றுவது மிகவும் அவதானமாகச் செய்யப்பட



மீட்கப்படும் கண்ணிவெடி

வேண்டிய வேலை என்பதுடன் மிகவும் ஆபத்தானதொன்றாகும். சில வேளைகளில ஒரு நாளில் கண்ணி வெடி அகற்றும் பிரிவினரால் ஒரு சில சதுர அடிகளையே துப்புரவு செய்யக் கூடியதாகவும் இருக்கும்.

எமக்காக இவர்கள் மிகவும் கடினப்பட்டு செய்யும் பணியானது உண்மையிலேயே ஒரு அரிய சேவையாகும். இவர்கள் தமது பணியின் போது பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றார்கள்.

சில மாதங்களில் மட்டுமே கண்ணி வெடிகளை அகற்றும் போது விபத்துக்களினால் பலர் காயம் அடைந்ததுடன் சிலர் தமது கைகளையோ கை விரல்களையோ இழந்துள்ளார்கள் என்பது மிகவும் கவலையளிக்கும் விடயம் ஒன்றாகும். இவர்கள் இப்பணிக்கு இணைத்துக்கொள்ளும் போது ஒவ்வொருவருக்கும் தலா 10000 அமெரிக்க டொலர்கள் காப்புறுதி செய்யப்பட்டிருக்கின்ற போதிலும், விபத்து ஏற்பட்டதன் பின்னராக அது உத்தியோகத்தர் விட்ட தவறினால் ஏற்பட்ட தவறா என விசாரணை நடாத்தப்பட்டே காப்புறுதித் தொகை வழங்கப்படுகின்றது.

கண்ணி வெடி அகற்றும் உத்தியோத்தர்கள் பெரும்பாலும் கைவிடப்பட்ட பற்றைக் காடுகளில் பணியாற்றுவதனால் அடிக்கடி பாம்புக் கடிக்கு உள்ளாகின்றார்கள். இதன் மூலம் இவர்களது உயிர்களுக்கும் ஆபத்து ஏற்படும் அபாயம் உள்ளது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இவ் உத்தியோத்தர்கள் பணியாற்றும் சில இடங்கள் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் வாழ்வா சாவா என மிக உக்கிரமான சண்டை இடம் பெற்ற பகுதிகளாகும். இவ்வாறான இடங்களில் விடுதலைப் புலிகள் தாம் வைத்த கண்ணிவெடிகளை இராணுவத்தினர் அகற்றுவதைத் தடுப்பதற்காக யாரும் எதிர்பாராத நவீன தொழில் நுட்பமொன்றைக் கையாண்டிருக்கின்றார்கள். தற்போது நடைபாதைக் கடைகளில் உள்ள சீனத் தயாரிப்பு விளையாட்டுப் பொருட்களில் காணப்படும் சிறு அதிர்வினால் மின் சுற்றினைப் பூர்த்தி செய்யும் தொழிநுட்பமே அதுவாகும். இதனால் சிறு அசைவு ஏற்பட்டாலும் கண்ணிவெடிகள் வெடித்துச் சிதறுகின்றன. இவ்வாறான கண்ணிவெடிகள் சாதாரணமாக அகற்றப்படாமல் அவ்விடத்திலேயே வைத்து வெடிக்க வைக்கப்படுகின்றன.

### இன்னும் கண்ணிகளில் அகப்படும் மக்கள்!!

கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் துப்புரவான பிரதேசம் என அங்கீகரிக்கப்பட்டுப் பின்னர் மக்கள் மீளக் குடியேறிய பகுதிகள் சிலவற்றில் அண்மையில் வெடி விபத்துச் சம்பவங்கள் நடைபெற்று சிலர் மரணமடைந்ததும், காயம் அடைந்ததும் நாம் அறிந்ததே. இவை எவ்வாறு ஏற்படுகின்றன என ஆராய்ந்த போது அதிர்ச்சியும் கவலையும் அளிக்கும் விடைகள் காத்திருந்தன.

மக்கள் மீளக்குடியேறிய சில பகுதிகளுக்கு அண்மையாக இன்னும் சில பகுதிகளில் கண்ணிகள் அகற்றப்பட வேண்டி இருக்கின்றன. இப்பகுதி, களுக்குள் உள் நுழைய வேண்டாம் என தெளிவாக அடையாளமிடப்பட்டுப் பல தடவைகள் கூறப்பட்ட போதிலும், இப்பகுதிகளில் பலர் விபத்துக்குள்ளாகி இருக்கின்றார்கள். மேலும் கட்டுமானப் பணிகளுக்காக திருட்டுத்தனமாக கண்ணிவெடிகள் அகற்றப்படாத இடங்களில் இருந்து பெருமளவிலான மணல் அகழப்படுவதனால் இம் மணலுடன் சேர்த்து வெடிபொருட்களும் இடத்திற்கு இடம் காவப்படுகின்றன. அறியாத சிறு பிள்ளைகள் இவற்றை விளையாட்டுப் பொருட்கள் என நினைத்து விளையாடி வெடித்துச் சிதறிய சம்பவங்கள் அண்மையில் நடைபெற்ற மிகவும் வருந்தத்தக்க விடயங்களாகும்

---

"பார்பி டோல்" என்ற பெயர், உலகம் முழுவதும் மிகவும் பிரபலம். அமெரிக்காவின் பிரபலமான பொம்மை தயாரிப்பு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட, "பார்பி" என்ற பெண் உருவம் கொண்ட பொம்மை, கடந்த 50 ஆண்டுகளாக, பல்வேறு வடிவங்களில், பல்வேறு தோற்றங்களில், இன்னும் பரபரப்பாக விற்பனையாகி வருகிறது. மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த இளம் பெண்களுக்கு, பார்பி பொம்மை மீது அதிக விருப்பம்.

இந்தப் பொம்மையின் தோற்றத்தால் ஈர்க்கப்பட்ட ரஷ்யாவைச் சேர்ந்த, வலெரியா லக்யானோவா என்ற இளம் பெண், அந்த பொம்மை போலவே, தன்னை மாற்றிக் கொண்டுள்ளார். உணர்ச்சிகளற்ற முகம், பிளாஸ்டிக் தோற்றம், அகன்ற மார்பகம், மிக குறுகிய இடை, பிளாஸ்டிக்கை போன்ற முடி அலங்காரம் என அச்சு அசலாக, உண்மையான பார்பி போலவே தோற்றமளிக்கிறார்.

இந்தத் தோற்றத்தை அடைவதற்காக, பல மாதங்கள் சிரமப்பட்டதாக தெரிவித்துள்ள அவர், தன் புகைப்படங்களை இணைய தளத்தில் வெளியிட்டுள்ளார். இந்தப் புகைப்படங்களை பார்த்த சிலர், பிளாஸ்டிக் சேர்ஜரி மூலம், அந்த பெண், இந்த தோற்றத்தை அடைந்துள்ளதாக புகார் தெரிவித்து உள்ளனர். மற்றொரு தரப்பினரோ, இந்தப் பெண் வெளியிட்டுள்ள புகைப்படங்கள், கிரபிக்ஸாக இருக்கலாம் என்றும் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.







பார்பி டோல்

---

### விமானம் போல் ஹோட்டல்!

உலகின் மிகப் பெரிய பயணிகள் விமானம் என்ற பெருமையை, "ஏ-380" விமானம் பெற்றுள்ளது. இவ்விமானத்தில், ஆயிரம் பேர் வரை பயணிக்க முடியும். ஐக்கிய அரபு எமிரேட் நாடுகளில், இந்த விமானம் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. இந்த பிரமாண்ட விமானத்தில் பயணிப்பது, பயணிகளுக்கு, புதுவித அனுபவத்தை தரும்.

இதை மையமாக வைத்து, சீனாவின் சோங்கிங் நகரத்தில், ஒரு அசத்தலான உணவு விடுதியை கட்டியுள்ளனர். "ஏ-380" விமானத்தின் உட்புற தோற்றம் எப்படி இருக்குமோ, அதேபோல் இந்த உணவு விடுதியை வடிவமைத்துள்ளனர். உணவு பரிமாறுபவர்கள் உட்பட, இந்த உணவு விடுதியில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களும், விமான சிப்பந்திகள் அணிந்திருப்பது போன்ற உடைகளை அணிந்துள்ளனர். விமானப் பணிப் பெண்கள் பேசுவது போல், கனிவாக பேசுவதற்கும், இவர்களுக்கு பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

ஜன்னல், இருக்கை, கீழே விரிக்கப்பட்டுள்ள தரைக் கம்பளம், விளக்கு வசதி என இந்த உணவு விடுதியில் உள்ள அனைத்து வசதிகளுமே, "ஏ-380" விமானத்தில் உள்ளது போன்றே வடிவமைக்கப்பட்டுள்ளது.



ஒரே ஒரு வித்தியாசம் உண்டு. விமானத்தில் பயணிப்பவர்களுக்கு, குறிப்பிட்ட சில உணவு வகைகள் மட்டுமே பரிமாறப்படும். இந்த உணவு விடுதியிலோ, சைனீஸ், உள்ளிட்ட அனைத்து உலக உணவு வகைகளும், சுடச் சுட பரிமாறப் படுகின்றன. இந்த உணவு விடுதியில், எப்போதுமே கூட்டம் நிரம்பி வழிகிறது.

# பூனை குறுக்கே நடந்தால்...
# மக்னெட்டோரிஸப்ஷன்

**பூனை** குறுக்கே நடந்தால் அபசகுனம். வடக்கே தலை வைத்து படுத்தால் உடல் நலத்திற்கு கேடு. இவ்விரண்டு சமூக நம்பிக்கைகளை நாம் எதிர்கொண்டிருக்கிறோம் எனக் கணிக்கப்பட்ட இவற்றின் அன்றாட 'விளக்கங்களும்', சார்ந்த என் அறிவியல் தேடல்களையும், புரிதல்களையும் அனுபவக்கல்வி தடவி இக்கட்டுரையில் விவரிப்போம். முக்கியமாக மிருகங்களின், மனிதனின் மக்னெட்டோரிஸப்ஷன், காந்தவிசையேற்புதிறன் பற்றி அறிமுகம் செய்துகொள்வோம்.

கடைசிப் பக்கத்தை முதலில் வாசித்த பின்னரே மர்மக்கதை மிச்சத்தை வாசிபபவர்களுக்கு: மேலிரண்டு நம்பிக்கைகளை மக்னெட்டோரிஸப்ஷன் கொண்டு நிரூபிக்க முடியவில்லை என்பதே இக்கட்டுரையின் கடைசிப் பக்கம்.

பூனையில் தொடங்குவோம். பூனைகள் எகிப்தியர்களால் வழிபடப்பட்டது. பூனைக்கு பல ஆயுள்கள், மறுவாழ்வுகள் (பிறவிகள்) என்று நம்பப்பட்டது.



பூனையின் மீ-ஆயுள் சமூக நம்பிக்கைதான். ஆனால் அறிவியல் சிந்தையிலும் பரிசோதித்து ஒப்புக்கொள்ள இதில் விஷயம் உண்டு. மாடியிலிருந்து கீழே கட்டாந்தரையில் விழுந்தால் நமக்கு எலும்புகள் நொறுங்கிவிடலாம். ஆனால் பூனைக்கு இப்படியில்லை. மாடியென்ன, மேல் மாடியிலிருந்து கூட விழலாம். தப்பிவிடும்.

இதை ஆராய்ந்திருக்கிறார்கள். முதல் மாடியிலிருந்து விழும் பூனையைக் காட்டிலும், ஏழாவது மாடியிலிருந்து தரையில் விழும் பூனை அதிக சேதாரமின்றி தப்பிவிடும் வாய்ப்பு அதிகம் என்று பௌதீகஸ்தர்கள் நிறுவியுள்ளனர். காற்றின் வழியே விழுகையில் பூனை பரசூட் போல தன் உடலை வளைத்து கால்களைப் பரப்பி விரித்துக் கொள்கிறதாம். காற்றின் உராய்வையும், குடை போன்ற வடிவத்தின் கீழ் மேல்புறங்களின் அழுத்த வித்தியாசங்களினாலும் கிட்டத்தட்ட மிதந்தவாறே தரையை அடைகிறது.

தலைகுப்புறத் தள்ளிவிட்டாலும் சுதாரித்து இந்த 'பரசூட் நிலையை' அடைந்துவிடுமாம். முதல் மாடியிலிருந்து தள்ளிவிட்டால், சுதாரித்துகொண்டு இவ்வாறு பாரசூட் போல விழுவதற்குள் தரையை தொட்டுவிடுவதால் அடி பலமாக வாய்ப்பு அதிகம். இதேபோல்தான் பறக்கும் அணிலும் அதீதமாய் அடிபடாமல் மரத்துக்கு மரம் தாவுகிறதாம்.. எப்படியோ, எகிப்தியர்களின் சமூகநம்பிக்கையும் அறிவியல் சுவாரசியமாகவே வலுவூட்டுகிறது.

இப்படியாகப்பட்ட பூனை நாம் காரியமாய் போகையில் குறுக்கே வந்தால் ஆகாது என்று சமூக நம்பிக்கை வைத்திருக்கிறோம். சகுனம் சரியில்லை, போகிற காரியம் வெற்றி பெறாது; உள்ளே வா, ஒரு டம்ளர் தண்ணி குடிச்சுட்டுப் போ'என்கிறோம். எப்படி நாம் செய்யப்போகும் காரியத்தை குறுக்கே வருவதால் பூனை கெடுத்துவிடும் என்று இயல்பாய் கேள்விவரும் 'சொன்னதைக் கேள், கொஞ்ச நேரம் கழிச்சுப் போனால் குடியா முழுகிடும்' என்று இயல்பான 'விளக்கம் அளிக்கப்படும். 'அப்படிப் பார்த்தால், உலகத்தில் எல்லாப் பூனையும் எங்காவது நடந்தாலே, யாருக்காவது குறுக்காகத்தான் போய்க்கொண்டிருக்கும். எல்லாருக்கும் காரியம் கெட்டிடுமா? இல்லை கண்ணாலே பார்த்தால்தான் கெடுமா?' என்று மேலதிகமாய் எழும் சந்தேகங்களை 'போடா போ. எதைச் சொன்னாலும் எதிர்த்துப் பேசு' என்கிற மேலதிக விளக்கம் தெளியவைப்பதும் இயல்பே.

மேற்படி இயல்புகளின்மேல் என் அதிருப்திகளை வெளிப்படுத்தியதற்கு, ஒருவர் பின்வரும் விளக்கமளித்தார்: 'உலகமே ஒரு பெரிய காந்தம் அல்லவா. அதில் நீங்கள் பாட்டுக்கு நடந்து போகும்போது பூனை குறுக்கே வந்தால், காந்த அலைக்கோடுகளை அது வெட்டுகிறது. இதனால், நீங்கள் மனதிலே நினைத்துப் போய்க் கொண்டிருக்கும் விஷயம் - அதுவும் மன அலைகள்தானே - வேறுமாதிரியாகி விடுகிறது. சரியா? எல்லாவற்றுக்கும் முன்னோர் விஞ்ஞான ரீதியாகத்தான் யோசிததிருக்கிறார்கள்'.

இவ்வகை விளக்கங்களை கேட்டவுடன் ஒருகாலத்தில் செய்வதறியாமல் வெகுண்டெழுந்து, சட்டையை மாட்டிக் கொண்டு, சமுதாயம் சகித்துக்கொள்ளும் ஏதாவது ஒரு மினி கெட்டகாரியம் செய்ய வெளியே கிளம்பிவிடுவேன். இன்று 'தெரதீயகராதா', என தியாகையருடன், '(மனத்) திரை விலகாதா' என மனதினுள் எழுகிறேன்.

**பூனை நகர்ந்தால் காந்த அலைகளை வெட்டுமா? மனிதனும் நகர்கையில் இவ்வாறு செய்கிறானா?**

அதாவது, ஒரு காந்தத்திலிருந்து வெளிப்படும் காந்த அலைகளை இன்னொரு காந்தத்தினாலோ, அல்லது காந்த விசையினால் உந்தப்படும் இரும்பு போன்ற பொருள்களினாலோ பாதிப்படையச் செய்யமுடியும் என்பதை பௌதீகத்தில், நிரூபித்துக் கொணடுள்ளோம்.. இதனால், பூமி எனும் காந்தத்தின் காந்தவிசை அலைகளை நகர்ந்தால் பாதிக்கமுடியும் என்கையில், பூனை ஒரு காந்தமா என்று கேட்கலாம். இக்கேள்விக்கான பதிலை நேரடிச் சோதனையில் அறியலாம். செய்தால் மேற்படி விளக்கத்தின் நம்பகத்தன்மை அதிகரிக்கிறதா என்றும் தெளியலாம்.

உயிரினங்களுக்கு இருக்கும் காந்தவிசையை பாதிக்கும் குணத்தை மக்னெட்டோரிஸப்ஷன், காந்தவிசையேற்புத்திறன் என்கிறார்கள். ஒரு காலத்தில் மூட நம்பிக்கை, என்றிருந்த மிருகங்களின் காந்தவிசையேற்புத்திறன் பற்றிய ஆய்வுகள் கடந்த இரு பத்தாண்டுகளில் பெருகி வருகிறது.

ஏற்கனவே தேனீக்கள், சலமாண்டர் பல்லிகள், கடல் ஆமைகள், சுறாமீன்கள், சில பறவைகள் என்று பல உயிரினங்கள் காந்தவிசையேற்பிகள் என்று சோதித்து தெளிந்திருக்கிறார்கள். நமக்கு பழக்கமான உதாரணமாக, புறாக்கள் எத்தருணத்திலும் திசைகளை சர்வநிச்சயமாய் அறிந்திருக்கிறது. 'ஹோமிங் பிஜியன்'கள் எங்கு தொடங்கினாலும் உலகின் குறிப்பிட்ட இடத்தை அடைவதில் கில்லாடி.

இதற்குக் காரணம் அவைகளுக்கு மூக்கின் உட்புறத்தில் மினி காந்தம் இருக்கிறதாம். அதைக்கொண்டு, உலகின் காந்தவிசை அலைக்கோடுகளின் திசையை புறாக்களால் 'உணர்ந்து' கணிக்க முடிகிறது. இதை நிரூபிப்பதற்காக மூக்கிலிருந்து காந்தத்தை எடுத்துவிட்டு, திசையறிவையிழந்து புறா தடுமாறுவதை நிறுவியிருக்கிறார்கள். மேலும், சக்திவாய்ந்த காந்தத்தை புறாக்களின் அருகில் வைத்தாலும் திசையறிவில் குழம்பிவிடுகிறதாம்.

ஆனால் எவ்வாறு உயிரினங்கள் காந்தவிசையை அறிந்து 'உணர்கின்றன' என்பது அனைத்து தருணங்களிலும் இன்னமும் முழுவதுமாய் விளங்கவில்லை. இதை ஆராய்வது ஸென்ஸரி பயொலஜி எனும் துறை.

நம் பூமி ஒரு காந்தம். பூமியின் காந்தவிசையினால்தான் மாலுமிகளின் திசையறி கருவிகள் கடலெங்கும் வேலைசெய்து கிட்டத்தட்ட வடக்கைக் காட்டுகிறது.

ஏன் கிட்டத்தட்ட என்றால், காந்த வடக்கு-தெற்கு புலன்கள் பூமியின் சரியான வடக்கு-தெற்கிலிருந்து 11 டிகிரி சாய்ந்துள்ளது. சூரியனிலிருந்து வெளிபபடும் காந்தப்புயல்கள், பூமியின் பரப்பை அண்டாவண்ணம் நம் காந்தப்புலம் தடுககிறது. 'ஓஸோன் பூச்சும்' தப்பிக்கிறது. விளைவாய் அல்ட்ரா-வயலட் கதிர்வீச்சிலிருந்து நம்மை காக்கிறது.

நொடிக்கு ஒரு மீற்றர் (மணிக்கு கிட்டத்தட்ட இரண்டு மைல்கள்) வேகத்தில் நீந்தும் சுறா, கடலில் வேகமாக நீந்துகையில், உலகின் காந்தவிசைக் கோடுகளை வெட்டிக்கொண்டே செல்கிறது. இதனால், மிகச்சிறிய அளவில் 'தூண்டு மின்சாரம்' உற்பத்தியாகிறது, மயிர்க்கூச்செறிவதைப் போல. ஏற்படும் 'தூண்டு மின்சாரத்தினால்' தன் அருகில் மீற்றருக்கு 25 மைக்ரோ வோல்ட் மதிப்புடன் வோல்டேஜை பாய்ச்சமுடியுமாம். இந்த 'உணர்தலை' வைத்து சுறா சமுத்திரத்தில் நீந்துகையில் திசையை ஒருவாறு அனுமானிதது்க் கொள்கிறது.

அருண் நரசிம்மன்

பூனைக்கு வருவோம். எப்படிப் பிழிந்து பார்த்தும், புறாவிடம் உள்ள காந்தமோ, சுறாவிடம் கண்ட மேற்படி மின்கடத்தும் வஸ்துவோ பூனைகளிடம தட்டுப்படவில்லை. பூனைகள் காந்த விசையேற்பிகள் இல்லை. அவைகளால் உலகின் காந்தவிசையை (அல்லது, அவைகளின் அருகில் நம்மால் வைக்கப்படும் காந்தத்தின் விசையை) 'உணர' முடியாது. அதனால், பூனைகள் நடக்கையில், நமக்கு குறுக்காக வருகையில் உலகின் காந்தவிசைக் கோடுகளை பாதிப்பதில்லை. அவ்வகையில், நம்மையும்.

அதனால், 'பூனை குறுக்கே வந்தால் அபசகுனம்' என்பதை உலகப் பொதுவாய் நம்புவதற்கு நிரூபணவாதமாய் வேறு விளக்கம் தேவை.

அடுத்து, வடக்கே தலைவைத்துப் படுத்தால் கேடு என்பது பற்றி...

'தென் திசை இலங்கை நோக்க' வடதிசை சிரசை வைத்து உறங்கினால், நாம் உலகின் (துருவ) காந்தப்புலன்களுக்கிடையே காந்தவிசைக்கோடுகளுடன் ஒத்துக் கிடக்கிறோம். இதனால், உடல் நலத்திற்கு கேடு என்று ஒரு நம்பிக்கை உள்ளது. 'அங்க தலை வைச்சுப் படுக்காதே, கெட்ட கனவு வரும்' போன்ற ரூபத்தில் நீங்களும் அறிந்திருக்கலாம். எத்திசையில் தலைவைத்து எப்பரப்பில் தூங்கினாலும், எனக்கு மேற்படி நம்பிக்கையே பிடிபடவில்லை. இருந்தாலும், விளக்கத்தை ஒதுக்காமல் யோசித்தால், இங்கு கேட்கப்பட வேண்டிய நிரூபணவாத கேள்வி, மனிதனால் உலகின் காந்தவிசையை 'உணர'முடியுமா?

அதாவது, முற்பகுதியில் விலங்குகளுக்கு விவரித்ததைப் போல, மனிதனும் ஒரு காந்தவிசையேற்பியா?

சுருக்கமான விடை. இல்லை. மனிதனின் இழையங்கள் (டிஷ்யூ) காந்தவிசையினால் பாதிக்கப்படுவதில்லை என்று நிறுவியுள்ளார்கள். நமக்கு புறஊதாக் கதிர்களையும் 'பார்க்க' முடியாது. இருந்தாலும் அப்படி செய்வதற்கு, நம் 'பார்வைப் புலனின்' நீட்சியாய் உடனே ஒரு கருவியைக் கண்டுபிடிக்க முடிகிறது.

ஆனால் காந்தவிசையை உணர்ந்துகொள்ள நம்மிடம் 'புலன்கள்' இல்லை. இதனால் மற்ற விலங்குகளிடம் இதைககாண்கையில், எப்படி இது சாத்தியம என்று மண்டையை பிய்த்துக் கொள்கிறோம்.

அடுத்த கேள்வியாய் 'வடக்கு-தெற்காய் படுத்தால் கெட்ட கனவுகள் வரும்' என்கிற கூற்றையும் மனதில்கொண்டு, அட்போ மனித மூளையை மட்டுமாவது காந்தவிசை பாதிக்குமா என்று கேட்கலாம்.

இதற்கு விடையை 2007இல் செய்யப்பட்ட நியூரோசயன்ஸ் ஆராய்ச்சி வழங்குகிறது. ஆராய்ச்சிக் குழுவினர காந்தவிசை மனித மூளையை பாதிக்கிறதா என்று பரிசோதித்துள்ளனர்.

பதினேழு நபர்களை தலையில் எலக்ட்ரோட்கள் ஒட்டவைத்து, காந்த விசைப்புலனுக்குள் இருத்தி, அவர்களுக்கு காந்தவிசை அழுத்த பேதம் ஏற்படுகிறதா என்று அளந்துள்ளனர். காந்த விசையை அணைத்து-ஏற்றி, அதற்கேற்ப மூளையில் ஆங்காங்கே சற்றே சலனங்கள் ஏற்படுவதை பொருததிய எலக்ட்ரோட்களில் தோன்றும் மின்சார சலனங்களை வைத்து அறிந்துளளனர்.

ஆனால், மூளையின் குறிப்பாக எப்பகுதி காந்தவிசையினால் பாதிக்கப்படுகிறது என்று நிறுவ முடியவில்லை. அதேபோல், காந்தவிசையை சற்றே தூரமாய் அகற்றினாலும் மூளையில் சலனங்கள் குறைந்து விடுகிறது.

இதையெல்லாம்விட முக்கியமாக காந்தவிசையினால் ஏற்படும் சிறிய மின்சார சலனங்களை மூளை வேறு எந்த புலங்களை வைத்தும் 'உணர' முடியவில்லை. அதாவது, சோதித்த நபர்களுக்கு எவ்விதத்திலும் காந்தவிசைப் புலனுள் இருப்பதை 'அறிய' முடியவில்லை.

இதனால், மிக அருகே வைக்கப்படும் ஓரளவு அதிக அளவிளான காந்த விசையினால் மூளையில் சலனங்கள் ஏற்படலாம் என்பதுவரை மட்டுமே நியூரோசயன்ஸ் ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன எனலாம்.

இம்முடிவு ஒரு தொடக்கமே. இருநதாலும், இதை வைத்துப் பார்க்கையில், உலகின் காந்தவிசை மனித மூளையை பாதிக்கும் சாத்தியம் மிகக்குறைவு.

என் கெட்ட கனவுகளுக்கு, நான் வடக்கு-தெற்காய் படுப்பதை - அது உலக காந்தவிசைக் கோடுகளுடன் ஒத்திசைவதால் - காரணம் என்று கருதமுடியாது.

**காந்தவிசையை உணர்ந்துகொள்ள நம்மிடம் 'புலன்கள்' இல்லை. இதனால் மற்ற விலங்குகளிடம் இதைக் காண்கையில், எப்படி இது சாத்தியம் என்று மண்டையை பிய்த்துக் கொள்கிறோம்.**

# மலேசிய ஹோட்டல் பயிற்சி நெறி கருத்தரங்கும் நேர்முகத்தேர்வும்



(சிகரம்)

மலேசியாவில் வருமானத்துடன் கூடிய ஹோட்டல் பயிற்சி நெறியைத் தொடர்வது தொடர்பான கருத்தரங்கு மலேசியப் பிரதிநிதி ரயனின் பங்கேற்புடன் கடந்த (வெள்ளிக் கிழமை) மற்றும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா தம்பா ஹோட்டலில் நடைபெற்றது.

12இற்கும் மேற்பட்ட மலேசியப் பல்கலைக்கழகங்களை இலங்கையில் பிரதிநிதித்துவப்படுத்தும் சிகரம் ஊடக இல்லத்தின் பணிப்பாளர் கோ.றுஷாங்கன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் 100 இற்கும் மேற்பட்டவர்கள் பங்குகொண்டு பயிற்சிநெறி தொடர்பான விளக்கத்தைப் பெற்றனர்.

மலேசிய அரசாங்கத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் வருமானத்துடன் கூடிய ஒரு ஹோட்டல் தொழிற்துறைப் பயிற்சியைப் பெற்று மலேசிய, பிரித்தானிய அவுஸ்ரேலியச் சான்றிதழ்களைப் பெற முடிவதுடன் பயிற்சி நெறியின் முடிவில் மலேசியா சிங்கப்பூர் அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளில் தொழில்வாய்ப்புக்களையும் பெறக்கூடிய இந்தப் பயிற்சிநெறி பலரது கவனத்தையும் ஈர்த்திருந்தது.

வெறுமனே ஒரு ஏட்டுக்கல்வியாகவன்றி தொழில் வாய்ப்பை உத்தரவாதப்படுத்தும் தொழிற்பயிற்சியாகவும் பயிற்சியின்போதே வருமானத்தைப் பெறக்கூடிய ஒன்றாகவும் பயிற்சிநெறியின் முடிவில் சர்வதேச தரத்திலான சான்றிதழுடன் தொழில்வாய்ப்பையும் வழங்கும் ஒரு திட்டமாகவும் இது அமைந்திருப்பது பலரையும் கவர்ந்தது.

க.பொ.த. சாதாரணதரம் வரையிலும் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெறாதவர்களும் 9ஆம் வகுப்பு வரையில் பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்திருந்தால் இந்தப் பயிற்சி நெறியைத் தொடர முடிவது இந்தப் பயிற்சிநெறியின் ஒரு முக்கிய அம்சமாக அமைந்துள்ளது.

இந்தப் பயிற்சிநெறிக்கான செலவை பயிற்சிக்காலத்திலே கிடைக்கும் கொடுப்பனவின் மூலமே மீண்டும் சம்பாதித்துவிட முடியும் என்பதால் பெற்றோருக்கு எந்தவித சுமையுமின்றி நல்லதொரு தொழிற்சான்றிதழையும் பெற்று தொழில்செய்து பணம் சம்பாதிக்கும் வாய்ப்பைப் பெற முடிவது ஒரு வரப்பிரசாதமே என்று கருத்தரங்கில் கலந்துகொண்ட இளைஞர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

கருத்தரங்கின் நிறைவில் பயிற்சி நெறிக்கு மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகத் தேர்வும் நடைபெற்று தகுதியான மாணவர்களுக்கு அந்த இடத்திலேயே உடனடி அனுமதியும் வழங்கப்பட்டது.

தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமான இந்தக் கருத்தரங்கும் நேர்முகத்தேர்வும் இன்று திங்கட்கிழமையும் யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெறுகின்றதுடன் பயிற்சிக்கான உடனடி அனுமதியும் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# மதுப்பிரியர்களின் அட்டகாசம்; சிரமப்படும் மாணவர்கள்

(கிரு- சிகரம்)

சுன்னாகம் மின்சார நிலையத்திற்கு அருகில் உள்ள கலைவாணி கிராமத்தில் மாலை வேளையில் இடம்பெறும் இளைஞர்களின் அட்டகாசத்தால் அப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகின்றனர்.

கலைவாணி கிராமத்தின் சனசமூக நிலையத்தில் இரவு நேர வகுப்புக்கள் நடைபெறுகிறது இதனை குழப்பும் நோக்குடன் [illegible] இளைஞர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

மாலை 6.00 மணிக்கு சனசமூக நிலையத்திற்கு முன்னாள் கூடும் இளைஞர் கூட்டம் இரவு 7.30 மணி வரை இந்த இடத்திலேயே நின்று கல்வி கற்கும் மாணவர்களுக்கும் வீதியால் செல்லும் பயணிகளுக்கும் இடையூறு விளைவிக்கின்றனர்.

இது தொடர்பில் வீதியில் செல்லும் சிலர் கருத்து தெரிவிக்கும் போது தாங்கள் இவ்வீதியால் செல்லும் போது இளைஞர்கள் நடுவீதியில் நிற்பதாகவும் சற்று விலகி வழிவிட கேட்டால் தாம் என்ன பிடித்தா வைத்திருக்கிறம் இந்த இடைவெளியிற்குள்ளால் செல்லுமாறும் கூறுவதுடன் விலகி நிற்க சொன்னால் சண்டைக்கு வருவதாகவும் கூறுகின்றனர். இதில் அதிகமாக பாடசாலை மாணவர்களே பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்த வீதிகளில் இருக்கும் அயலவர்கள் தாங்கள் இரவு நேரத்தில் இந்த வீதிக்கு வருவதில்லை எனவும் வந்தால் இளைஞர்கள் அட்டகாசம் செய்வதாகவும் அதிகளவான இளைஞர்கள் இரவு நேரத்தில் மது பானம் அருந்திவிட்டு வீதியின் இருமருங்கிலும் இருந்து அட்டகாசம் செய்வதாகவும் குறிப்பிடுகின்றனர்.

இவை தொடர்பில் பலமுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தும் பயன்ஏதும் கிடைக்கவில்லை என ஊர் மக்கள் தெரிவித்தனர்.

இதனால் தற்போது இந்த கிராம மக்களுக்கு பொலிஸ் அதிகாரிகள் மீது இருந்த நம்பிக்கை போயுள்ளது.

தற்போது இவர்கள் மாலை 6 மணிமுதல் இரவு 8 மணிவரை தமது கிராமத்துக்கு பொலிஸ் ரோந்து சேவை மேற்கொண்டு இந்த கிராம மக்களை பாதுகாக்குமாறு கேட்கின்றனர்.

# வெங்காயத்தின் விலை சடுதியாக வீழ்ச்சி



(பிரமிலன் - பகீ- சிகரம்)

திருநெல்வேலி சந்தையில் வெங்காயம் தற்போது விலை 50 ரூபா விலை குறைந்துள்ளது. கடந்த ஒருவாரமாக 150 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட வெங்காயம் (சின்னவெங்காயம்) 50 ரூபாவினால் விலை குறைந்து 100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது இதே வேளை பெரிய வெங்காயத்தின் விலை 140 ரூபாவாகவே விற்பனை செய்யப்பட்டது.

நாட்பட்ட புதிய வெங்காயம் விற்பனைக்கு வந்துள்ளதனாலேயே இவ்வாறு விலைகுறைந்துள்ளதாக குறிப்பிட்ட வியாபாரி ஒருவர் வேறு மாவட்டங்களில் இருந்தும் வெங்காயம் வருவதனாலும் இந்த வெங்காயத்தின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# தரம் 1 இற்கான பாடசாலை அனுமதிக்கு விண்ணப்பம்

(பிரமிலன் - பகீ- சிகரம்)

2013ஆம் ஆண்டு 1ஆம் தரத்தில் மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் தற்போது விற்பன்ன செய்யப்படுகிறது. இந்த விண்ணப்பப்படிவங்கள் யாழ்ப்பாணத்தின் பல வர்த்தகக் கடைகளிலும் 25 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் இந்தப் படிவத்தை ஏராளமான பெற்றோர்கள் வாங்கிச் செல்வதாகவும் விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள கா.பொ.த சாதரணதரப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பப்படிவங்களும் விற்பனை யாவதாகவும் இந்த விண்ணப்பப்படிவங்களை ஜீன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பெற்று விண்ணப்பிக்க முடியும் எனவும் விற்பணையாளர் தெரிவித்தார்.



# வேலை வாய்ப்புச் செய்திகள்

எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றுக்கு ஒரு வருடகணினி அனுபவமுள்ள, யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பெண், உதவி முகாமையாளர் பதவிக்குத் தேவை. நேர்முகத்தேர்வு இன்று காலை 10.00மணிக்கு நடைபெறும். விபரங்களுக்கு: Rajanumaiyal. (pvt) Ltd, Lanka Filling station, No:21, Clock Towen Road, Jaffna.

---

நிறுவனம் ஒன்றிற்கு 40வயதுக்கு மேற்பட்ட AD சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒருவர் தேவை தொடர்புகளுக்கு: 0217201375.

---

ஹோட்டல் ஒன்றில் பணிபுரிய சமையலாளர், (cook),சுத்திகரிபபாளர், Room boys ஆகியோர் தேவை. 20.06.2012 புதன் கிழமை மு.ப 10 மணி தொடக்கம் மாலை 4.00 மணிக்குள் நேரில்வரவும் தொடர்புகளுக்கு: Blue Haven Hotel, 70, Racck Road, Jaffna அல்லது 021 222 9958, 0772208062.

---

யாழ்.நல்லூர் பிரதேசத்தில் உள்ள வெல்டிங் பட்டறைக்கு வெல்டிங் வேலை தெரிந்தவர்களும், பழகவிரும்புவர்களும் தேவை. தொடர்புகளுக்கு: 0773760594.

---

கொக்குவில் திருநெல்வேலிப்பகுதியில் வசிக்கும் 11ஆம் ஆண்டு மாணவிக்கு ICT கற்பிக்க ஆசிரியை தேவை. தொடர்புகளுக்கு: 0777563703, 0213216536.

---

A-32 நாவற்குழி சந்தியில் இருந்து கேரதீவு வரையான வீதி அகலிப்பு பணிகளுக்கு Labour Suppiy ஆட்கள் உடன் தேவை. தங்குமிடம், சாப்பாடு, வைத்தியசேவை வசதி செய்து தரப்படும். தொடர்புகளுக்கு Maga Engineering(pvt)Ltd Cp4, கோயிலாக்கண்டி, நாவற்குழி அல்லது 075 042 5519, 021 320 227

---

மகேந்திரா வாகனத்தின் யாழ்.காட்சியறைக்கு (Royal Mark (Pvt)Ltd) வாகன திருத்துநர்கள் தேவை. தொடர்புகளுக்கு 0212211133, 0773931393.

---

யாழ்.நகருக்கு அண்மையில் அமைந்துள்ள மருந்து, பல்பொருள் விற்பனையகத்துக்கு விற்பனையாளர் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு 0752431018.

---

கணினி அறிவுடைய ஆண்-பெண் பணியாளர்கள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு ஸ்ரீபேப்பர் மாட், இல.388, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம் முன்பாக யாழ்ப்பாணம்.

---

தையல் நிலையத்தில் பணிபுரியக்கூடிய அனுபவம் உள்ளவர்களும், தையல் பழக விரும்புவர்களும் தேவை. தொடர்புகளுக்கு: 0212270119.

---

யாழ்.நகரில் இயங்கும் ஹாட் வெயார்ஸ் கடைக்கு அனுபவமுள்ள வேலையாள் தேவை. தொடர்புகளுக்கு 0774928274, 0774940592.

---

ஸ்ரூடியோ ஒன்றுக்கு பெண் வேலையாட்கள் தேவை. தொடர்புகளுக்கு 124, பலாலி றோட், யாழ்ப்பாணம் அல்லது 077 722 2602, 077 722 2601.

---

ஹற்றன் நஷனல் வங்கியின் HNB அஸ்யூரன்ஸ் பிரிவுக்கு Group Leader, Advicer ஆகிய பணிகள் வெற்றிடமாகவுள்ளது. தகுதியுடையவர்கள் அலன் சிவகுமார் 077 309 8388, அலுவலகம் 021 2226016 என்ற தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும்.

---

P.K.S.B டயர் கடைக்கு அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை. தொடர்புக்கு 077 749 8793.

---

The Phone Zone (pvt) Ld நிறுவனத்திற்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. ரூபா 20 ஆயிரம் முதல் ரூபா 50 ஆயிரம் வரை சம்பளம் வழங்கப்படும். பீல்ட் வேர்க் (ஆண், பெண் ) இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம். தொடர்புகளுக்கு 0719292922.

---

யாழ்.நகரில் உள்ள தனியார் கிளினிக்குக்கு பெண் வேலையாட்கள் தேவை.க.பொ.த(சா.த)இல் சித்தி பெற்ற, யாழ்.நகரில் இருந்து 5கிலோமீற்றருக்குட்பட்ட பிரதேசத்தில் இருக்கும் பெண்கள் தங்களது சுய விபரக் கோவையுடன் எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9 மணிக்கு 514, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு வருகைதரவும். தொடர்புகளுக்கு 077 795 4152.

---

யாழ்.நகரில் இயங்கி வரும் Optimo நிறுவனத்திற்கு 6 மாத கால பயிற்சியுடன் கூடிய ஆட்சேர்ப்பு தொடர்புகளுக்கு 0772151014

---

நெல்லியடியில் இயங்கும் கணினி நிறுவனத்திற்கு Ms Office தெரிந்த இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தொடர்புகளுக்கு: 077 990 6298



# எரியும் விளக்காயினும் தூண்டுகோல் அவசியம்

(கொழும்பு)

மனிதனை மனிதனாக வாழச் செய்வது கல்வி. மனிதனை உருவாக்கும் கல்வியை ஊட்டுவதற்குத் திட்டமிட்டால் மட்டும் போதாது செயற்படுத்த வேண்டும். செயற்படுத்தப்படுகிறதா? என அவதானித்துக் கொள்ளவேண்டும். எரியும் விளக்காயினும் தூண்டுகோல் அவசியம் என பருத்தித்துறை பிரதேசசபையின் எதிர்க் கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி அமைப்பின் வடமராட்சி பிரதேச அமைப்பாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு தாளையடி றோமன் கத்தோலிக்கத் தமிழ்க்கலவன் பாடசாலை யில் அமரர் பேதுறுப்பிள்ளை ஸ்ரனிஸ்லோஸ் ஞாபகார்த்தமாக அவருடைய புலம்பெயர் வாழ் புத்திரர் செல்வம் ஸ்ரனிஸலோஸ் அவர்களின் ஏற்பாட்டில் மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு கடந்த 14 ஆம் திகதி முற்பகல் 11.00 மணியளவில் ஆசிரியை திருமதி ஜெயந்தி சசிதரன் தலைமையில் இடம்பெற்றது. இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

உலக வரலாற்றிலேயே கல்வியால் ஏற்பட்ட புரட்சியே மனித சமுதாயத்தைப் புரட்டிப் போட்டது. அதுதான் அறியாமை இருளை ஓட்டி அறிவு வெளிச்சத்தை ஆண்டான் அடிமையென்ற பேதமினறி அனைவருக்கும் அளித்தது. குருகுலங்களில் பிறந்து, திண்ணைப் பள்ளிகளிலே தவழ்ந்து வந்த கல்வி ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் புதியதோர் வடிவம் பெற்றது.

ஞானிகளாலும் புலவர்களாலும் காவியமாகவும் ஓவியமாகவும் வளர்த்தெடுக்கப்பட்டது. ஏழை செல்வந்தர் என்ற அடிப்படையில் பாடசாலைகள் அமைந்திருந்தமையை மாற்றி பாடசாலைக் கல்வி என்பது ஜாதி, சமய, சமுதாய பொருளாதார அடிப்படையில் வேறுபாடு காட்டாமல் அனைவருக்கும் தரமான கல்வியை வழங்கும் நோக்கத்தின் அடிப்படையில் பள்ளிக்கூடங்களில் மாணவ



மாணவியருக்கு கல்வி கற்கும் தகுநத சூழல் ஏற்படுத்தப்பட்டது.

தரமான கல்வியை வழங்குவது அரசாங்கத்தின் விருப்பமாக இருந்தாலும் இந்தக் கல்வி நடந்துவந்த பாதை கரடு முரடானது. காலத்துக்கு, இடத்துக்கு ஏற்ப முரண்பட்டது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசத்தில் கல்வி ஏழை எளிய மக்களுக்கு எட்டாக் கனியாகவும் செல்வர்களின் செல்லப் பிள்ளையாகவும் சீராட்டி வளர்க்கப்பட்டது. இன்றும் வறிய மாணவர்கள் தொடர்ந்தும் கிராமங்களிலேயே கல்வி கற்று வருவதைக் காண்கின்றோம். எரியும் விளக்காயினும் தூண்டுகோல் அவசியம் என்பதுபோல திறமையான மாணவர்களின் ஆர்வத்தை மேலும் ஊக்கப்படுத்த மாணவர்கள் கௌரவிப்புகள் அவசியம்.

அதனை தாளையடிக் கிராமத்தில் அமரர் பேதுறுப்பிள்ளை ஸ்ரனிஸ்லோஸ் ஞாபகார்த்தமாக அவருடைய புலம்பெயர் வாழ் புத்திரர் செல்வம் ஸ்ரனிஸலோஸ் அவர்கள் வருடந்தோறும் மேற்கோண்டு வருகின்றார்.

அவர்கள் கருணை உள்ளத்துடன் ஆற்றும் உதவியைப் பெற்று மாணவர்களாகிய நீங்கள் மேலும் பயனடைய வேண்டும். நீங்கள் சமூகத்தில் உயர்வடைந்து அதனூடாக அவர்களைப் பெருமையடையச் செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார்.

இங்கு பிரதம விருந்தினராக உரையாற்றிய திருமதி ஆரோக்கியமரிய ஸ்ரனிஸ்லோஸ் தெரிவிக்கையில், துணை வரை இழந்த பின்னரும் எனது பிள்ளைகளை கஸ்டப்பட்டு கல்வியை ஊட்டி வளர்த்தேன்.

அவர்கள் படிக்கும் போது தாம்பட்ட கஷ்டத்தை உணர்ந்தவர்கள். அவர்கள் இன்று திருப்தியாக இருக்கின்றார்கள்.

எனது மகன் இம்மாணவர்கள் கல்வியில் சிறந்து வளர வேண்டும் என்பதற்காக உதவுவதையிட்டு பெருமையடைகின்றேன். நீங்களும் சிறந்தவர்களாக வளரவேண்டும். மற்றவர்களுக்கு உதவ வேண்டும் எனக் குறிப்பிட்டார். இந்நிகழ்வில் முன்னாள் அதிபர் நா.கண்ணதாசன் அவர்கள் கௌரவிக்கப்பட்டதோடு, கௌரவ விருந்தினர்களாக தாளையடி பங்குத்தந்தை ம.ஜேசுரட்ணம், உதவிப்பங்குத் தந்தை அ.ஜஸ்ரின் மற்றும் ஊர்ப் பெரியோர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## அடையாள அட்டை ; கால அவகாசம் நீடிப்பு

(கொழும்பு)

க.பொ.த (சா/த) பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரை மாணவர்கள் அதறகான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியமென ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் ஜகத் விஜேவீர தெரிவித்துள்ளார்.

பாடசாலை அதிபர்களின் ஊடாகவே அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டினார்.

ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி 16 வயது பூர்த்தியடைந்த மாணவர்களுக்கு மாத்திரமே இதன்கீழ் தேசிய அடையாள அட்டை வழங்கப்படுமென அவர் தெரிவித்தார்.

விண்ணப்பங்களை விரைவில் சமர்ப்பிப்பதன் மூலம் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதில் ஏற்படும் தாமதத்தினை குறைத்துக் கொள்ள முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

## நீர் மின் உற்பத்தி 4 சதவீதம் வீழ்ச்சி

(கொழும்பு)

மின் உற்பத்தி நிலையங்களுக்கான நீரேரந்து பகுதிகளில் துரித வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமையினால், நீர் மின் உற்பத்தி 14.8 வீதம் வரை வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மின்சாரசபை குறிப்பிடுகின்றது. இதனால் நாளாந்த மின்சார தேவையில் 85 வீதத்திற்கும் மேற்பட்ட அளவை அனல் மின்சாரம் மூலம் பெற்றுக்கொள்ள நேரிட்டுள்ளதாக மின்சாரசபையின் தலைவரினால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 வருடங்களில் நீர்மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த நீரேரந்து பகுதிகளுக்கு கிடைத்த மிகக் குறைவான மழை வீழ்ச்சி இந்த வருடத்தில் பதிவாகியதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அனல்மின் பாவனை அதிகரித்துள்ளதால், 2010 ஆம ஆண்டுடன் ஒப்பிடுகையில், மின் உற்பத்திச் செலவு 100 வீதத்தால் உயர்ந்துள்ளதாகவும் இலங்கை மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2012 (பழைய பாடத்திட்டம்)

### நேர அட்டவணை

ஆகஸ்ட் 6 ஆம் திகதி திங்கட் கிழமை 8.30 - 11.30 இணைந்த கணிதம் I,

12.30 - 14.30

உயிரியல் I.

12.30 - 15.30 பொருளியல் I, பகுதி I -II, மலாய் I, பேர்சிய மொழி II.

ஆகஸ்ட் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 8.30 -11.30 நாட்டியம் (சிங்களம்) I, நாட்டியம் (பரதம்) I, சங்கீதம் (கீழைத்தேயம்) I, சங்கீதம் (கர்நாடகம்) I, சங்கீதம் (மேலைத்தேயம்).

12.30 - 15.30

உயிரியல் II, பொருளியல II, பகுதி I - I I, மலாய II, பேர்சியமொழி II.

ஆகஸ்ட் 8 ஆம் திகதி புதன்கிழமை 8.30 - 11.30 இணைந்த கணிதம் II, நாட்டியம் (சிங்களம்) II, நாட்டியம் (பரதம்) II, அரபு II.

12.30 - 14.30

விவசாய விஞ்ஞானம் I,

12.30 - 15.30

கிரேக்க உரோம நாகரிகம் I, ருசியன் I.

ஆகஸ்ட் 9 ஆம் திகதி வியாழக்கிழமை 8.30 - 11.30 வணிகக் கல்வி I பகுதி I -II, சித்திரக் கலை I, ஜேர்மன் I, உதுரு I, சீனமொழி I.

12.30 -15.30

சங்கீதம் (கீழைத்தேயம்) II, சங்கீதம் (கர்நாடகம் ) II, சங்கீதம் (மேலைத்தேயம்) II.

ஆகஸ்ட் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 8.30 - 10.30 பௌதிகவியல் I,

8.30 -11.30 வணிகக் கல்வி II பகுதி I -II, சித்திரக் கலை II, ஜேர்மன் II.

14.00 -17.00

சிங்களம் I, தமிழ் I.

ஆகஸ்ட் 11 ஆம் திகதி சனிக்கிழமை

8.30 -11.30

விவசாய விஞ்ஞானம் II, கிரேக்க உரோம நாகரிகம் II, ருசியன் II, உருது II, சீனமொழி II.

12.30 -15.30

மனைப்பொருளியல் I.

ஆகஸ்ட் 13 ஆம் திகதி திங்கட் கிழமை 8.30 - 11.30 பௌதிகவியல் II, சித்திரக்கலை III.

12.30 -15.30

சிங்களம் II, தமிழ் II, இலத்தீன் I.

ஆகஸ்ட் 14 ஆம் திகதி செவ்வாய்கிழமை அளவையியலும் விஞ்ஞான் முறையும் I.

12.30 -15.30

மனைப்பொருளியல் II, இலத்தீன் II.

ஆகஸ்ட் 15 ஆம் திகதி புதன் கிழமை 8.30 - 10.30 இரசாயனவியல் I.

8.30 -11.30 சமஸ்கிருதம் I, கிரேக்கம் I, பிரெஞ்சு I.

12.30 -15.30

அளவையியலும் விஞ்ஞான முறையும் II.

(தொடரும்.....)

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

(வவுனியா)

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தயாலயத்தின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத தெரிவும் எதிர்வரும் 8 ஆம் திகதி பாடசாலையின் ஐயாததரை மண்டபத்தில் தலைவர் ப. தயாபரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

எனவே இப் பொதுக்கூட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் வசிக்கும் தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறும் பாடசாலையின் வளர்ச்சி பற்றிய கலந்துரையாடலிலும் ஈடுபடுமாறு பழைய மாணவர் சங்கத்தினர் கோரியுள்ளனர். (160)



வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நாட்டியப் பேராசான் வேல் ஆனந்தனின் நெறியாள்கையில் உருவான "தாண்டவ உதயம்" என்னும் கீழைத்தேய ஆடற்கதை என்னும் நாட்டிய நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ச.சத்தியசீலன் தலைமையில் திருமறைக் கலாமன்ற கலைத்தூது மன்றத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இந் நிகழ்வில் வடமாகாண சபையின் செயலாளர்கள், யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், மற்றும் பணிப்பாளர்கள் கலைஞர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (02)

சிறப்பாக வீட்டில் கொண்டாடவுள்ளேன். அத்தருணம் நீரும் உமது குடும்பத்தாரும் வருகை தந்து விருந்துபசாரத்தில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு மகிழ்வுடன் அழைக்கின்றேன்.

இவ்வண்ணம்,
ம.றிஸ்மியா.

(17) மேலே குறிப்பிட்ட கடிதம் எந்த நிகழ்விற்காக அழைக்கப்படுகின்றது?

..............................................................................................

(18) இக்கடிதம் யாருக்கு எழுதப்படுகின்றது.

..............................................................................................

(19) யாரால் எழுதப்பட்டது?

..............................................................................................

(20) இந்நிகழ்வு யாருக்குச் செய்யப்படுகின்றது? எப்போது நடைபெறும்?

..............................................................................................

**கீழேயுள்ள பந்தியை நன்கு கவனமாக வாசித்து அதன் கீழேயுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

அரிசி, காய்கறி முதலிய உணவுப் பொருட்களைத் தருபவன் விவசாயி. அவன் வயல், தோட்டம் முதலிய இடங்களில் பயிர் வகைகள் உண்டாக்குகின்றான். விவசாயி மழை பெய்ததும் வயலை உழுகின்றான். பசளையிட்டுப் பண்படுத்தி நெல்லை விதைக்கின்றான். மழை இல்லாத காலங்களில் குளங்களில் இருந்து நீர் பாய்ச்சுவார்கள். யாழ்ப்பாணப் பகுதியில் மழையை நம்பியே நெல் விதைக்கின்றார்கள்.



(21) உணவுப் பொருட்களை விளைவித்துத் தருபவன் யார்?

..............................................................................................

(22) பின்வரும் சொற்களுக்குரிய பன்மைச் சொற்களை எழுதுக.

1. விவசாயி .................................. 2. காய்கறி ..................................
3. வயல் .................................. 4. குளம் ..................................

(23) பின்வரும் சொற்களுக்கு ஒத்த சொல் தருக.

1. விவசாயி ..............................................................
2. வதை ..............................................................

(24) மழை இல்லாத காலங்களில் எங்கிருந்து நீர் பெறப்படுகின்றது?

..............................................................................................

(25) யாழ்ப்பாணப் பகுதி விவசாய மக்கள் எந்நீரை நம்பி நெல் விதைக்கின்றார்கள்?

..............................................................................................

(26) "பசளையிட்டு" என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக.

..............................................................................................

**பின்வரும் சொற்களின் ஆங்கிலக் கருத்தை எழுதுக.**


(27) ஞாயிற்றுக்கிழமை .................................................... (28) கடிதம் ....................................................

**எதிர்ச் சொல் தருக.**

(29) நண்பன் .................................. (31) நன்மை ..................................

(30) இருள் .................................. (32) மகிழ்ச்சி ..................................





T.S. கஜன்

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012


# கல்வி முரசு

வெளியீடு 83



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

(01) பின்வரும் வினாக்களுக்கான சரியான விடையை எழுதுக.

1. 


பஸ்லியா கம்பி ஒன்றை மடித்து சமபக்க முக்கோணியை தரப்பட்டவாறு அமைத்தாள். பின்னர் அதனை விரித்து வட்டமான வடிவத்தை அமைத்தாள் எனின், அதன் சுற்றளவு எத்தனை cm ஆகும்?

..............................................................................................


2. xii, xiv, ix, xxx, viii என்பதை ஏறுவரிசைப்படுத்துக.......................................

3. ஒரு முட்டை ரூபா 6.25 எனின் பத்து முட்டைகளின் விலை என்ன? ..............................

4. நேற்றைக்கு முதல்நாள் சனிக்கிழமை எனில் நாளைக்கு மறுதினம் என்ன கிழமை? ..............................

5. எனது வயது அம்மாவின் வயதில் பங்காகும். எனது வயது 12 வருடம் எனின் அம்மாவின் வயது என்ன?

..............................................................

6. 


மூன்று பக்கமும் சம நீளம் கொண்ட தோட்டத்தை A வழியே பார்த்த போது பத்துத் துண்டுகள் காணப்பட்டதெனின் தோட்டத்தைச் சுற்றி எத்தனை துண்டுகள் காணப்படும்? ..............................................

7. ஒரு கடிகாரத்தின் மணிமுள் நள்ளிரவு 12 மணியிலிருந்து மு.ப.3 மணிக்கு நகரும் போது நிமிடமுள் கடிகாரத்தை எத்தனை முறை சுற்றும்? ..............................................

8. $150 \times 0 \times 2$ இன் பெறுமானம் யாது? ..............................................


9. கனவுரு, சதுரமுகி ஆகிய இரு உருக்களுக்கும் இடையிலான பிரதான ஒத்த பண்புகள் இரண்டு தருக.

..............................................................................................

10. தரம் 5 A இல் 248 பேரும், 5 B இல் 490 பேரும், 5 C. இல் 512 பேரும் இருந்தனர். இவர்கள் மூன்று சம குழுக்களாகப் பிரிக்கப்பட்டால் ஒரு குழுவில் எத்தனை பேர் இருப்பர்?

..............................................................................................

(02) பின்வரும் வரைபை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.



1. மாம்பழங்களை சம தொகையில் விற்பனை செய்த இருவர் யார்?

......................................................................

2. மூவரும் விற்ற மாம்பழங்கள் எத்தனை?

......................................................................

3. பூஜா அதிகமாக விற்ற பழம் எது?

......................................................................

4. பூஜா மொத்தமாக எத்தனை பழத்தை விற்றுள்ளாள்?

......................................................................

5. பூஜாவை விட கிரிஜா எத்தனை அப்பிள் பழங்களை அதிகமாக விற்றுள்ளாள்?

......................................................................

(03) நான் புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கையில் முதலாம் இடத்தைப் பெற வேண்டுமெனப் படித்துக் கொண்டிருக்கின்றேன். நேற்றுப் பாடசாலை விட்டு வீட்டிற்கு வந்தபோது எனக்கு ஒரு அதிசயம் காத்திருந்தது. எனது மாமா வெளிநாட்டிலிருந்து வந்திருந்தார். தொடர்ந்து கதையை எழுவாய், பயனிலை திருத்தமாக அமைத்து நான்கு சொற்களுக்குக் குறையாத 6 வசனங்கள் எழுதுக.

1......................................................................

2......................................................................

3......................................................................

4......................................................................

5......................................................................

6......................................................................

(04)  இவ் உடுத்தொகுதியின் பெயர் யாது?

1. வேட்டைக்காரன் 2. பெருங்கரடி 3. தென்சிலுவை

(05) நீரில் தனது வாழ்க்கை வட்டத்தை ஆரம்பிக்கும் உயிரினங்கள் எவை?

1. மீன், நத்தை 2. தவளை, நுளம்பு 3. ஆமை, முதலை

**பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடைகளைத் தெரிவு செய்து எழுதுக.**

(06) (தபேலா, சல்லரி, கடம், கஞ்சிரா, யாழ், கிட்டார், உடுக்கை)
இவற்றுள் தோற்கருவிகள் எவை?

1.............................. 2.............................. 3..............................

(07)  இவ்வலங்காரத்தின் பெயர் யாது?

......................................................................


(08) மஞ்சள் வர்ணம், நீல வர்ணம் என்பவற்றைக் கலப்பதன் மூலம் பெறப்படும் வர்ணம் எது?

......................................................................

(09) பின்வரும் வீதிக் குறியீடுகள் குறிப்பது,


..............................


..............................


..............................



(10) மின்சுற்றில் எரியக் கூடியவாறு கம்பித் துண்டுகளால் மின்கலத்தையும், மின்குமிழையும் இணைக்கும் படத்தை வரைக.

(11) பின்வரும் பெரியார்களின் பெயர்களைத் தெரிந்து எழுதுக.


..............................


..............................


..............................


..............................

(மகாத்மாகாந்தி, சித்திலெப்பை, சேர்.பொன். இராமநாதன், அநாகரிகதர்மபால, பாரதியார், ஆறுமுக நாவலர், டி.பி. ஜெயதிலக)

**மாலினி தன்னைச் சுற்றி பாடப் புத்தகங்களை எவ்வாறு வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தாள் என்பது கீழே காட்டப்பட்டுள்ளது.**




(12) மாலினிக்கு கிழக்குத் திசையில் உள்ள புத்தகம் எது?

......................................................................

(13) மாலினி தனக்கு எத்திசையில் கணிதப் புத்தகத்தை வைத்துள்ளாள்?

......................................................................

(14) சுற்றாடல் புத்தகம் உள்ள இடத்தில் இருந்து பார்த்தால் மாலினி எத்திசையில் அமர்ந்திருப்பதுபோல் தோன்றும்?

......................................................................

(15) மாலினிக்கு மேற்குத் திசையில் உள்ள புத்தகம் யாது?

......................................................................

(16) விஞ்ஞானப் புத்தகம் மாலினிக்கு எத்திசையில் உள்ளது?

......................................................................

**கீழ்வரும் கடிதத்தினை வாசித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

அன்புள்ள நண்பி றிசானாவுக்கு,

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 25.12.2011 ஆம் திகதி அன்று பிற்பகல் 5 மணியளவில் எனது பிறந்த நாளைச்

### “கலாம் என்றால் கலகம்”

# கருணாநிதியின் கூற்றுக்கு இஸ்லாமிய அமைப்புகள் எச்சரிக்கை

திமுக தலைவர் கருணாநிதி, “கலாம் என்றால் கலகம்” என்று தவறான அர்த்தத்தைக் கூறி இஸ்லாமியர்களின் மத உணர்வுகளை புண்படுத்தி விட்டார் என்று இஸ்லாமிய அமைப்புகளும் பிற அமைப்புகளும் கண்டனம் தெரிவித்துள்ளன.

திமுக தலைவர் கருணாநிதி ஜனாதிபதி வேட்பாளருக்கான ஊடக சந்திப்பில், “கலாம் என்றால் கலகம்” என்று தமிழில் பொருள் உண்டு என்று கருத்து தெரிவித்திருந்தார்.

கருணாநிதியின் இந்த கருத்திற்கு இதுவரை அப்துல் கலாம் பதில் கருத்து தெரிவிக்கவில்லை. அதேசமயம், இஸ்லாமியர்களிடையே கருணாநிதி கூறியது அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.


இதுகுறித்து திராவிட முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் மாநில பொதுச் செயலாளர் இக்பால், வருங்கால ஜனாதிபதி சம்பந்தமாக ஊடகங்கள் கேட்ட கேள்விக்கு அவர் அளித்த பதில் இஸ்லாமியர்களின் மனதை ஈட்டியால் குத்தி கிழித்த வண்ணம் உள்ளது.


ஊடகங்கள் அப்துல்கலாமை சம்பந்தப்படுத்தி கேட்டதற்கு, கலாம் என்றால் “கலகம்”தான் என்று கருணாநிதி கூறியுள்ளார்.

இந்த வார்த்தையை எந்த அகராதியில் இருந்து அறிந்து சொன்னார் என்று தெரியவில்லை. ஒரு வார்த்தையின் பொருள் தெரியாமல் இஸ்லாமியர்களின் மனதை புண்படுத்தும் விதமாக பதில் கூறியுள்ளார்.

இதற்கு உடனே கலாம் மறுப்பு தெரிவிக்க வேண்டும். இதை திராவிட முஸ்லிம் முன்னேற்றக்கழகம் வன்மையாக கண்டிக்கிறது.

தவறும் பட்சத்தில் இஸ்லாமியர்களை ஒன்று திரட்டி தி.மு.க. தலைவர் கருணாநிதியை கண்டித்து வீதியில் இறங்கி போராட வேண்டிய நிலைமை ஏற்படும் என்று அவர் எச்சரித்துள்ளார்.






# கருணாநிதி - ரஜினிகாந்த் திடீர் சந்திப்பு



முன்னாள் முதலமைச்சரும் திமுக தலைவருமான கருணாநிதியை நடிகர் ரஜினிகாந்த் திடீரென சந்தித்து பேசியது மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

திமுக தலைவர் கருணாநிதிக்கு கடந்த 3ஆம் திகதி 89ஆவது பிறந்தநாள் விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. அப்போது அவருக்கு நடிகர் ரஜினிகாந்த் தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்தார்

இந்நிலையில், நேற்று முன்தினம் காலை 10.45 மணிக்கு சென்னை கோபாலபுரத்தில் உள்ள கருணாநிதி வீட்டுக்கு நடிகர் ரஜினிகாந்த் திடீரென கருணாநிதியை சந்தித்து பேசினார்.

அப்போது கருணாநிதிக்கு ரஜினி பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார். இருவரும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தனர். பின்னர் வெளியே வந்த ரஜினியிடம், சந்திப்பு குறித்து நிருபர்கள் கேட்டனர்.

அதற்கு பதிலளித்த அவர், மரியாதை நிமித்தமாக கருணாநிதியை சந்தித்தேன் நாங்கள் வேறு எதுவும் பேசவில்லை என்றார்.

# தனிமாநிலக் கோரிக்கை நிராகரிப்பு

அசாம் மாநிலத்தில் உள்ள பல பிரிவினைவாத அமைப்புகள், மாநிலத்தை 50-50 என்ற அளவில் இரண்டாகப் பிரித்து, தனி “போடோலேண்ட” மாநிலம் உருவாக்க வேண்டும் என, பல ஆண்டுகளாக கோரி வருகின்றன. இதுதொடர்பாக, பல்வேறு போராட்டங்களிலும் ஈடுபட்டுள்ளன.

அதேநேரத்தில், போடா தனி மாநில கோரிக்கையை ஆதரிக்காத, அதே பகுதியில் வசிக்கும் ஒரு பிரிவினர், “போடோலேண்ட்” தனி மாநில கோரிக்கைக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்த பிரச்சினையால், இந்த மாதம் முழுவதும், அசாமில் தினமும் ஏதாவது குழப்பங்கள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. “போடாலேண்ட்” தனி மாநில கோரிக்கையை ஆதரிக்காத பிரிவினர், கவுகாத்தியில் சமீபத்தில் மிகப்பெரிய மாநாடு ஒன்றை நடத்தினர். அந்த மாநாட்டில், தனி மாநில கோரிக்கைக்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.




இந்த மாநாடு நடந்த மறுநாள், “போடோலேண்ட்” தனி மாநில கோரிக்கை ஆதரவாளர்கள், தங்களின் கோரிக்கையை வலியுறுத்தி மிகப்பெரிய போராட்டம் ஒன்றை நடத்தினர். இதனால், ரயில் போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டது.

இதற்கு அடுத்த நாள், ஆந்திர முதல்வர் தருண் கோகாய் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அதில், “மாநிலத்தை இரண்டாகப் பிரிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை” என திட்டவட்டமாகத் தெரிவித்தார். இந்த அறிவிப்புக்கு, அசாமில் அனைத்துபோடோ மாணவர்கள் சங்கத்தினர் (ஏ.பி.எஸ்.யு.) கடும் பதிலடி கொடுத்தனர். அவர் விடுத்த அறிக்கையில், “போடோலேண்ட்” தனி மாநிலம் உருவாக்கப்படும் வரை ஓயமாட்டோம், என்றனர்.

# தொட்டால்சிணுங்கி இலையில் புதிய வகை ஆடை

### மாணவர் சாதனை

தொட்டாச்சிணுங்கி இலையில் புதிய-வகை ஆடை தயாரித்து மாணவர் ஒருவர் சாதனை படைத்துள்ளார்.

கவுகாத்தியில் உள்ள இந்திய தொழில் நுட்ப நிறுவன (ஐஐடி-ஜி) மாணவர் உருவாக்கியுள்ளார். குழந்தைப் பருவத்தில் இருக்கும்போர்து, பலர் தொட்டு விளையாடி இருக்கும் தொட்டால் சிணுங்கி இலைகளுடன் நூலை ஒன்றிணைத்து இத்தகைய ஆடையை உருவாக்கியுள்ளார். விளையாடும்போது அணிவதற்கும், மிக சிக்கலான கால-நிலைகளில் அணிவதற்கும் இந்த உடை மிகவும் ஏற்றது.

உயிரியல் தொழில்நுட்பத்திலான இத்தகையை ஆடையை தயாரித்ததற்காக, ராஜதேஷ் நாத் பார்பூயியா, என்பவரும், கவுகாத்தி இந்திய தொழில் நுட்ப நிறுவனத்தின் வடிவமைப்பு பிரிவு பேராசிரியர் பிரதீப் யம்மியாவரும், சில்வர் டிசைன் விருதை பெற்றுள்ளனர். டிசைனர்களுக்காக, ஐரோப்பிய டிசைன் சங்கம் இத்தாலியின் கோமோ நகரில் ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்ச்சியில் விருது வழங்கப்பட்டுள்ளது. 36 பிரிவு-களில் புதுமையான படைப்புகளை உருவாக்கியுள்ளவர்களும், நிறுவனங்களும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்



தங்களின் தயாரிப்பான “உயிரிஆடை”யானது, தொட்டால் சிணுங்கி தாவரத்துடன் வழக்கமான நூலைச் சேர்த்து உருவாக்கப்பட்டுள்ளது. இது ஒன்றும் அதிக செலவிலானது அல்ல என்கிறார் கவுகாத்தி ஐ.ஐ.டி.யில் இந்த ஆண்டு வடிவமைப்பு பிரிவில் முதுகலைப் பட்டம் முடிக்கும் பார்பூயியா. இந்த ஆடையானது வெளிப்புற சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் மாறும் தன்மை கொண்டது. இந்த வகை ஆடையை அணிபவர், வியர்வையில் நனையா-மல் இருப்பதோடு, ஒட்சிசன் குறைவான இடங்களில், அதை சீர் செய்யும் வகையில், உடலுக்குத் தேவையான ஒட்சிசன் தரும் தன்மையும் கொண்டது என்றும் அவர் மேலும் கூறினார்.

# சட்ட விரோத சுங்க தொழில் எடியூரப்பா குடும்பம் விசாரணையில்

கர்நாடக முன்னாள் முதலமைச்சர் எடியூரப்பா மீது சட்ட விரோதமாக சுரங்க தொழில் நடத்த அனுமதி வழங்கியதாக புகார் உள்ளது. இந்த புகார் குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்தி வருகிறது. முதலமைச்சராக இருந்த போது சட்டவிரோத சுரங்க தொழில் நடத்த அனுமதி வழங்கியதற்கு ஜிந்தால் நிறுவனத்திடம் இருந்து லஞ்சம் பெற்றதாக எடியூரப்பா மற்றும் அவரது குடும்பத்தினர் மீது சுப்ரீம் கோர்ட்டு வழிகாட்டுதல் படி சி.பி.ஐ. வழக்கு தொடர்ந்தது.

இந்த வழக்கில் முன்ஜாமீன்கோரி எடியூரப்பா கர்நாடகா ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்து உள்ளார். இந்த மனுமீ தான விசாரணை இன்று நடக்கிறது. இந்த நிலையில் இது தொடர்பான விசாரணைக்காக ஆஜராகுமாறு எடியூரப்பாவின் மகன்கள் மற்றும் மருமகனுக்கு சி.பி.ஐ. கடிதம் அனுப்பியிருந்தது. இதையடுத்து அவர்கள் பெங்களூர் கங்கா நகரில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் ஆஜர் ஆனார்கள். நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு எடியூரப்பா மகன் ராகவேந்திரா ஆஜர் ஆனார். தனி அறையில் அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது. பகல் 12 மணிக்கு இன்னொரு மகன் விஜயேந்திரா ஆஜர் ஆனார். அவரிடம் தனியாக விசாரணை நடத்தப்பட்டது.

பிற்பகல் மருகன் சோகன்குமார் ஆஜர் ஆனார். அவரிடமும் சி.பி.ஐ. அதிகாரிகள் நீண்ட நேரம் விசாரணை நடத்தினார்கள். ஜிந்தால் நிறுவனத்திடம் உள்ள தொடர்பு, அந்த நிறுவனத்திடம் இருந்து சந்தேகம் அளிக்கும் வகையில் பணம் பெற்றது ஏன்? போன்ற கேள்விகள் கேட்கப்பட்டது. மாலை 4 மணி அளவில் 3 பேரையும் ஒன்றாக வைத்து விசாரணை நடத்தினார்கள். மாலை 5.30 மணி வரை விசாரணை நடைபெற்றது.

இந்த விசாரணை வழக்குக்கு திருப்பு முனையாக அமையும் என்று சி.பி.ஐ. வட்டாரங்கள் தெரிவித்தன.

# மேற்கு வங்கத்தில் கொண்டாட்டம்

ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் ஜனாதி-பதி வேட்பாளராக, பிரணாப் முகர்ஜி அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து, மேற்கு வங்கத்தில் கொண்டாட்டம் களை கட்டியுள்ளது. ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக, காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், மத்திய நிதி அமைச்சருமான பிரணாப் முகர்ஜி அறிவிக்கப்பட்டுள்ளார். ஐ.மு. கூட்டணியில் உள்ள பெரும்பாலான கட்சிகள், பிரணாபுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.


இதுதவிர சமாஜ்வாதி, பகுஜன் சமாஜ் போன்ற கட்சிகளும் அவரை ஆதரிக்கப் போவதாக அறிவித்து விட்டன. இதனால், நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக பிர-ணாப் தேர்வு செய்யப்பட்டு விடுவார் என்ற நம்பிக்கை, காங்கிரசாரிடம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, பிரணாபின் சொந்த மாநிலமான மேற்கு வங்கத்தில், காங்கிரஸ் கட்சியினரும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தங்கள் மண்ணின் மைந்தர், நாட்டின் முதல் குடிமகனாக தேர்வு செய்யப்படுவதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளதால், கொல்கத்தா, ஹவுரா போன்ற நகரங்களில் ஏராளமான காங்கிரஸ் கட்சியினர் வீதிகளில் திரண்டு, இனிப்புகள் வழங்கியும், பட்டாசு வெடித்தும், தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

# அமெரிக்காவிற்கு ஊறு விளைவிக்காத இளைஞர்களுக்கு பணி அனுமதி

## - ஒபாமா அறிவிப்பு

(வொஷிங்டன்)

அமெரிக்கக் குடியுரிமை பெறாமல் அமெரிக்காவிலேயே வாழ்ந்து, கல்வி பயின்ற இளைஞர்கள் தற்காலிக பணி உரிமம் பெற்று தொடர்ந்து தங்கலாம் என ஜனாதிபதி பராக் ஒபாமா உத்தர விட்டுள்ளார்.



சட்டவிரோதமாக அமெரிக்காவில் குடியேறியவர்களை வெளியேற்றவும், குடியுரிமை வழங்கலை முறைப்படுத்தவு மான சட்டத்தை நிறைவேற்றுவதில் தொடர்ந்து தாமதம் ஏற்பட்டுக் கொண்டே வருவதால்,நிச்சயமற்ற நிலையில் வாழும ஆயிரக்கணக்கான இளைஞர்களின் எதிர்காலத்தைக் கருதி இந்த ஆணை யைப் பிறப்பிப்பதாக ஒபாமா அறிவித்துள ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

படித்த, திறமையுள்ள, அமெரிக்கா மீது பற்றும் பாசமும் கொண்ட, அமெ ரிக்க நலனில் அக்கறை காட்டி உழைக் கிற இளைஞர்களை குடியுரிமை இல்லை என்ற ஒரே காரணத்துகாக வெளியேற் றாமல் தொடர்ந்து தங்க தற்காலிகப் பணி அனுமதி வழங்கப்படும்.

அமெரிக்க தேசிய நலனுக்கும் பொது நலனுக்கும் ஊறுவிளைவிக்காத, ஊறு விளைவிக்க நினைக்காத நல்ல இளை ஞரகளுக்கு இந்த அனுமதி வழங கப்படும்.

அமெரிக்க அரசின் குடியேற்றக் கொள்கை நியாயமானது, திறமையானது நடுநிலையானது என்று அனைவரும் பாராட்டும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இது பொது மன்னிப்பல்ல, இது நிரந்தரமும் அல்ல, இது சட்டவிரோத மாகக் குடியேறும் மக்களுக்குக் கேட யமும் அல்ல, இது அமெரிக்கக் குடியுரி மையைப் பெறுவதற்கான குறுக்கு வழியும் அல்ல, இது தாற்காலிக நிவா ரணம்.

நம்முடைய பள்ளிக்கூடங்களில் படித்து, நம்முடைய வீட்டுக்கு அக்கம் பக்கத்து திடல்களில் விளையாடி, நம்முடைய குழந்தைகளுக்கு நண்பர் களாக உறவாடிய இளைஞர்களின் நலன் கருதி எடுக்கப்படும் நடவடிக்கை.

அவர்கள் தங்களுடைய இதயங் களில் அமெரிக்கர்களாகவே வாழ்கின்ற னர். அவர்களுடைய சிந்தையில் அமெரிக்க நலன்தான் இருக்கிறது. அவர்களிடம் இல்லாதது அவர்கள் அமெரிக்கக் குடிமக்கள் என்ற அதிகா ரப்பூர்வமான காகிதம்தான்.

தகுதியும் திறமையும் உள்ள இளை ஞர்களை அமெரிக்காவில் வளர்ந்து உருவானவர்களை நாடு கடத்துவதில் அர்த்தமே இல்லை. அவர்களுடைய பெற்றோர் செய்த தவறுக்காகவோ, முறை யான குடியேற்றச் சட்டத்தை உருவாக் காத அரசியல்வாதிகளின் தவறுக்கா கவோ அவர்களைத் தண்டிப்பது எந்த வகையில் நியாயம் என்று கேள்விகளை எழுப்பினார் ஒபாமா.

## கனவரின் அன்பு வார்த்தையால் இறந்த மனைவி எழுந்த அதிசயம்

பிரித்தானியாவில் 49வயதுடைய பெண் ஒருவர் மாரடைப்பு ஏற்பட்ட நிலையில் மருத்துவ மனையில் அனு மதிக்கப்பட்டார்.


இவர் இறந்து விட்டார் என மருத்து வர்களினால் கைவிடப்பட்ட நிலையில் அவரைப் பார்க்க வந்த ஐம்பத்தி எட்டு வயதுடைய கணவர் அவரைக் கட்டி அணைத்து நான் உன்னை விரும்புகி றேன் என கூறி நெற்றியில் முத்த மிட் டுள்ளார் . அதை அடுத்து இவரது இரு விழிகளும் மெல்ல அசைந்துள் ளன. உடனடியாக மருதுவர்களிற்கு தெரிவிக்கவே அவர் அவசர மருத்து பிரிவில் இணைக்கபட்டு தீவிர சிகிச்சை இடம் பெற்றது .

தற்போது அவர் விழித்து தனது கண வரோடு பேசி வருகின்றார் .

இந்தச் சம்பவம் மருத்துவர்களை, கணவரை மட்டுமல்ல உலக மக் களையே வியப்பில் ஆழ்த்தியுள்ளது

## சுற்றுலாத் தளமாகிய பாறை


கொலம்பியாவில் Guatape என்ற இடத்தில் 650 அடி உயரமும், 10 மில்லியன் தொன் எடையும் கொண்ட El Penon de Guatape என்ற பாறை அமைந் துள்ளது.



கடந்த 1900ஆம் ஆண்டு கண்டுபிடிக் கப்பட்ட இந்தப் பாறையினை 1954ஆம் ஆண்டு ஒழுங்கு செய்யப்பட்டு இதன் உச்சியில் ஒரு கட்டடம் கட்டப்பட்டது.

மேலும் 649 படிகளைக் கொண்டு காணப்படும் இந்தப் பாறை தற்போது சுற்றுலாத் தளமாக மாற்றம் பெற்றது மட்டுமின்றி, அதிகமான சுற்றுலாப் பய ணிகளைக் கவர்ந்துள்ளமை குறிப்பிடத்தக கது.

## பயணிகளை அதிர வைத்த பாம்பு



வியட்னாம் நாட்டில் உள்ள குயாங் னாம் என்ற ஊரில் இருந்து பிங்ஹ்டின்க் என்ற இடத்திற்கு பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது.

இதில் 14 பயணிகள் இருந்தனர். பேருந்து புறப்பட்ட சிறிய நேரத்தில் நச்சுப பாம்பு ஒன்று இருக்கைக்கு கீழ் ஊர்ந்து செல்வதை ஒருவர் பார்த்து கூச்சல் போட்டுள்ளார்.

உடனே ஓட்டுநர் பேருந்தை நிறுத்த பயணிகள் அனைவரும் அலறியடித்து கொண்டு இறங்கினர். பேருந்துக்குள் 6 பாம்புகள் அங்கும் இங்குமாக ஓடிக் கொண்டிருந்தன. பின்னர் ஊர்மக்களும், பயணிகளும் சேர்ந்து 6 பாம்புகளையும் அடித்து கொன்றனர்.

இச்சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதை அடுத்து பொலிஸார் வந்து விசாரணை நடத்தினார்கள். அதில் அடையா ளம் தெரியாத நபர் ஒருவர் நடத்துநரிடம் லக்கேஜ் பணத்தை செலுத்தி ஒரு பையை கொடுத்து அதை பிரபல விடுதியில் ஒப்படைக்கும்படி கூறி இருக்கிறார்.

அந்த பையில் இருந்து தான் நச்சுப்பாம்பு வெளியேறி இருப்பது தெரியவந்தது. பாம்புகள் சேட்டை செய்யாமல் இருக்க அதற்கு போதைமருந்து கொடுத்து வைத்திருக்கிறார். ஆனால் மயக்கம் தெளிந்ததால் அவை பையை கிழித்துக் வெளியே வந்து விட்டன. பயணிகள் பேருந்தில் அபாயகரமான பொருட்களை கொடுத்து அனுப்புவது சட்டவிரோதம் என்பதால் பாம்புகளை அனுப்பிய நபரைப் பொலிஸார் தேடுகிறார்கள்.

## பிலிப்பைன்ஸ் நாட்டில் நிலநடுக்கம்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள மேற்கு கடற்கரைப் பகுதியில் உள்ள லுஷான் தீவில் நேற்று முன்தினம் கடும் நில நடுக்கம் ஏற்பட்டது. இதனால் அங்கு வீடு கள் மற்றும் கட்ட டங்கள் குலுங் கின. காலை 6.18 மணிக்கு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் பீதி அடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ் சம் அடைந்தனர். இந்த நிலை யில் 6.1 ரிக்டர் அளவில் நில நடுக்கம் பதிவானதாக அமெ ரிக்க புவியியல் ஆய்வு மையம் அறிவித்தது.




தலைநகர் மணிலாவின் அருகே 35 கி.மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக தெரி விக்கப்பட்டது. நிலநடுக்கம் கார ணாக கடலில் உயரமான அலை கள் எழும்பின. எனவே சுனாமி ஏற்படும் என மக்கள் அச்சம் அடைந்தனர். ஆனால் சுனாமி எச்சரிக்கை எதுவும் வெளியிடப் படவில்லை.

இவை தவிர உயிர்சேதம், காயம் அடைந்தவர்கள் மற்றும் பொருட்சேதம் குறித்த தகல்கள் எதுவும் வெளியாகவில்லை. லுஷான் தீவில் ஏற்பட்ட நிலநடுக் கம் தலைநகர் மணிலா மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளிலும் உணரப்பட்டது. இதற்கு முன்பு கடந்த பெப்ரவரி மாதம் மத்திய பிலிப்பைன்ஸில் 6.7 ரிக்டர் அள வில் நிலநடுக்கம் ஏற்பட்டது. அதில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 100 பேர் பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

## நயாகரா நீர்வீழ்ச்சியை கடந்த சாகச வீரர்



அமெரிக்காவைச் சேர்ந்த டேர்டிவில் நிக் வேலன்டா என்பவர், முதன் முறையாக நயாகரா நீர்வீழ்ச்சியை கயிற்றின் மூலம் கடந்து புதிய சாதனையை நிகழ்த்தி உள்ளார்.

நிக் வேலன்டா,கயிற்றின் மேல் நடந்து நயாகரா நீர்வீழ்ச்சியை கடக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

அப்போது 1800 அடி உயரத்தில் திடீரென ஏற்பட்ட பனிமூட்டத் தால் தூவறி விழுநதுள்ளார். நயாகராவை கடக்கும் முயற்சியில் ஈடுபட்ட முதல் நபர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இரத்தக்குழாயை சிறுமிக்கு பொருத்தி சாதனை



ஸ்டெம் செல மூலம் இரத்தக்கு ழாயை தயா ரித்து, ஐரோப்பாவை சேர்ந்த 10 வயது சிறுமிக்கு பொருத்தி புதிய சாதனை படைக்கப்பட் டுள்ளது.

ஐரோப்பாவைச் சேர்ந்த 10 வயது சிறுமிக்கு குடல், கல் லீரல் மற்றும் மண்ணீரலில் இரத் தக்கசிவு ஏற்பட்டது. இரத்தக் குழாய் பழுது பட்டதால் இதை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

எனவே சுவீடன் நாட்டின் கோத்தன்பர்க் பல்கலைக்கழக விஞ்ஞானி சுசித்ரா சுமித்ரன் தலைமையிலான குழுவினர், இறந்து போன ஒருவரின் இரத் தக்குழாயை எடுத்து சிறுமியின் எலும்பு மஜ்ஜையிலிருந்து செல் களை எடுத்து, புதிய இரத்தக் குழாயை உருவாக்கினர்.

இந்தக் குழாயை தற்போது சிறுமிக்கு பொருத்தி உயிரை காப்பாற்றியுள்ளனர். மருத்துவ வரலாற்றில் இது ஒரு சாத னையாக கருதப்படுகிறது.

## சவூதி அரேபிய இளவரசர் காலமானார்



சவூதி அரேபியாவின் முடிக்குரிய இளவரசர் நயீவ் பின் அப்துல் அஸீஸ் அல் சௌத் தனது 78 ஆவது வயதில் நேற்று காலமானார். சுவிட் ஸர்லாந்தின் ஜெனிவா நகரில் அவர் காலமானாதாக சவூதி அரசாங்க தொலைக் காட்சி அறிவித்தது.

1975 ஆம் ஆண்டு சவூதி அரேபிய உள்துறை அமைச்சராக அவர் பதவி வகித்து வந்தார். மருத்துவ சோதனை களுக்காக அவர் ஜெனிவாவுக்குச் சென்றிருந்ததாக அறிவிக்கப்பட் டிருந்தது.

கடந்த ஒகடோபர் மாதம் முடிக்குரிய இளவரும் நயீவ்வின் சகோத ரருமான சுல்தான் பின் அப்துல் அஸீஸ் காலமானதையடுத்து முடிக்குரிய இளவரசராக நபீவ் பின் அப்துல்அஸீஸ் நியமிக்கப் பட்டார். சவூதி அரேபிய மன்னராக 2005 ஆம் ஆண்டிலிருந்து அப்துல்லா பதவி வகித்து வருகிறார்.

# தேசிய மட்ட கூடைப்பந்தாட்டம் யாழ். மாவட்ட ஆண்கள் அணி சம்பியன்



(குருநாகல்)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்பட்ட தேசிய மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட ஆண்கள் அணி சம்பியனானது.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் மாவட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட தேசிய மட்டக் கூடைப்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிகள் நேற்றைய தினம் குருநாகல் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

ஆண், பெண் என இரு பாலாருக்குமிடையில் நடைபெற்ற இப்போட்டித் தொடரில் இரு பிரிவுகளிலுமே யாழ். மாவட்ட அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதில் ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியும், காலி மாவட்ட அணியும் மோதின. இப்போட்டியில் யாழ். மாவட்ட வீரர்களின் ஆட்டம் வேகமானதாகவும், விவேகமானதாகவும் இருந்தது.

போட்டியில் ஆரம்பம் முதலே எதிரணிகளின் பலவீனங்களை நன்குணர்ந்து அதற்கேற்ற வகையில் தமது வியூகங்களை யாழ். மாவட்ட அணி வகுத்துக் கொண்டது. போட்டியில் முழு ஆதிக்கம் செலுத்திய யாழ். மாவட்ட அணி 41:29 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று தேசிய மட்ட சம்பியனானது.

இதேவேளை, பெண்கள் பிரிவின் அரையிறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியும், கம்பஹா மாவட்ட அணியும் மோதின. இதில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்திய யாழ். மாவட்ட அணி 52:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறறது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் கொழும்பு மாவட்ட அணியும், யாழ். மாவட்ட அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் கொழும்பு மாவட்ட அணி 67:53 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று தேசிய மட்ட சம்பியனானது.

வடக்கு மாகாண கூடைப்பந்தாட்ட பயிற்றுநர் ரமணனின் நெறிப்படுத்தல் மூலம் யாழ். மாவட்ட ஆண்கள் அணி சம்பியனான அதேவேளை, பெண்கள் அணி இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (93)

## அடிகாயங்களுடன் பெண் வைத்தியசாலையில் அனுமதி

(வடமராட்சி)

தலையில் அடிகாயங்களுக்குள்ளான பெண் ஒருவர் வல்வெட்டித்துறை மருத்துவமனையில் நேற்று சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அல்வாய் வடமேற்கு திக்கத்தைச் சேர்ந்த சதாநாயகி அன்ரன் புதுமைநாயகம் (வயது - 43) என்பவரே தலையில் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (116)

## பரிந்துரைகளை...

வீரதுங்க தெரிவித்துள்ளார்.

வெறும் நன்மதிப்பு அடிப்படையில் நட்பு நாடுகள் ஒத்துழைப்பு வழங்காது எனவும், யதார்த்தமான தன்மையை வெளிப்படுத்த வேண்டியது அவசியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆணைக்குழுவின் எவ்வாறான பரிந்துரைகளை அமுல்படுத்தமுடியும் மற்றும் அவை எவ்வாறு அமுல்படுத்தப்படும் என்பன தொடர்பில் அடுத்த மாதமளவில் ஊடகங்களுக்கு தகவல்கள் வெளியிடப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

## தூதுவரின்...

கவனத்தில் கொள்வதாக வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம தெரிவித்திருந்தார்.

அவரது இந்தக் கருத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு ஊடகம் ஒன்றில் வெளியான நிலையிலேயே கடந்த திங்கட்கிழமை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புரெனிஸ், வெளிவிவகார அமைச்சுக்குச் சென்று வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகமவை சந்தித்தார்.

அவருடன் அமெரிக்கத் தூதரக அரசியல் விவகார அதிகாரி கலாநிதி போல் காட்டரும் உடன் சென்றிருந்தார்.

இதன்போது, மைக்கல் சிசன் குறித்து தெரிவித்த கருத்துக்கு அமுனுகமவிடம் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தார்.

இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரனின் கருத்துக்கும் மைக்கல் சிசனின் கருத்துக்கும் இடையில் எந்த வேறுபாடும் இல்லை என்றும் பற்றீசியா புரெனிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம், மைக்கல் சிசனின் கருத்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் கொள்கைகளுக்கு இசைவானதே என்று, அமெரிக்காவின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் அறிக்கை ஒன்றை அன்று மாலை வெளியிட்டதும் குறிப்பிடத்தக்கது.

## காணி சுவீகரிப்பை...

வடக்கு, பலாலி வடமேற்கு பகுதி மக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்த 22 வருடகாலமாக எங்கள் ஊரையும், வீடுகளையும் உயிர் உடமைகளையும் இழந்து நிர்க்கதியாய் நின்று என்ன செய்வது எங்கு செல்வது என்று தெரியாமல் நிற்கும் மக்கள் கண்ணீரும் கவலையுடனும் உங்கள் மூலமாக ஒரு விடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையிலும் எமக்கு உதவி செய்யுமாறு கேட்டு நிற்கின்றோம்.

நாட்டில் யுத்தம் முடிவடைந்து 3 வருடங்கள் முடிவடைந்த நிலையில் உறவுகளை இழந்து சொத்துக்களை இழந்து உண்ணும் உணவிற்கே கஷ்டப்பட்டு கலங்கி வாழ்கின்றோம்.

இந்த நிலை மாறவேண்டும். மாற்ற வேண்டும் மாற்றித்தர வேண்டும். எமது ஊரில் எங்கள் காணி வீடுகளில் மகிழ்வுடன் சுதந்திரமாக வாழ வழி அமைத்து தருமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

அத்துடன் 1996, 1997, 2004, 2009 இல் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேறி வாழ்கின்ற பொழுது கடல் வளத்திலும் இலங்கையின் 2 ஆவது மீன்பிடித்துறைமுகம், முதலாவது காசநோய் வைத்தியசாலை என்பனவும் உருவாக்கப்பட்டதும் இப்பகுதியில் விவசாய வளத்திலும் உழைப்பின் மூலமும் நாட்டின் வருமானத்தை உயர்த்தி நின்ற எமக்கு எமது ஊருக்கு செல்ல முடியுமா என்ற ஏக்கத்துடன் வாழ்ந்து விரக்தியுடன் இருக்கும் நாம் எமது சொந்தக் காணியில் வீடுகளில் சொந்தமான தொழில் செய்து வாழ வழி செய்வதோடு எமது காணி உறுதிகளையும் வீடுகளையும் ஏற்ற சட்ட நடவடிக்கை மூலம் காணிகளை சுவீகரிக்காமல் நிறுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டனர்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் மகஜரை கையளிக்கப்பட்டவுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ள முடியாது. நீரில் தத்தளிக்கும் மக்களை கரையில் நிறுத்த வேண்டியது எனது பொறுப்பு. மக்கள் அனைவரும் ஒன்று திரள வேண்டும். அவ்வாறு திரண்டு உரிமைகளைக் கேட்டால் தீர்வு கிடைக்கும். முன்னரும் சந்திரிகா அரசாங்கத்தினால் காணி சுவீகரிக்க இருந்த வேளை சந்திரிகா அரசாங்கத்துடன் பேசி காணி சுவீகரிப்பை தடுத்து நிறுத்தினேன்.

அதேபோல் காணி சுவீகரிப்பை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு உங்கள் நம்பிக்கையை தீர்க்க வழி அமைப்பேன் என உறுதியளித்தார். (எஸ்)

# சாட்சி வாக்குமூலம் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலைப் பகுதியில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரை வெட்டியதாக குற்றஞ்சாட்டப்பட்டு கைதுசெய்யப்பட்ட நபரை யாழ். நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதித்துள்ளது.

குறித்த சம்பவத்துடன் தொடர்பு பட்டதாக சந்தேகிக்கப்பட்டு மேற்படி நபர் பொலிஸாரினால் ்கதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவரின் வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது வெட்டப்பட்ட 5 பேரில் காயப்பட்ட ஒருவர் நீதிமன்றத்திற்கு வருகை தந்து குறித்த சந்தேகநபர் தன்னை வெட்டவில்லை என வாக்குமூலம் கொடுத்தார்.

இதனையடுத்தே யாழ். நீதிமன்ற நீதிபதி வெட்டப்பட்ட 5 பேருடன் குறித்த நபர் இருக்கவில்லை எனவும் சந்தேகத்தின் பேரிலேயே பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரிவித்ததையடுத்து குறித்த நபரை 50 ஆயிரம் ரூபா 2 ஆட்பிணையில் செல்ல அனுமதி வழங்கித் தீர்ப்பளித்தார். (எஸ்)

## பொது எதிர்க்கட்சி என்ற...

தற்போது கடைபிடிக்கப்பட்டு வரும் பொருளாதார முறைமைக்கு எதிரான மாற்று பொருளாதாரக் கொள்கை மற்றும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை பிரிக்கும் திசைக்கு இட்டுச் செல்லாமல், அவர்களை ஐக்கியப்படுத்தும் திசைக்கு இட்டுச் செல்லும் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும் பொது சக்தியே தற்போது தேவைப்படுகிறது.

இதற்காக நாட்டில் இணைத்துக் கொள்ளக் கூடிய அனைத்து சக்திகளையும் ஒன்றிணைத்து, ஜே.வி.பி மிகப்பெரிய ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணியை உருவாக்கியுள்ளதாகவும் இதனால் பொது எதிர்க்கட்சிகள் என்ற பெயரில் தற்காலிக தங்குமிடங்கள் அவசியமில்லை எனவும் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

## இலங்கைக்கு...

இதன்போது ஆராயப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் கடந்த மார்ச் மாதக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்தை கியூபா எதிர்த்தமைக்கும், இலங்கைக்கு கியூபா வழங்கி வரும் உதவிகளுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கியூப ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, ஜோஸ் மார்டி நினைவுச் சதுக்கத்துக்குச் சென்ற ஜனாதிபதி அங்கு மலரஞ்சலி செலுத்தியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அமைச்சர்களான அனுர பிரியதர்சன யாப்பா, விமல் வீரவன்ச மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் கியூபா சென்றுள்ளனர்.

## பொது எதிர்க்கட்சி...

கருணாரட்ன, சிறிதுங்க ஜயசூரிய உள்ளிட்ட அரசியல் தலைவர்களுடனும், வெகுஜன அமைப்புகளுடனும் பொன்சேகா எதிர்காலத்தில் நேரடியாகப் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

பொது எதிர்க்கட்சிக்காக சரத் பொன்சேகா அண்மையில் வெளியிட்ட கொள்கை தொடர்பாக அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்துதல், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்தல், ஊழல், மோசடிகளை நிறுத்துதல், 18 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தை இரத்துச் செய்து விட்டு, 17 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தை மீள அமுல்படுத்தி சுயாதீன ஆணைக்குழுக்களை மீண்டும் வலுப்படுத்துதல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும் என்பதே அரசாங்கத்தில் உள்ள பல நாடாளுமன்ற உறுப்பினர்களின் தேவையாக உள்ளது.

இந்த பொது எதிர்க்கட்சியில் ஜனநாயக தேசியக் கூட்டணியும் உள்ளடங்குவதாக ஜயந்த கொட்டகொட மேலும் தெரிவித்துள்ளார்.

## அச்சுவேலி...

பணிபுரிந்துவிட்டு வீடு செல்லும் பொழுது, வீதியில் வைத்து இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

பின்னர் இவர், லெஸ்டர் றோயல் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக நொட்டிங்காம் குயின்ஸ் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். அங்கும் சிகிச்சை பயனளிக்காத பட்சத்தில் நேற்று முன்தினம் காலை மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக முதல்கட்ட விசாரணையின் போது 13,14 மற்றும் 15 வயதுடைய சிறுவர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், கைது செய்யப்பட்ட சிறுவர்கள் ஆரம்பத்தில் தாக்கப்பட்ட குற்ற வழக்காக இருந்தபோதிலும், இப்பொழுது கொலை வழக்காக பதிவு செய்யப்பட்டு விசாரனைகள் மேலும் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

## காணி, பொலிஸ்...

முடியும். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பெரும்பான்மையான பரிந்துரைகளை எந்தவிதமான சிக்கல்களும் இன்றி அமுல்படுத்த முடியும்.

அரசாங்கமே உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவினை நிறுவியது. எனவே பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடர்பில் அரசாங்கத்திற்கு சிக்கல்கள் இருக்காது.

சகல இன மக்களினாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய விரிவான அதிகாரப்பரவலாக்கமே பிரச்சினைக்கு காத்திரமான தீர்வாக அமையும் எனவும் புத்திக்க பத்திரண சுட்டிக்காட்டியுள்ளார்.

# மீள் குடியேறவுள்ள மக்களிடம் உடைமைகள் கையளிப்பு

யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் இருப்பிடங்களை விட்டுச் சென்றவர்களின் கடைகள் சிலவற்றையும் மீள் குடியேற்றத்திற்கான காணிகளையும் அடுத்த வாரமளவில் உரிமையாளர்களுக்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் மீள் குடியேற்றத்திற்கான காணிகளும், கடைகளும் மீள ஒப்படைக்கப்படவுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்.

இதன் பிரகாரம் கிளிநொச்சி நகரில் 22 கடைகள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதுடன் திருமுறிகண்டி பிரதேசத்தில் 147 குடும்பங்களுக்கு மீள்குடியேற்றத்திற்கான காணிகளும் வழங்கப்படவுள்ளதாக இராணுவ பேச்சாளர் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி நகரம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டதை அடுத்து இராணுவத்தினர் அந்த பிரதேசத்தில் பாதுகாப்புக் கடமைகளுக்காக நிலைகொண்டிருந்தனர்.

எனினும், தற்போது நிலவுகின்ற அமைதியான சூழ்நிலையின் கீழ் கட்டம் கட்டமாக மக்களின் உடைமைகளை மீள ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இராணுவ பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

## சபாநாயகருக்கான அதிகாரம் அதிகரிக்க சட்டத்திருத்தம்

சபாநாயகருக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கும் வகையில் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சபாநாயகருக்கு தற்போது இருக்கும் அதிகாரங்கள் போதுமானதாக இல்லை எனக் குறிப்பிடப்படுகிறது. நாடாளுமன்றின் ஒழுக்கம் மற்றும் சம்பிரதாயங்களை தொடர்ந்தும் பேணும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றில் ஒழுக்கயீனமான சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. முன்னாள் சபாநாயகர்கள், நாடாளுமன்ற பொதுச் செயலாளர்கள் போன்றோரின் ஆலோசனைகளுடன் புதிய சட்டங்கள் இயற்றப்பட உள்ளன.

சபாநாயகரின் அதிகாரத்தை அதிகரித்து அதன் மூலம் நாடாளுமன்றின் ஒழுக்கத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது

## வருடாந்தம் 700 பேருக்கு நீரிழிவால் கால் அகற்றல்

(கொழும்பு)

நீரிழிவு நோய் காரணமாக வருடாந்தம் 700 இற்கும் அதிகமானவர்களின் கால்கள் அகற்றப்படுவதாக தேசிய நீரிழிவு மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

நாட்டின் சகல பகுதிகளிலும், நீரிழிவு நோயால் பாதிப்படைந்தவர்கள் உள்ளதாக அந்த நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

கட்டுப்பாடின்றி உணவு உட்கொள்ளுதல், மருத்துவ ஆலோசனைகளை பின்பற்றாமல் செயற்படுவது ஆகியனவே, நீரிழிவு நோய் அதிகரிப்பதற்கான முக்கிய காரணம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய கருத்துக் கணிப்புக்களுக்கு அமைய நான்கு பேரில் ஒருவருக்கு நீரிழிவு நோய் காணப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமையானது, 30 வருடங்களுக்கு நீடிக்குமானால், இந்த நோயானது இரண்டு பேரில் ஒருவருக்கு என்ற கவலை தரும் நிலையை அடையும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஓய்வின்மை, மாப்பொருள் சீனியுடனான உணவு வகைகளை அதிக அளவில் உட்கொள்ளுதல், புதிய பழம் மற்றும் மரக்கறி வகைகளை உட்கொள்ளாமை, தேவையற்ற உணவுகளை உட்கொள்ளுதல் போன்ற முறைமைகள் காரண மாகவே இந்த நோய் அதிக அளவில் பரவுவதாக மத்திய நிலையம் எச்சரித்துள்ளது.

## கிழக்குத் தேர்தலில் அரசை தோற்கடிப்பதற்கு சதி

### அமைச்சர் குரே குற்றச்சாட்டு

விரைவில் நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபை தேர்தலில் அரசாங்கத்தை தோற்கடிப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன என சிறு கைத்தொழில் ஏற்றுமதி ஊக்குவிப்பு அமைச்சர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

இதன் ஒரு அங்கமாகவே முஸ்லிம்கள் மத்தியில் அரசாங்கத்தைப் பற்றிய தவறான அபிப்பிராயங்களைத் தோற்றுவிக்கின்றனர். இதன் மூலம் அரசாங்கத்துக்குக்கு எதிராக முஸ்லிம்களை திசை திருப்ப முயற்சிக்கின்றனர்.

இதன் மூலம் அடுத்த மாகாண சபைத் தேர்தலில் அரசாங்கத்தை தோற்கடிப்பதற்கு சில தீய சக்திகள் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

திருகோணமலை மாவட்டத்திற்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த அமைச்சர் ரெஜினோல்ட் குரே கிண்ணியா பிரதேச சபையில் இடம்பெற்ற ஊடகவியவியலாளர் மாநாட்டிலும் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்வாறு கூறினார்.

அத்துடன், மூதூர் - 64ஆம் கட்டை பிரதேசம் தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களத்துக்கு உரிய பகுதியாகும். குறித்த பகுதியில் எந்தவொரு மதத்தினரும் வழிபாட்டுத் தளங்களை அமைப்பதற்கு அரசாங்கம் அனுமதியளிக்காது என அமைச்சர் தெரிவித்தார்.

## மூன்று அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர் நியமனம்

(கொழும்பு)

மூன்று அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்களை நியமிக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

இதன்படி கல்வி அமைச்சின் புதிய செயலாளராக கோத்தாபய ஜயரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்வி அமைச்சின் செயலாளராக இருக்கும் எச்.எம். குணசேகர தொலைத்தொடர்புகள் தகவல் தொழிநுட்ப அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் பொறியியல், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சின் பதில் செயலாளராக கே. டபிள்யு.பி.தயாரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 19ஆம் திகதி அமலுக்கு வரும் வகையில் இவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

## இன்று தேர்த்திருவிழா

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்த நயினார் ஆலய தேர்த்திருவிழா இன்று பகல் 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

காலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து காலை 10.00 மணிக்கு தேர்த்திருவிழாவும், நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு தீர்த்தோற்சவத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (104)

## கும்பாபிஷேகம்


(பூநகரி)

பூநகரி கொல்ல குறிச்சி கந்தர்வளவு பிள்ளையார் கும்பாபிஷேக நிகழ்வு எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 6.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

சிவஸ்ரீ அ.அர்த்தனாரீஸ்வரக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகக் கிரியைகள் நடைபெறவுள்ளதெனவும், எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு நாளை மறுதினம் காலை தொடக்கம நடைபெறுமென ஆலய பரிபாலன சபையின் தலைவர் செ.துரைசிங்கம் தெரிவித்தார். (112)

## சரத் பொன்சேகாவுக்கு வரையறுக்கப்பட்ட மன்னிப்பு

(கொழும்பு)



முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு வரையறுக்கப்பட்ட மன்னிப்பு வழங்கப்பட்டமை அவரை அரசியலுக்கு தகுதியற்றவர் என காண்பிக்கவே என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

வெள்ளைக்கொடி வழக்கில் சரத் பொன்சேகாவிற்கு முழுமையான விடுதலை வழங்கப்பட்டு ஹைகோப் வழக்கில் அரைகுறை விடுதலை வழங்கப்பட்டுள்ளமை இதற்கு சிறந்த உதாரணம் என சரத் என் சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

ஸ்ரீஜயவர்த்தனபுர கோட்டேயில் இடம்பெற்ற 'ஜெனரலுக்கான இராணுவத்தினர்' என்ற ஒன்றியத்தின் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகாவிற்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டமை அரசியல் நோக்கம் கருதியே என குறிப்பிட்டுள்ள அவர், பூரண விடுதலை வழங்கப்பட்டால் சரத் பொன்சேகாவிடம் இருந்து பறிக்கப்பட்டுள்ள அரசியல் உரிமை அவருக்குக் மீளக் கிடைக்கும்.

இலங்கையில் நீதி சாதாரணமாக செயற்படுத்தப்படுகிறதா என கேள்வி எழுப்பியுள்ள முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டமை குறித்து தாக்கல் செய்யப்பட்ட மனு இது வரை விசாரணைக்கு எடுத் துக் கொள்ளப்படாமை நாட்டில் சட்டம் நடைமுறையில் உள்ளதா என கேள்வி எழுப்பச் செய்வதாகத் தெரிவித்துள்ளார்.

அந்த மனு இதுவரை விசாரணைகு எடுத்துக் கொள்ளப்படாமை அரசியல் யாப்பு மற்றும் மனித உரிமை மீறும் செயல் என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா குறிப்பிட்டுள்ளார்

## புலிகளின் செயற்பாடுகள் பெல்ஜியம் கவனமாகவுள்ளது

விடுதலை புலிகளின் செயற்பாடுகள் தொடர்பில் பெல்ஜிய அரசு தொடர்ந்தும் கவனமாக இருக்கும் என தெரிவித்துள்ளது.

பிரியாவிடை பெற்றுச் செல்லவுள்ள பெல்ஜியத்திற்கான இலங்கைத் தூதுவர் ரவீநாத் ஆரியசிங்கவை சந்தித்த போதே பெல்ஜிய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் டிர்க் ஆஸ்டின் மேற்கண்டவாறு தெரிவித்தார் என பிரஸல்ஸிலுள்ள இலங்கை தூதுவராலயம் குறிப்பிட்டுள்ளது.

பெல்ஜிய வெளிவிவகார அமைச்சின் செயலாளரை மேற்கோள்காட்டி தூதுவராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையில் [illegible]லும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை வரவேற்றுள்ள பெல்ஜியம், அதில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளை அமுல்படுத்த இலங்கை அரசாங்கத்தை ஊக்குவித்துள்ளது.

அத்துடன் நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளில் தொடர்சியாக இலங்கை ஈடுபடும். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ள பெல்ஜியம் உதவும் எனவும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இந்தியப் பிரதமர் மன்மோகனை சந்திக்கவுள்ளார் ஜனாதிபதி

ஜெனிவாவில் கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்த பின்னர் முதல்முறையாக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்தித்துப் பேசவுள்ளார்.

லொஸ் காபோஸ் நகரில் இடம்பெறவுள்ள ஜி-20 மாநாட்டின் போதே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டில் பங்கேற்கும் பெரும்பாலும் எல்லாத் தலைவர்களையும் மன்மோகன்சிங் சந்திக்கவிருப்பதால், அவரது நிகழ்ச்சி நிரல் இறுக்கமான தாகவே உள்ளது.

இதனால் நீண்டநேரம் விவாதிக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் இந்தச் சந்திப்பில் விவாதிக்கப் படாது.

எனினும் இந்தச் சந்திப்பு இந்திய - இலங்கை அரசுகளுக்கு இடையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக இருந்து வரும் பிரச்சினைகளுக்கு முடிவு காணும் வாய்ப்பை ஏற்படுத்துமென புதுடில்லித் தகவல்கள் கூறுகின்றன.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் கடைசியாக 2010 ஆம் ஆண்டிலேயே இருதரப்பு உறவுகள் பற்றிய சந்திப்புகளை நடத்தியிருந்தனர்.

## மானிப்பாய் வீதியில் விபத்து

(மருதனார்மடம்)

மருதனார்மடம் மானிப்பாய் வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானார்.

உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த சிவசோதிராஜா (வயது 39) என்பவரே காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். (எஸ்)

## வாள் வெட்டு

(யாழ்ப்பாணம்)

களவாக தேங்காய் பிடுங்கிய இளைஞனை மறித்த வருக்கு வாள் வெட்டு விழுந்துள்ளது. கல்வியங்காடு, ஆனந்தபுரம் செம்மணி வீதியில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்ற சம்பவத்தில் நாகமுத்து நவரத்தினம் (வயது-52) என்பவர் வாள் வெட்டில் காயமடைந்த நிலையில் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூன் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.